விலை : 20.00 website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 05 வெள்ளிக்கிழமை (18.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 090

# ‘எதிர்ப்புக்கள் எல்லாம் கானல் நீரே’

## எதிரணி பொதுக் கூட்டத்தில் மகிந்த கர்ச்சிப்பு





(கொழும்பு)

எனது குடும்பத்தினரை ஒவ்வொருவராக சிறையில் அடைப்பதன் மூலம் ராஜபக்ஷவினரை அரசியலிலிருந்து இல்லாதொழித்து விடலாம் என எவரேனும் நினைத்தால் அது வெறும் கானல் நீரே என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விசாரணைகள்; கைதுகள்; சிறையில் அடைப்புக்கள் என்பவற்றுக்கு அஞ்சி தாம் ஒருபோதும் அரசியலை விட்டு விலகி ஓடப்போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சிப்பாயை காட்டுக்குள் உதைத்துக் கொன்றவர் கோத்தா!

### பொன்சேகா பரபரப்பு குற்றச்சாட்டு



(கொழும்பு)

கோத்தாபய ராஜபக்ஷ இராணுவத்தில் பணியாற்றிய போது, இராணுவச் சிப்பாய் ஒருவரின் மரணத்துக்கு காரணமாக இருந்தார் என அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

கோத்தாபய ராஜபக்ஷ கஜபா றெஜிமென்ட் 23ஆம் பக்கம் பார்க்க....

## என்னைக் கொல்ல முயற்சித்த புலி உறுப்பினரை விடுவியுங்கள்

### ஜனாதிபதியிடம் பொன்சேகா கோரிக்கை



(கொழும்பு)

தன் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்த உதவியவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 23ஆம் பக்கம் பார்க்க....

## நாமலிடம் நேற்று குற்ற விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ பாரிய நிதிகுற்ற விசாரணைப் பிரிவில் நேற்று ஆஜராகியுள்ளார்.

இந்தியாவின் பிரபல நிறுவனம் ஒன்று கொழும்பில் நிர்மாணித்த இல்லம் மற்றும் கடைத் தொகுதி தொடர்பில் ஆரம்ப அனுமதியை பெற்றுக் கொடுக்க ஏற்படுத் 23ஆம் பக்கம் பார்க்க....

### சுன்னாகம் நீர்மாசு வழக்கில்

## மத்திய தேசிய நீர்வழங்கல் சபையின் பொறுப்பதிகாரிக்கு நீதிமன்று பிடியாணை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் நீர் மாசு வழக்கில் மத்திய தேசிய நீர்வழங்கல் சபையின் பொறுப்பதிகாரியை கைது செய்யுமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

வடக்கு மாகாண பொலிஸ்மா அதிபர் ஊடாக குறித்த பொறுப்பதிகாரியை கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு மன்று கட்டளையிட்டுள்ளது.

மேலும் குறித்த பிரதேச தண்ணீரினை குடிக்கலாமா? இல்லையா? என்பது தொடர்பில் இருவாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேசிய சுற்றுச்சூழல் அதிகார சபைக்கு மன்று உத்தரவிட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங் 24ஆம் பக்கம் பார்க்க....

## மாற்றங்கள் பல ஏற்பட்டிருந்தாலும் இராணுவம் இருப்பது பிரச்சினையே

### அவுஸ். தூதுவரிடம் விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

மாற்றங்கள்பல ஏற்பட்டிருந்தாலும, தொடர்ந்தும் இராணுவம் வடக்கில் இருப்பது, எமக்கு பிரச்சினையாக இருக்கின்றது என அவுஸ்திரேலிய தூதுவரிடம் தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கிற்கு உதவி செய் 23ஆம் பக்கம் பார்க்க....






## அதிக செலவில் கவர்ச்சிப் பொருட்களுடன் தரம் குறைந்த வீட்டை நிர்மாணிப்பது ஏன்?



### விக்னேஸ்வரன் சாடல்

(யாழ்ப்பாணம்)

இருபத்து மூன்று இலட்சத்தில் மூன்று வீடுகள் சாதாரணமாக கட்டக் கூடிய சூழலிலும் வடக்கு மாகாணத்தில் இன்னமும் எத்தனையோ ஆயிரம் பேருக்கு வீடுகள் தேவைப்படும் நிலையிலும் அதிக செலவில் கவர்ச்சிப் பொருட்களை கொண்டு குறைந்த தரம் கொண்ட வீட்டினை அமைப்பது 24ஆம் பக்கம் பார்க்க....

## ஜீ-7 மாநாட்டிற்கு ஜனாதிபதிக்கு அழைப்பு

(கொழும்பு)

ஜீ-7 மாநாட்டில் பங்கேற்பதற்கு இலங்கை ஜனாதிபதி ஒருவருக்கு முதன்முறையாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜேர்மனியில் எதிர்வரும் 24ஆம் பக்கம் பார்க்க....

## உதவியாளர் தேவை

SOND அலுவலகத்திற்கு துப்பரவுப் பணி, தேநீர் தயாரிப்பு மற்றும் பணிகளுக்கு உதவிட சுறுசுறுப்பான இளம்பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

**தொடர்பு:-18/10 வைமன் வீதி, (எடிசன் அக்கடமி அருகில்) நல்லூர்.**

(3922) **கைபேசி:-0772242401**

## திட்டப்பணிப்பாளர் தேவை

NGO களில் 3 வருட கள அனுபவம், திட்டமுகாமை போன்ற அனுபவங்களுடன் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

Email:Sondjaffna@gmail.com

கைபேசி:-0772242401

தொடர்பு:-18/10 வைமன் வீதி, (எடிசன் அக்கடமி அருகில்) நல்லூர்.

(3922)

WESTERN UNION MONEY TRANSFER

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

(இ-4041)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-0212225392


## மூக்கு கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச வைத்தியசாலையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியமும், சமூக சேவைப் பகுதியினரும், இணைந்து ஏற்பாடு செய்துள்ள இவ்மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

இதில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபாலி பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.(இ-60)


## யாழ்ப்பாணம்-நீர்வேலி

அருள்மிகு அரசகேசரிப் பிள்ளையார் கோவில்

**விஷேட பூசை, அன்னதானம்**

(3927)

மெய்யடியார்களே!

நிகழும் மங்கலகரமான மன்மத வருடம் பங்குனி மாதம் 6-ம் நாள் (19.03.2016) சனிக்கிழமை பகல் 10 மணி விஷேட பூசை, அன்னதானம் நடைபெறும்.

நீர்வேலியை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்டு கடந்த 07.03.2016 திங்கட்கிழமை சிவராத்திரி தின இரவு சிவபதமடைந்த சாம்பசதாசிவக் குருக்கள் பாலச்சந்திர சர்மாவின் ஆத்மா சாந்தியை முன்னிட்டு இவ்விஷேட பூசை நடைபெறுகின்றது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தேவஸ்தான குரு,**
**பரிபாலன சபையினர்.**

## யா/ இணுவில் இந்துவின் வாழ்த்துக்கள்

செல்வி செ. கலாவல்லி - சங்கீதம்

(BA, PGDE, M.A)

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31வது பட்டமளிப்பு விழாவில் பண்பாட்டியலில் முதுகலைமாணி பட்டம்)

திரு. எஸ். பாஸ்கரன் - உப அதிபர்

(BA (HONS), Dip.in.Edu, M.Ed)

ஆசிரிய ஆலோசகர் (சமூக விஞ்ஞானம்) வலிகாமம் வலயம்



(3930)

யா/ இணுவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் குழாத்தில் இருந்து பட்டம் பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பாடசாலைச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம் - யா/இணுவில் இந்துக் கல்லூரி

## மீண்டும் ஸ்ரீதேவி வில்லிசைக்குழு



(10.07.2016 வரை)

உங்கள் ஆலய திருவிழாக்களில் அழைத்து மகிழுங்கள்

தொடர்பு-வில்லிசை சக்கரவர்த்தி

**கலைமாமணி Dr.S.S.குருஜீ**

T.P:-0757428011, 0770891891

**நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில்.**

(3928)

## சேவை நலன் பாராட்டு

### திரு. வடிவேலு நடராசா

மு/ முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 01 அதிபராக அரும்பணியாற்றி இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. வடிவேலு நடராசா அவர்களை அகவை 60இல் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



(C-4044)

**சேவை விபரம்**

1. மு/ ஒலுமடு அ.த.க பாடசாலை 21.04.1982 - 31.04.1982 (ஆசிரியர்)
2. மு/ கரிப்பட்டமுறிப்பு அ.த.க பாடசாலை 01.05.1982 - 14.01.1983 (ஆசிரியர்)
3. மு/ வற்றாப்பளை ம. வித்தியாலயம் 15.01.1983 - 31.12.1985 (ஆசிரியர்)
4. யா/ பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை 31.12.1986 - 31-12-1987 (ஆசிரியர்)
5. மு/ முல்லைத்தீவு ம.வித்தியாலயம் 01.01.1988 - 31.01.1994 (ஆசிரியர்)
6. மு / கள்ளப்பாடு அ.த.க பாடசாலை 01.02.1994 - 31.12.2003 (அதிபர்)
7. மு/ கலைமகள் வித்தியாலயம் 01.01.2004 - 31.12.2006 (அதிபர்)
8. மு/ தண்ணீருற்று சீ.சி 01.07.2007 - 31.12.2007 (அதிபர்)
9. மு/ முள்ளியவளை தமிழ் வித்தியாலயம் 01.01.2008 - 18.03.2016 (அதிபர்)

பாடசாலை சமூகம் : மு/ முள்ளியவளை தமிழ் வித்தியாலயம்

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 09.02.1951

ஆண்டவன் அடியில் 18.03.2006

## அமரர் அருமைநாயகம் ஆமோஸ்

(ஆமோஸ் மில் உரிமையாளர்)

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம்குல விளக்கே
எம் வாழ்வில் ஒளி விளக்கேற்றிய அப்பாவே
எங்கள் வாழ்வில் எத்தனை கோடி இன்பங்கள்
இருந்தாலும் அது அத்தனையும் நீங்களாகுமா அப்பா
பத்து ஆண்டுகள் என்ன பத்தாயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவுகள்
பசுமையாக எம்மனங்களில். எப்போதும்
எம் மனதில் உம்மை தெய்வமாகப்
சுமந்து நிற்போம்.

(3992)

56/12 ஆமோஸ் மில்
தர்மபுரம், பரந்தன்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# வடக்கு, கிழக்கு இணைப்பை நாம் அனுமதிக்கமாட்டோம்

## மு.கா.தலைவர் ஹக்கீம் முரண்பாடு



மூன்று தசாப்தமாக நீடிக்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு, கிழக்கு இணைப்பை முன்மொழிந்தால், முஸ்லிம்களுக்கும் தனி மாகாணம் வழங்கப்பட வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அதேவேளை ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் முஸ்லிம்களின் பிரச்சினை அணுகப்படாத வரையில் வடக்கு, கிழக்கு இணைப்பை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் முஸ்லிம்களுக்கு தனி மாகாணம்அமைக்கும்யோசனை ஒன்றும் புதியது அல்ல.

1957இல் திருகோணமலையில் நடந்த மாநாட்டில், 1977ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், பல்வேறு தமிழ்த் தேசியத் தலைவர்களால் இது முன்மொழியப்பட்டது. செல்வநாயகம் தீர்விலும் கூட இது ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களைப் புறக்கணித்து விட்டு, இனப்பிரச்சினைக்கு தமிழ்த் தேசியத் தலைவர்களால் நிரந்தரமானதீர்வைக்காணமுடியாது.

வடக்கு,. கிழக்கு மாகாணங்கள் இந்திய- இலங்கை உடன்பாட்டின் கீழ் 1987ஆம் ஆண்டு ஒரே ஒரு ஆண்டுக்கு என்று மட்டுமே தற்காலிகமாக இணைக்கப்பட்டது.

முஸ்லிம்களின் அபிலாஷைகளை கருத்தில் கொள்ளாமல் அந்த இணைப்பு 24 ஆண்டுகளுக்கு நீடித்தது. இது தொடர்பாக கருத்துக் கணிப்பும் நடத்தப்படவில்லை.

இந்தப் பிரச்சினைக்கு ஒரே இரவில் தீர்வைக் காண முடியாது.

வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது இந்த இரு மாகாணங்களில் உள்ள மக்களில் மாத்திரம் தங்கியுள்ள விடயமல்ல.இலங்கையில் வாழும் அனைத்து மக்களிலும் தங்கியுள்ளது.

சிலர் வடக்கு, கிழக்கு இணைப்புத் தொடர்பாக குறுகிய அரசியல் நலன்களுக்காக கருத்து வெளியிடுகின்றனர்.ஆனால் இது இராஜ தந்திர ரதியாக அணுகப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

### மத்திய மாகாணத்தின் புதிய ஆளுநராக நிலுக்கா

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் புதிய ஆளுநராக நிலுக்கா ஏக்கநாயக்க, ஜனாதிபதி முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

கடந்த 14ஆம் திகதி மத்திய மாகாண ஆளுநராக இருந்த சுராங்கனி எல்லாவல சுகயீனம் காரணமாக காலமானதைத் தொடர்ந்தே இவரது வெற்றிடத்திற்கு நிலுக்கா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, நிலுக்கா ஏக்கநாயக்க ஒரு பத்திரிகையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

### அதிகாரிகளின் அலட்சியமே மின்சார தடைக்கு காரணம்

அண்மையில் நாடு முழுவதும் ஏற்பட்ட மின்சாரத் தடைக்கு அதிகாரிகளின் அசமந்தமே காரணம் என்று நேற்று முன்தினம் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெடிப்புக்குள்ளான மின்மாற்றியை பழுதுபார்க்க வேண்டும் என்று அதன் கண்காணிப்பு பொறியியலாளர் ஒரு வருடத்துக்கு முன்னரே மின்சார சபை பொதுமுகாமையாளருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

எனினும் வெடிப்புக்குள்ளாகும் வரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அத்துடன் மின்மாற்றிகள் பழுதடையும் அவசர தருணங்களில் பயன்படுத்தத்தக்க மாற்று மின்மாற்றி கூட பழுதுநீக்கப்பட்டு, உரிய முறையில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

இவை எல்லாவற்றையும் விட ஏதேனும் கோளாறுகள் ஏற்பட்டு மின்னுற்பத்தி துண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களில் தானியங்கி சீராக்கி ஒன்றின் மூலம் நுரைச்சோலை அனல மின்நிலையத்தின் பணிகள் மீண்டும் உரிய முறையில் இயங்கும்வகையான தானியங்கி கருவியொன்று பொருத்தப்பட்டுள்ளது.

எனினும் இதுவரை உரிய கட்டமைப்பு பயன்படுத்தப்படவில்லை. அதனையும் எதிர்காலத்தில் பயன்படுத்தத்தக்க வகையில் உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் மீள்வலு சக்தி, மின்சாரத்துறை அமைச்சின் செயலாளர் சுரேன் படகொட ஜனாதிபதியிடம் நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-5)

### கொள்ளையர்கள் மூன்று பேர் தலைதெறிக்க தப்பியோட்டம்

வடமராட்சி மண்டான் பகுதியில் பட்டப்பகல் வேளையில் வர்த்தகர் ஒருவரிடம் கொள்ளையடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட மூவர் அவ்வீதியால் மோட்டார்சைக்கிள் வருவதைக் கண்டு தலைதெறிக்க ஓடிய சம்பவம் ஒன்று கடந்த (15.03.2016) செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து நல்லெண்ணெய் விற்பனை செய்யும் வியாபாரி ஒருவர் வல்லை-மண்டான் வீதி வழியாக சென்றுள்ளார்.

அவ்வேளை அம்பலவன் வெளிப்பகுதியில் வைத்து வியாபாரியினை மறித்த மூன்று கொள்ளையர்கள் அவரைத் துருவித் துருவி சோதனை செய்தனர்.

இவ்வழியேமோட்டார்சைக்கிள் ஒன்று வருவதை அவதானித்த வியாபாரி அபயக்குரல் எழுப்பினார். இதனையடுத்து தாம் பிடிபடப் போகிறோம் என்பதை உணர்ந்த கொள்ளையர்கள் கப்பூது வழியாக தப்பிச் சென்றுள்ளனர்.

அவ்வியாபாரியிடம் தங்க மோதிரம், பணம் இருந்ததாகவும் இருப்பினும் அவற்றை கொள்ளையர்களிடம் அவர் கொடுக்கவில்லை எனவும் தெரிய வருகிறது. (இ-60)

### விடுதலைப்புலிகளுக்கு உதவியதாக

### நாடு கடத்தப்பட்ட இலங்கையரின் சர்வதேச பிடிவிறாந்து இரத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு உதவியதாக மலேசியாவில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட நபர் மீதான சர்வதேச பிடிவிறாந்து மற்றும் பிரயாணத் தடை என்பனவற்றை கடந்த திங்கட்கிழமை கொழும்பு நீதிமன்று இரத்து செய்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைமையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததுடன், மலேசியாவில் இருந்து கொண்டு அங்கு சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு உதவி புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 2014 ஆம் ஆண்டு செல்லத்துரை கிருபானந்தன் (அன்பரசன்) என்பவர் கைது செய்யப்பட்டார்.

இலங்கையிலிருந்து மலேசியாவுக்குத் தப்பியோடிய போது, இவருக்கு மலேசிய பினாங் முதலமைச்சர் இராமசாமி இவருக்கு மலேசிய கடவுச்சீட்டைப் பெறுவதற்கு உதவி புரிந் திருந் தார் என்ற குற்றச்சாட்டும் அப்போது முன்வைக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, இவர், விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மானுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததாகவும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயாருக்கு மலேசியாவில் வைத்தியம் செய்வதற்குரிய உதவிகளைப் புரிந்தார் என்றும் குற்றம்சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி கொழும்பு நீதிமன்றினால் எந்தவொரு குற்றச்சாட்டும் இன்றி விடுதலை செய்யப்பட்டிருந்தார். இந்தநிலையில் இவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்த சர்வதேச பிடியாணை உத்தரவு இரத்துச் செய்யப்பட்டு வெளிநாட்டுக்கான பிரயாணத்தடையும் நீக்கப்பட்டுள்ளதுடன் அவருடைய கடவுச்சீட்டு மற்றும் ஆவணங்கள்,பொருட்கள் என்பன நீதிமன்றத்தினால் திருப்பி கையளிக்கப்பட்டுள்ளன.(இ-9)

### பேஸ்புக்கில் அவதூறு ஏற்படுத்தும் கும்பல் தொடர்பான தகவல்கள் வெளியிடப்படும்

#### மகிந்த அமரவீர எச்சரிக்கை

அரசியல்வாதிகள் தொடர்பில் பேஸ்புக் மூலம் அவதூறு பரப்பும் கும்பல் தொடர்பில் இன்னும் சில நாட்களில் தகவல் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சருமான மகிந்த அமரவீர இந்த விடயம் தொடர்பில் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த பேஸ்புக் கும்பலில் 40 தொடக்கம் 50 வரையான நபர்கள் இருப்பதாகவும் இவர்களுக்கான பணம் வழங்குவதெற்கென சிலர் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கும்பல்கள் அரசியல்வாதிகளைப் பற்றி அவதூறு பரப்புவதையே தமது தொழிலாகக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கூடிய விரைவில இந்த கும்பல் தொடர்பில் தகவல்களை தம்மால் வெளிப்படுத்தப்பட முடியும் எனவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார்.(இ-5)

### இராணுவச் சிப்பாய் திடீர் மரணம்


மாதுறு ஓயா பயிற்சி இராணுவ முகாமில் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. கந்துருகஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயது இளைஞனே இவ்வாறு பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் கடும் சுகவீனமுற்ற நிலையில் அரங்காவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)




# ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டி இலங்கை அணி வெற்றி



டில்சானின் பொறுப்பான சிறப்பாட்டம் மூலம் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான உலககோப்பை இருபது-20 போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இருபது-20 உலகக் கிண்ணத்தில நேற்று மும்பையில் நடைபெற்ற போட்டியில் ஆப்கானிஸ்தான்-இலங்கை அணிகள் மோதிய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 153 ரன்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் அசோகர் 62 ஓட்டத்தினையும் பந்து வீச்சில் பெரேரா 3 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பின்னர் 154 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி 18.5 ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் டில்சான் ஆட்டமிழக்காமல் 83 ஓட்டத்தினையும் மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர். ஆட்டநாயகனாக இலங்கை அணி டில்சான் தெரிவானார். (க)







## மகிந்தவின் மேடையில் தடுக்கி விழுந்தார் உதய கம்மன்பில



(கொழும்பு)

கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் நடந்த மகிந்த ராஜபக்ஷ ஆதரவு அணியின், அரச எதிர்ப்புப் பேரணியின் போது, பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன் பில மேடையில் தடுக்கி விழுந்தார்

நேற்று பிற்பகல், மகிந்த ராஜபக்ஷ மேடைக்கு வந்த பின்னர், உதய கம்மன் பில உரையாற்ற அழைக்கப்பட்டார்.

இதையடுத்து உதய கம்மன்பில ஒலி வாங்கிகள் வைக்கப்பட்டிருந்த மேடையின் நடுப்பகுதி நோக்கி வேகமாகச் சென்றபோது, கால் தடுக்கி கீழே விழுந்தார்.

எனினும், உடனடியாகவே சுதாகரித்துக் கொண்டு சிரித்தவாறே எழுந்த உதய கம்மன் பில அதன் பின்னர் நிதானமாக உரையாற்றினார். (செ-12)

## 'பிரபாகரனும் பொட்டு அம்மானும் நந்தி கடலுக்கு ஒன்றாக சென்றனர்'





(கொழும்பு)

புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் உள்ளிட்ட சிலர் இறுதி யுத்தத்தின்போது நந்திக்கடல் தென் பகுதிக்கு தப்பிச் சென்றதாக கே.பி.கூறியிருக்கிறார். அத்துடன் பிரபாகரன் திரும்பி வந்ததாகவும் பொட்டு அம்மான் வரவில்லை என்றும் அவர் கூறியிருக்கின்ற அந்த தகவல் மட்டுமே எங்களுக்கு தெரியும். பொட்டு அம்மான் அந்த இடத்தில் உயிரிழந்திருக்கலாம் எனறு நான் நினைக்கின்றேன் என முன்னாள் இராணுவ தளபதியும் அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பிரபாகரனை கொழும்புக்கு அழைத்து வந்திருந்தால் இப்போது கே.பி.யை அரச அரண மனையில் வைத்திருந்ததைப் போன்று அவரையும் பாதுகாப்பாக வைத்திருந்திருப்பார்கள். அத்துடன் அவருக்கு வடகிழக்கு முதலமைச்சர் பதவியும் கொடுக்கப்பட்டிருக்கும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமுமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் சரத் பொன்சேகா கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-12)

## உலகில் மகிழ்ச்சியான நாடுகள்; இலங்கைக்கு 117ஆவது இடம்

உலகில் மகிழ்ச்சியான நாடுகளின் வரிசையில் இலங்கைக்கு 117ஆவது இடம் கிடைத்துள்ளது. ஐ.நா அமைப்பாகிய நிலையான அபிவிருத்தித் தீர்வுகளுக்கான வலையமைப்பு உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் 2016 ஆம் ஆண்டுக்கான தரப்பட்டியலை வெளியிட்டுள்ளது.

உலக மகிழ்ச்சி நாள் நாளை மறுதினம் 20ஆம் திகதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள 157 நாடுகளை உள்ளடக்கிய இந்த தரவரிசையில், இலங்கை 117ஆவது இடத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அடுத்து இந்தியா 118ஆவது இடத்தில் உள்ளது. அதேவேளை, தெற்காசிய நாடுகளில் பாகிஸ்தான் முன்னணியில் 92ஆவது இடத்தில் உள்ளது. பங்களா தேஷ் 110ஆவது இடத்தில் இருக்கிறது.

உலகில் மிகவும் மகிழ்ச்சியான நாடாக டென்மார்க்கும் அதையடுத்து, சுவிட்சர்லாந்து மற்றும் ஐஸ்லாந்தும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. (செ-12)

## கிணற்றில் வீழ்ந்து குடும்பஸ்தர் மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு குமுளமுனை மேற்கு பகுதியில் கிணற்றில் தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி பலியான சம்பவம் நேற்று மாலை 3 மணியளவில் இடம் பெற்றுள்ளது .

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

மேற்படி பகுதியில் வசிக்கும் காசிநாதர் நாகராசா (வயது 60) என்பவர் நேற்று குளிப்பதற்காக கிணற்றில் நீர் அள்ளிய சமயத்தில் கிணற்றில் தவறி வீழ்ந்து பலியாகியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைதீவு பொலிஸார் சடலத்தை பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டதோடு குடுப்பத்தினரிடம் சடலத்தை ஒப்படைத்துள்ளனர். (செ-281)

## பெண் கடத்தப்பட்டாரா? பொலிஸார் தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

தன்னைக் காப்பாற்றுமாறு அபாயக்குரல் எழுப்பிய பெண் ஒருவரின் சத்தம் கேட்டமை தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் செய்யப்பட்ட புகாரின் அடிப்படையில் பொலிஸார் அதி தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதியன்று இரவு 10.30 மணியளவில் வல்லை - உப்பு- முள்ளி வீதி வழியாக சென்ற வாகனம் ஒன்றிலேயே அவ் அபாயக் குரல் எழுப்பும் சத்தம் கேட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் முறைப்பாட்டை கல்லுவம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸில் பதிவு செய்துள்ளார்.

இரவு 10.30 மணியளவில் தன்னைக் காப்பாற்றுமாறு பெண் ஒருவர் குரல் எழுப்பும் சத்தம் கேட்டதாகவும் அதனை அடுத்து வெளியில் வந்து பார்த்த பொழுது சத்தம் வந்த நிலையில் வாகனம் ஒன்று வேகமாகச் சென்றதைக் கண்டதாகவும் அவர் முறையிட்டுள்ளார்.

வல்லைப்பக்கத்தில் இருந்து வந்த வாகனம் முள்ளிப் பகுதியை நோக்கிச் சென்றதாகவும் இம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வீதி வழியாக யாராவது பெண் கடத்தப்பட்டாரா? அல்லது வேறு ஏதாவது சம்பவம் நடந்ததா? என்ற கோணத்தில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-60)

## மாட்டு இறைச்சி பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி யாக்கருப் பகுதியில் அனுமதியின்றி மாடு வெட்டியவர்கள் இறைச்சியை கைவிட்டு தப்பியோடியதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்

நேற்று வியாழக்கிழமை காலையில் சிலர் சட்டவிரோதமாக மாடு வெட்டுவதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் இறைச்சியினை கைப்பற்றி சுகாதாரப் பரிசோதகர் மூலம் அதனை எரியூட்டி அழித்தாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

## பத்மநாதன் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டி

(தெல்லிப்பழை)

மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிதியம் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து நடத்தும் அமரர் ரி.பத்மநாதன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் சென் அன்ரனிஸ், சென் மேரிஸ், ஊரெழு றோயல், யங்கென்றிசியன் ஆதிசக்தி, டயமன்ஸ் ஆகிய அணிகள் பங்கு பற்றவுள்ளது. நுழைவுக் கட்டணம் 50 ரூபா அறவிடப்படும். (க)

# இந்திய அகதி முகாம்களில் இருப்போரை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை

யுத்தம் காரணமாக இந்தியா சென்று அங்கு அகதி முகாம்களில் இருக்கும் அகதிகளை நாட்டிற்கு திருப்பி அழைத்து வரும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.



இந்திய அகதி முகாம்களில் வசிக்கும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான அகதிகள் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் இலங்கையர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இதுவரை சுமார் 5 ஆயிரம் இலங்கையர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்படடுள்ள தாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வி. சிவஞானசோதி தெரிவித்தார். (இ-5)


## தொண்டர்கள் தேவை

**வாரத்தில் 4 மணித்தியாலங்கள்**
**மற்றவர்களுக்காக**
**அர்ப்பணிக்க தயாரா?**
சம்பளம் எதுவுமில்லை.
பயிற்சி வழங்கப்படும்.
9.00- 1.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்
(வியாழன் தவிர்ந்த ஏனைய நாட்களில்)
**021 222 8117**
**077 900 8776**
(C-3756)



## கண்ணீர் அஞ்சலி



**அமரர் மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்**

லண்டன் ஏடு நிறுவனத்தின் உறுப்பினர் வைத்திய கலாநிதி திரு.அ.பகீரதன் அவர்களின் அன்புத் தாயாரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் அன்பு மனைவியுமான அமரர் மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களின் மறைவினையிட்டு அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

**உன்மை விளக்கம் புத்தகசாலை**
**10/2, 2 ஆம் பண்ணை,**
**கனகபுரம், கிளிநொச்சி.**
(சி/4020)



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 29.03.1930
ஆண்டவன் அடியில் 09.04.2014
திதி-தசமி 18.03.2016 (வெள்ளிக்கிழமை)

**திரு. பெரியதம்பி சண்முகம்**
(ஓய்வு நிலை பொலிஸ் உத்தியோகத்தர்)

அன்பின் பிறப்பிடமே
அறிவின் உறைவிடமே
மும்மொழியில் சிகரமே- உங்கள்
பாசமொழி கேட்டிடவே
ஏங்கித் தவிக்கின்றோம் என்றும்

**மனைவி, பிள்ளைகள், சகோதரி,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

B 10,
உருத்திரபுரம்.
(C-4039)





உ
சிவமயம்

## கற்பக விநாயகர் ஆலயம்
## KATPAKA VINAYAGAR TEMPLE

Varivalavoo,
KARAINAGAR,
(Sri Lanka)

Reg.No.HA/5/JA/1017 Of 30.12.2002

வாரிவளவு,
காரைநகர்.

### காரைநகர் வாரிவளவு ஸ்ரீகற்பக விநாயகர் குருகுலம்

எல்லாம்வல்ல ஸ்ரீ கற்பக விநாயகருடைய திருவருளை முன்னிட்டு ஆரம்பிக்கப்படவுள்ள மேற்குறித்த குருகுலம் தொடர்பான பூர்வாங்க விடயங்களை கலந்தாலோசித்து ஏற்ற முடிவுகளை மேற்கொள்ளும் வகையில் இன்று 18.03.2016 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் ஆலய மண்டபத்தில் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் அந்தண சிவாச்சாரியார்கள், குருகுலத்தில் பயிற்சிபெற விரும்பும் மாணவர்களும் அவர்களின் பெற்றோர்கள், குருகுல ஆசிரியர்கள் மற்றும் குருகுல வளர்ச்சிக்கு உதவும் நலன்விரும்பிகள் சைவச் சான்றோர்கள், சமய அமைப்புக்கள், ஆலய அறங்காவலர்கள், ஏனைய சமய அபிமானிகள் அனைவரையும் குறித்த நேரத்தில் கலந்துரையாடலில் கலந்துகொண்டு குருகுல செயற்பாடுகள் சிறப்புற நடைபெற ஒத்துழைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**நிகழ்ச்சி நிரல்**

01. வேதபாராயணம்
02. திருமுறை பாராயணம்
03. ஆசியுரை- சிவஸ்ரீ.நா.பாலஸ்கந்தரூப சிவாச்சாரியார்
04. தலைமை உரை- பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர்
05. குருகுல ஆசிரியர்களின் கருத்துரை
06. ஸ்ரீ ஜாக்ரத சைதன்ய சுவாமிகளின் கருத்துரை- சின்மயாமிஷன்
07. ஆலய நிர்வாகஸ்தர் திரு.சிவஞானம் அவர்களின் கருத்துரை
08. கலந்துரையாடல்
09. நன்றியுரை
10. தேவாரம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்,
வாரிவளவு,
காரைநகர்.

இங்ஙனம்
அன்புள்ள
..................
(சி.சிவஞானம்,
ஆலய நிர்வாகஸ்தர்)

(சி-4043)


## இராசி பலன்

18.03.2016
(பங்குனி 05, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
தசமி பிற்பகல் 1.44 மணிவரை
புனர்பூசம் பிற்பகல் 12.18 மணிவரை
சுபநேரம் 6.18-7.48 மணிவரை
இராகுகாலம் 10.48-12.18 மணிவரை

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | | | |
| சுக், கேது | கிரகநிலை | | சந் |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
கேட்டை, மூலம்
காலை 6.04 இற்கு
கட-சந்

**மீனம்**: பிள்ளைகளின் கல்வி நலனில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மேடம்**: கல்வி நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்**: தைரியத்தோடு செயற்பட்டு சாதனைகள் படைக்கும் நாள், உடன் பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்**: சேமிப்புக்களை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், இனிய தகவல்கள் இல்லம் வந்து சேரலாம்.

**கும்பம்**: நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**கடகம்**: தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முற்படுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**மகரம்**: நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், நினைத்த காரியங்கள் நிறைவேறும் நாள், நண்பர்களால் நன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்**: உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெற வேண்டிய நாள், சுப செலவுகள் கூடும் நாள்.

**தனுசு**: கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், தொழிலில் போட்டிகள் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்**: சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சிதரும் வகையில் அமையலாம், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்**: எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்புண்டு.

**கன்னி**: விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

# நீதிபதி இளஞ்செழியன் கண்டிப்பு

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து கடமையாற்றவேண்டும் என்றால் உயர் அதிகாரிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என இலங்கை போக்குவரத்துசபையின் பிரதம செயலாற்று அத்தியட்சகர் உபாலி கிரிபத்தொடுவவிற்கு நேற்று முன்தினம்யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனால் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையால் யாழ்.சாலையில் கடமையாற்றும் நடத்துநர் ஒருவருக்கெதிராக விதிக்கபபட்ட தண்டனையை இடைநிறுத்துமாறு கோரி நடத்துநரால் யாழ். மேல் நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைக்காக இ.போ.ச. அதிகாரிகளுக்கும் மேல் நீதிமன்றினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதன் போதே நீதிபதி மேற்குறித்தவாறு எச்சரிக்கை செய்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் சகல நிர்வாகங்களுக்கும் பொறுப்பாக யாழ். மாவட்ட அரச அதிபர் இருக்கின்ற நிலையில் தற்போது முக்கியமாக உள்ள போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான செயற்பாடுகளில்வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபருடன் இலங்கை போக்குவரத்து சபையின் பிரதம செயலாற்று அத்தியட்சகர் ஒத்துழைக்காமல் செயற்படுவதாக எனக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இலங்கைப் போக்குவரத்து சபையில் வடபிராந்திய சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கும் தனியார் பேருந்துகளுக்கும் இடையில் தொடராசியாக ஏற்பட்டுவரும் முரண்பாடுகள் தொடர்பாக பலமுறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்தில் சேவையில் ஈடுபட்டுவரும் தனியார் பேருந்துகள் மற்றும் இலங்



கைப் போக்குவரத்து சபை பேருந்துகள் ஆகியன போட்டி போட்டு ஓடுவதனால் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடி தீர்க்கமான முடிவை எடுப்பதற்காக யாழ். மாவட்ட அரச அதிபரினால் நடத்தப்படுகின்ற கூட்டங்களுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அதற்கு குறித்த அதிகாரி சமுகமளிக்காத நிலையில் அரசாங்க அதிபரால் வடமாகாண ஆளுநருக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எனக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து கடமையாற்ற வேண்டுமாயின் யாழ். மாவட்ட அரச அதிபரின் வேண்டுகோள்களையும் கோரிக்கைகளையும் மதித்து நடக்க வேண்டும். கடினமாக இருந்தால் இடமாற்றம் பெற்றுச் செல்ல வேண்டும்.

இலாபத்தை நோக்கமாக கொண்டு சேவை செய்ய வேண்டாம். உயர் அதிகாரி சரியாக இருந்தால் தான் அவரின் கீழ் பணி புரிபவர்கள் சரியாக கடமையாற்றுவார்கள். அதனை புரிந்துகொண்டு நடக்க வேண்டும்.

மேலும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் யாழ்ப்பாணம்பண்ணை வீதி, பலாலி வீதி, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை வீதி மற்றும் கண்டி வீதி ஆகியவற்றில் 30 கிலோமீற்றர் வேகத்தில் செல்லவேண்டும் எனவும் போட்டி போட்டு ஓடுவதை நிறுத்த வேண்டுமென்றும் சாரதிகளுக்கு அறி வுறுத்துமாறும் குறித்த அதிகாரிக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-9)

# விண்ணப்பதாரிகளுக்கான வழிகாட்டல் பயிற்சிகள்

அரச துறையின் ஆட்சேர்ப்புப் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து பரீட்சைக்காக தயாராகிக் கொண்டு இருக்கும் விண்ணப்பதாரிகளுக்கான வழிகாட்டல் பயிற்சிகள் "பொதுமக்கள் தொழில் சேவை நிலையம்" ஊடாகநடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் வாய்ப்புக்களை பெருக்கி தொழில் வாய்ப்பற்றோர் எண்ணிக்கையினை குறைப்பதற்காக நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் செயற்பாடுகளுக்கு அமைய, எதிர்வரும் மாதங்களில் நடைபெறவுள்ள அரசதுறை ஆட்சேர்ப்புப் பரீட்சைகளான கிராம சேவையாளர், திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாண, மத்திய, அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள் மற்றும் ஏனைய பரீட்சைகளுக்காக தயாராகிக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டல் பயிற்சிகள் யாழ்.மாவட்டச் செயலகத்தின் ''பொதுமக்கள் தொழில் சேவை நிலையத்தினால்'' எதிர்வரும் 28ஆம் திகதியிலிருந்து துறைசார் நிபுணர்கள் மூலமாக இலவசமாக நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்பும் விண்ண ப்பதாரிகள் தங்களை யாழ். மாவட்டச் செயலகத்தின் "பொதுமக்கள் தொழில் சேவை நிலையத்திலும்'' பிரதேச செயலகங்களில் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் நேரில் வருகைதந்து அல்லது 0212219359 இலக்க தொலைபேசி ஊடாக எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பதாக பதிவினை மேற் கொள்ளலாம் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (இ




# நீதிபதியின் உத்தரவை மீறும் சாரதிகளுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை

## இ.போ.ச. யாழ்.சாலை முகாமையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனின் உத்தரவை மீறும் சாரதிகளுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை போக்குவரத்துச் சபை யாழ். சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ்.மேல்நீதிமன்ற நீதி பதியால் தற்பொழுது யாழ். மாவட்டத்தில் நடைபெறுகின்ற விபத்துக்கள் தொடர்பாகவும் அதனால் ஏற்படுகின்ற தேவையற்ற உயிர்ச் சேதங்கள் தொடர்பாகவும் தெளி வுபடுத்தியதுடன் இனிவரும் காலங்களில் விபத்துக்கள் ஏற் படாது சாரத்தியம் செய்வ தனை உறுதிப்படுத்த் வேண்டும்எனவும்அந்தவகையில் யாழ். நகரை நோக்கி வரு கின்ற பேருந்துகள் ஏ-9 வீதி யில் கைதடி பாலம் கடந்த பின்பும்பலாலி வீதியில் ஆரியகுளம் கடந்த பிற்பாடும் பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்தி கடந்த பிற்பாடும் காங்கேசன்துறை வீதியில் நாச்சிமார் கோவில் கடந்த பிற்பாடும் காரைநகர் வீதியில் சுடுகாட்டு ஆலடிச் சந்தி கடந்த பிற்பாடும் தீவகம் செயலாற்றும் பேருந்துகள் பண்ணை கடந்த பிற்பாடும் மணிக்கு 30 கிலோமீற்றர் வேகத்திற்கு குறைவான வேகத்தில் செயலாற்ற வேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளார்.

எனவே இதனை மீறும் சாரதிகளுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன் என இலங்கை போக்குவரத்துச் சபை யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபால செல்வம் அறிவித்துள்ளார். (இ

# தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட முன்வரைபு குறித்து பல்கலை. மாணவர்களுக்கு விளக்கமளிப்பு

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட முன் வரைபு தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போது மாணவர்களது கருத்துக்களும் பேரவையால் கேட்டறியப்பட்டன.

நேற்று முன்தினம்-பிற்பகல் 2 மணியளவில் இக்கூட்டம் நடைபெற்றது. தமிழ் மக்கள் பேரவையானது அரசியல் தீர்வு ஒன்று தொடர்பில் மக்கள் மத்தியில் கலந்தாய்வு ஒன்றை நடத்துவதற்கு உதவும் வகையில் அரசியல் தீர்வு தொடர்பிலான முக்கிய வரையறைகளை உள்ளடக்கிய, முன்மொழிவு ஒன்றை தருமாறு பணித்து கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி அன்று ஒரு நிபுணர் குழுவை நியமித்தது. பேரவையில் அங்கம் வகிக்கும் அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளும் சிவில் சமூக குழுக்களின் பிரதிநிதிகளும் இந்த நிபுணர் குழுவில் அங்கம் வகித்துள்ளனர். கடந்த ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற பல கலந்துரையிடலின் பின்னர,

நிபுணர் குழுவானது இந்த அறிக்கையையும் முன்மொழிவையும் பேரவையின் கவ்னத்திற்கும் அதனை தொடர்ந்து மக்கள் கலந்துரையாடலை மேற்கொண்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாக மட்டக்களப்பு, வவுனியா, போன்ற பல இடங்களில் தீர்வுத் திட்ட முன் வரைபு தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வும் அவர்களது கருத்துப்பெறும் நிகழ்வுகளும் நடைபெற்று வந்தன.

இந்நிலையிலேயே தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு திட்ட முன்வரைபு தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு விளககமளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் மேற்படி வரைபு தொடர்பில் பலகலை. மாணவர்களும் தமது கருத்துக்களை முன் வைத்தனர்.

இதன்போது தமிழர்கள் ஒரு தேசிய இனமாக வரைபில் குறிப்பிடப்பட வேண்டும் எனவும், சுய ஆட்சியுடன் கூடிய கூட்டாட்சி மறுக்கப் பட்டால் தமிழர் தரப்பிலிருந்து அடுத்தகட்ட நடவடிக்கை எவ்வாறு இருக்கும் என்ற பல கேள்விகளும் கருத்துக்களும் மாணவர்களால் முன்வைக்கப்பட்டன.

மாணவர்களது கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் சட்டத்துறை விரிவுரையாளர் சிரேஷ்ட சட்டத்தரணி வி.புவிதரன், யர்ழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம், சட்டததரணிகாண்டீபன் ஆகியோர் விளக்கமளித்தனர். மாணவர்கள் கூறிய கருத்துக்களையும் பேரவையின் தீர்வுத் திட்ட முன் வரைபில் இணைத்துக்கொள்ளப்படும் என பேச்சாளர்களால் கூறப்பட்டது. மேலும் பேரவையின் தீர்வு திட்ட முன்வரைபு அனைத்து மாணவர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டிருந்தது. (இ-4)



சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

## புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா நவ(9) குண்ட பக்ஷ

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

| கர்மாரம்பம் | எண்ணெய்க்காப்பு | மஹா கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 18-03-2016 வெள்ளிக்கிழமை<br>காலை 6-25 முதல் 7-20 வரை | 22-03-2016 செவ்வாய்க்கிழமை<br>கா. 9-00 முதல் மா. 4-00 மணிவரை | 23-03-2016 புதன்கிழமை<br>பங்குனி உத்தர நன்நாளில்<br>காலை 9-35 முதல் 11-00 வரை |

ஸ்ரீ சிவகாமி அம்பாள் அடியார்களே!

அண்ட சராசரமெங்கனும் நீக்கமற நிறைந்து விளங்கும் இறைசக்தி ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங்கருணையினால் அகில உலகங்களுள் அனைத்து ஜீவராசிகளும் அன்பு பூண்டு வாழும் இப் பூதலத்தில் இலங்காபுரியின் வடபால் கலையும், கமமும், கல்வியும், கலாச்சாரமும் மேவும் மாண்பான தெய்வீக மாட்சி நிறைந்த தலமான கோண்டாவில் தில்லையம்பதியில் நவசக்தி நாயகியாகவும், ஸ்ரீ சக்கர வாசினியாகவும், ஸ்ரீ சிவகாம சுந்தரி எழுந்தருளி அருள் சுரக்கும் திருக்கோயில் கலைமிகு கதைகளும், கண்கவர் வர்ணமும் காந்த மெனக்கவரும் கட்டட அமைப்பும் கொண்டுள்ள திருக்கோயிலில் சுப மங்களகரமான மன்மத வருஷம் பங்குனித் திங்கள் 10ம் நாள் (23-03-2016) புதன்கிழமை உத்தர நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் காலை 9.35 மணி தொடக்கம் 11.00 மணிவரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்தத்தில் "மஹாகும்பாபிஷேகம்" நடைபெற அன்னையின் திருவருள் கிடைக்கப்பெற்றுள்ளது. அடியார்கள் கிரியைகளில் கலந்து வழிபாடாற்றி அம்பாளின் இக பர சுகங்களை பெற்றுய்வீர்களாக.

### கிரியாகால விபரம்

**பங்குனித் திங்கள் 05ம் நாள் (18-03-2016) வெள்ளிக்கிழமை**
காலை 6.25 மணிக்கு மேல் 7.20 க்குள் கர்மாரம்பம் விநாயகர் வழிபாடு. அனுஞ்ஞை

**பங்குனித் திங்கள் 06ம் நாள் (19-03-2016) சனிக்கிழமை**
காலை 9.00 மணி விநாயகர் வழிபாடு. திரவ்ய விபாகம், திரவியசுத்தி. கணபதி ஹோமம், நவக்ரஹ ஹோமம், லக்ஷ்மி ஹோமம்.
மாலை 5.00 மணி விநாயக வழிபாடு. கிராமசாந்தி. பிரவேசபலி. விபூதி பிரசாதம் வழங்கல்.

**பங்குனித் திங்கள் 07ம் நாள் (20-03-2016) ஞாயிற்றுக்கிழமை**
காலை 9.00 மணி விநாயக வழிபாடு ரக்ஷோக்ன ஹோமம். திசாஹோமம். விபூதி பிரசாதம் வழங்கல்.
மாலை 4.00 மணி விநாயக வழிபாடு மூர்த்தி ஹோமம். சம்ஹிதா ஹோமம், சாந்தி ஹோமம், வாஸ்து சாந்தி. விபூதி பிரசாதம் வழங்கல்.

**பங்குனித் திங்கள் 08ம் நாள் (21-03-2016) திங்கட்கிழமை**
காலை 9.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, கோவாசம், கங்கா தீர்த்த சங்கிரகணம், சூர்யாக்னி சங்கிரகணம். விபூதி பிரசாதம் வழங்கல்.
மாலை 3.30 மணி விநாயகர் வழிபாடு, மிருத்சங்கிரகணம். அங்குரார்ப்பணம், ரக்ஷா பந்தனம், தர்மத்வஜம், பிரசன்னாபிஷேகம், பூஜை. கடஸ்தாபனம். கலாகர்ஷணம். க்ஷண ஹோமம், கும்பயாகசாலா பிரவேசம், சலபேரம், தூபி. தீப. யந்திர, பிம்பஸ்தாபனம். அஷ்டபந்தனம், யாகபூஜை அக்னி வழிபாடு. நவாக்னி விபஜனம் மூலமந்த்ர ஹோமம், திராவிட பாராயனம், விபூதி பிரசாதம் வழங்கல்.

**பங்குனித் திங்கள் 09ம் நாள் (22-03-2016) செவ்வாய்க்கிழமை**
காலை 9.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு. விஷேடசந்தி. பூதசுத்தி, தைலாப்பியங்கம் **(பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்)** யாகபூஜை, பாவனாபிஷேகம், ஸ்தாலிபாகம். திரிசதிஹோமம். விஷேட திரவிய ஹோமம். திராவிடபாராயணம்.
மாலை 5.00 மணி விநாயக வழிபாடு. விஷேட பஞ்சகவ்ய பூஜை, பஞ்சாமிர்த பூஜை, விம்பசுத்தி. கும்பபூஜை, விம்பசுத்தி, விம்ப ரக்ஷாபந்தனம், யாகபூஜை, கட்கமாலா மந்திரஹோமம், ஷடத்துவ நியாசங்கள். ஸ்பர்சாகுதி. திராவிட பாராயணம், குருமார் வஸ்திர உபசாரங்கள் வழங்கல்.

**பங்குனித் திங்கள் 10ம் நாள் (23-03-2016) புதன்கிழமை**
காலை 6.30 மணி விநாயகர் வழிபாடு. மஹா பூரணாகுதி. தீபாராதனை, வேதஸ்தோத்ர, ராக, தாள ஆசீர்வசனம், திராவிட ஸ்தோத்திர பாராயணம். அந்தர்பலி, பகிர்பலி, யாத்ரா தானாதிகள், சர்வமங்கள வாத்திய சகிதம் கும்பங்கள் வீதி பிரதட்சணம். தூபி அபிஷேகம். **மஹா கும்பாபிஷேகம்** மஹா ஹவிர் நிவேதனம் ஸ்திராகுதி, எஜமான் அபிஷேகம், தசதர்சனம், ஆசிஉரை, மஹா அபிஷேகம். விஷேட பூஜை. விபூதிப்பிரசாதம் வழங்கல். **மதியம் மகேஸ்வரபூஜை (அன்னதானம்).**
மாலை **4.00 மணிக்கு பௌர்ணமித் திருவிளக்குப் பூஜை**, 5.00 மணிக்கு வசந்தமண்டபபூஜை. திருவூஞ்சல், 7.00 மணிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமான், ஸ்ரீ சிவகாமி அம்பாள், வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ முருகப் பெருமான் பூந்தண்டிகையில் தெருவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

### குருமார் விபரம்

"வேதாகம ஞாபாஸ்கரன்" சிவஸ்ரீ. தானு மஹாதேவக் குருக்களினதும்,
"சபரிமலை குருசுவாமி" சிவஸ்ரீ. தானு வாசுதேவக்குருக்களினதும்,
"வேதாகம கிரியா ஞானபானு" சிவஸ்ரீ. க.மு. சோமசுந்தரக்குருக்களினதும்,
"தர்ம சாஸ்தா குருகுல இளவரசன்" சிவஸ்ரீ. மஹாதேவ ஸ்ரீ வக்ஸ்ஸாங்கக் குருக்களினதும் நல்லாசியுடன் கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்கும்

**சர்வ போதகம்**
சிவஸ்ரீ. தானு மஹாதேவக் குருக்கள்
(அதிபர் காயத்திரி பீடம் - இணுவில்)

**பிரதிஷ்டா பிரதம குரு**
"தற்புருஷ சிலாச்சாரியார்"
சிவஸ்ரீ. நாகேந்திர திவாகரக்குருக்கள்
(கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்)

**வேதபாராயண சாதகாச்சாரியார்**
சிவஸ்ரீ. மஹாதேவ ஸ்ரீ வுக்ஸ்ஸாங்கக் குருக்கள்
(தர்ம சாஸ்தா குருகுலம் - இணுவில்)

**சர்வ சாதகம்**
பிரம்மஸ்ரீ. ப. சனாதன சர்மா
(சாவகச்சேரி)

**உப சாதகர்கள்**
பிரம்மஸ்ரீ. செ. ராஜேஸ்வரசர்மா (கொழும்புத்துறை)
பிரம்மஸ்ரீ. ஜோ. சிவராமசர்மா (கோப்பாய்)

**முகூர்த்த நிர்ணயம்**
சிவஸ்ரீ. க.மு. சோமசுந்தரக்குருக்கள்
(உரும்பிராய்)

**யாக சம்ரக்ஷகர்கள்**
பிரம்மஸ்ரீ. நி. பிரகலாதன் சர்மா (பருத்தித்துறை)
பிரம்மஸ்ரீ. செ. சிவநாதன் சர்மா (கொழும்புத்துறை)
பிரம்மஸ்ரீ. க. சிவாகர சர்மா (மீசாலை)
பிரம்மஸ்ரீ. பா. திவாகர சர்மா (இணுவில்)
சு. குருபரன் (சாவகச்சேரி)

**யாக சம்ரக்ஷகர்கள்**
பிரம்மஸ்ரீ. இ. ஜெயவிரூபாட்சன் சர்மா (இணுவில்)
பிரம்மஸ்ரீ. சி. பார்த்தீபன் சர்மா (கொக்குவில்)

சிற்பபிரம்மஸ்ரீ. 'கலாபூஷணம்' சு. பாஸ்கரன் ஆச்சாரி (யாழ்ப்பாணம்)

**ஏனைய குருமார் விபரம்**
சிவஸ்ரீ. குமார சரவணபவக் குருக்கள் (இணுவில்)
சிவஸ்ரீ. சி. ஜோதீந்திரக் குருக்கள் (கோப்பாய்)
சிவஸ்ரீ. இ. சோமாஸ்கந்தக் குருக்கள் (கம்பளை)
சிவஸ்ரீ. இ. சிவபாலக் குருக்கள் (கலஹா)
சிவஸ்ரீ. இ. கலாராசக் குருக்கள் (உரும்பிராய்)
சிவஸ்ரீ. சி. திலீபக் குருக்கள் (இணுவில்)
சிவஸ்ரீ. நா. கிருபாகரக் குருக்கள் (மல்லாகம்)
சிவஸ்ரீ. ர. ஜெயராஜக் குருக்கள் (சண்டிலிப்பாய்)
சிவஸ்ரீ. ந. பாலசுப்பிரமணியக் குருக்கள் (கொக்குவில்)
சிவஸ்ரீ. க. கேதீஸ்வரக் குருக்கள் (உடுப்பிட்டி)
சிவஸ்ரீ. ந. பத்மநாதக் குருக்கள் (தாவடி)

நித்திய உதவி : இ. விஜிதரன் (உரும்பிராய்)
பூமாலை அலங்காரம் யாக அமைப்பு : கண்ணன் (உடுவில்)
வர்ண அமைப்பு : வெ. ராஜகுமார் ஆட்ஸ் (சுழிபுரம்)
மங்கள வாத்தியம் இளங்கோ குழுவினர் (சுதுமலை)

**தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்**
**23-03-2016 அன்று பால்குடப்பவனி நடைபெறும்**

குறிப்பு :— அடியார்கள் அபிஷேகம், ஹோமம், பூஜை, அர்ச்சனை அன்னதானத்திற்கு வேண்டிய பொருட்களை உபசரிக்கலாம்.

தில்லையம்பதி.

"தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்"

திருக்கோயில் பரிபாலன சபை

விளம்பர அனுசரணை: அம்பாள் ஹாட்வெயார், 54, பலாலி வீதி, உரும்பிராய். T.P: 077 160 7121

# 'தனியார் வைத்திய கல்லூரியும் வேண்டாம் இந்தியாவுடன் எட்கா உடன்பாடும் வேண்டாம்'

## வவுனியாவில் வைத்தியர்கள் கோஷம்



(குருமன்காடு)

இலங்கையில் மாலபே தனியார் வைத்திய கல்லூரி நிறுவுதல் மற்றும் எட்கா எனும் இலங்கை-இந்திய பொருளாதார ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வைத்தியர்கள் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

வவுனியா வைத்தியர்கள் விடுதியிலிருந்து ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணியானது ஹொறவப் பொத்தானை வீதியூடாக நகர்ந்து மணிக்கூட்டுக் கோபுரம் சந்தி ஊடாகச் சென்று கார்கில்ஸ் பூட் சிட்டியை சென்றடைந்தது.

அங்கு வைத்தியர்கள் ஒரு மணிநேரம் ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தின் போது, "வைத்தியத்துறைக்கு ஆபத்து, நோயாளிகளை பலிக்கடா ஆக்காதீர். ஈ.ரி.சி.ஏ.ஐ இரத்துச் செய், நோயாளர்களின் உயிர் விற்பனைக்கில்லை'' ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைப் பிடித்து கோஷங்களை எழுப்பியவாறு வைத்தியர்கள் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டனர். (2-3-250)

# விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சை நாளை

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கிடையிலான மாகாண மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, வவு/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி ஆகியவற்றில் நடைபெறும் என வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி திருமதி பி.செல்வின் எரேமியஸ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மேற்படி பரீட்சையானது நாடு தழுவிய ரீதியிலுள்ள ஒன்பது மாகாணங்களிலும் உள்ள தமிழ், சிங்கள மொழிமூல மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை வினாத் தாள் I பரீட்சையும் முற்பகல் 10.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை வினாத் தாள் II பரீட்சையும் நடைபெறும்.

இதில் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட துணுக்காய், முல்லைத்தீவு, மடு, மன்னார், வவுனியா தெற்கு , வவுனியா வடக்கு ஆகிய 6 கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் பரீட்சை நடைபெறும்.

இதேவேளை யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், தீவகம், கிளிநொச்சி ஆகிய 6 கல்வி வலயங்களுக்கும் உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் பரீட்சை நடைபெறும்.

பரீட்சைக்கு வருகை தரும் மாணவர்கள் பொறுப்பாசிரியருடன் உரிய நேரத்துக்கு முன்பாக சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-3-15)




# காணி உரிமம் தொடர்பான பிணக்கினால் விளையாட்டுப் பயிற்சிகளுக்கு இடையூறு

## தீர்வு காணுமாறு பிரதேச செயலரிடம் கோரிக்கை



(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை நான்காம் வட்டாரம் வெண்மலர் விளையாட்டுக்கழகத்திற்கு வழங்கப்பட்ட அரச ஒதுக்கீட்டுக் காணியில் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபடுவதற்கு குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமகன் ஒருவர் தடைகளை ஏற்படுத்தி வருகிறார் என இவ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

எமது விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் விளையாட்டுப் பயிற்சிகளைமேற்கொள்ள காணியொன்றை வழங்குமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி குறித்த பிரதேசத்தின் அப்போதைய பிரதேச செயலாளராக கடமை புரிந்த தி.தினேஸ்குமாரினால் இப் பிரதேசத்திலுள்ள அரச ஒதுக்கீட்டு காணியொன்று வழங்கப்பட்டது.

அதனையடுத்துஅக் காணியை துப்புரவு செய்ய முற்பட்ட வேளை அதே பகுதியைச் சேர்ந்த பொதுமகன் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட வாய்முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு முள்ளியவளை பொலிஸார் இக் காணியில் எவ்விதமான பயிற்சிகளையோ துப்புரவுப் பணிகளையோ மேற் கொள்ள வேண்டாம் எனப் பணித்தனர்.

அத்துடன் இருதரப்பினரையும் பிரதேச செயலாளரைச் சந்திக்குமாறு அறிவுறுத்தியதற்கமைய நாம் மறுபடியும் பிரதேச செயலாளரை சந்தித்து காணி விடயம் தொடர்பில் எடுத்துக் கூறினோம்.

அதற்கு அவர் தான் கூறியபடி எவ்விதமான நிரந்தர அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ளாமல் விளையாட்டுப்பயிற்சிகளை மட்டும் நடத்துமாறு கூறினார்.

அதன் பின்னர் பல தடவைகள் முயற்சிகள் செய்தும் இக் காணி தொடர்பில் தொடர்ந்து இழுபறி நிலையே காணப்படுகிறது என விளையாட்டுக்கழகத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறிந்த பொது மகனோ மேற்படி காணி தனது உறுதிக் காணி எனக் கூறுகின்றார்.

எனவே உரிய அதிகாரிகள் உடனடியாக இவ் விடயத்தை கவனத்திற்கு கொண்டு குறித்த விளையாட்டுக் கழகத்தினரின் காணித் தேவையைப் பூர்த்தி செய்து தருமாறு விளையாட்டுக்கழகத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-3-310)

# வவுனியாவில் அருவித்தோட்டம் சுற்றுலா மையம் திறந்து வைப்பு




(குருமன்காடு)

வடக்கு மாகாணசபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட வவுனியா, அருவித்தோட்டம் சுற்றுலா மையம் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுற்றுலாத்துறை அமைச்சின் 2015 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை மூலம் நிதி ஒதுக்கப்பட்டு, செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வெண்கலச் செட்டிக்குளம் பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ள அருவித்தோட்டம் சுற்றுலா மையம் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜாவினால் நேற்று முன்தினம் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபையின் வவுனியா மாவட்ட உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, இ.இந்திரராஜா, எம்.பி.நடராஜா, வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள் ஆகியோர் இணைந்து சுற்றுலா மையத்தின் உள் நுழைவுப் பாதையை நாடாவெட்டி திறந்து வைத்தனர். (2-250-281)

# மருதடிப்பாலத்தை அகலிப்பதற்கு மேலும் 20இலட்சம் நிதி ஒதுக்கீடு



கிளிநொச்சி உருத்திரபுரம், சிவநகர் கிராமங்களின் பின்புறமாகவுள்ள கழிவு வாய்க்காலின் மருதடிப் பாலம் உடைக்கப்பட்ட நிலையில், சிவநகர் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந் நிலையில் இப் பாலத்திற்கு 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு மிகச் சிறிய பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் சிறியதாக கட்டப்படும் பாலம் பொதுமக்களுக்கு நன்மை பயக்காது என்பதைக் கருத்தில் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேற்று முன்தினம் இப் பாலத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

அத்துடன் குறிப்பிட்ட பாலத்தின் அகலம் போதுமானதாக இல்லாதிருப்பதாகவும் பொதுமக்களின் நலனுக்கு உதவும் வகையில் பாலத்தை அகலமாகக் கட்டுவதற்கு தமது நிதியொதுக்கீட்டில் இருந்து 20 இலட்சம் ரூபா ஒதுக்கித் தருவதுடன் எதிர்வரும் ஆறுமாத காலத்திற்குள் சிறந்த முறையில் கட்டித் தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இக்கழிவுவாய்க்கால் மூலம் வெளியேறும் பெரயளவிலான வெள்ளம் தற்போது தாழ்நிலப்பகுதியிலுள்ள பல குடியிருப்புகளினுள் புகுந்து சேதமடையச் செய்வதால் குறிப்பிட்ட ஒரு இடத்தில் நன்கு அணைகட்டி உருத்திரபுரம் குளத்திற்கு நீர்சென்றடையும்வகையில்வாய்க்கால் வெட்டப்பட வேண்டுமெனவும் இதனால் வெள்ளப் பாதிப்பிலிருந்து தமக்கு விடிவு கிடைக்குமெனவும் அப்பகுதி பொதுமக்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.(2-3-254)

# வ.மா.சிகை அலங்கரிப்பு நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்த வேண்டும்

## மீறும் நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து சிகை அலங்கார நிலையங்களிலும் சிகை,தாடி மற்றும் மீசை அலங்காரம் செய்வதற்கான விலைப் பட்டியல் கட்டாயம் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என சிகையலங்கார சங்கத்தின் வடக்கு மாகாண சமாச தலைவர் க.நாகராசா அறிவித்துள்ளார்.

மேலும் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாத நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். சிகை அலங்கார நிலையத்தில் பாவிக்கப்படும் பொருட்களின் காலாவதி திகதிகளைப் பற்றி சிகை அலங்கார உரிமையாளர்கள் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறான காலாவதி பொருட்களை வைத்திருந்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-3-311)

# நான்கு மாணவர்களை காணவில்லை; கிளி.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(முல்லாவி)

கிளிநொச்சியில் பிரபல பாடசாலையொன்றில் தரம் 10,11 ஆகிய வகுப்புக்களில் கல்வி பயின்று வருகின்ற நான்கு மாணவர்கள் நேற்று முன்தினம் மாலை முதல் காணாமற் போயுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாக




தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாணவர்கள் நான்கு பேரும் வழமைபோன்று அன்றையதினம் பாடசாலைக்கு சமுகமளித்ததாகவும் பின்னர் அவர்கள் வீடு திரும்பாத நிலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 15 வயதையுடைய மாணவர்கள் மூவர் கிளிநொச்சி குமரபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் 16 வயதையுடைய மற்றைய மாணவன் கிளிநொச்சி பரந்தன் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பாடசாலை சமூகம் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த மாணவர்களின் பெற்றோரை அழைத்து வருமாறு கூறிய நிலையில் அம்மாணவர்களின் அசட்டையீனம் காரணமாக தலை மறைவாகியிருக்கலாம் என தெரிவிக்கின்றனர்.

எனினும் பாடசாலைக்கு குறித்த மாணவர்கள் பெற்றோரை அழைத்து வருமாறு கூறியமை தொடர்பில் பெற்றோருக்கு தகவல் எதுவும் மாணவர்களினால் வழங்கப்படவில்லை என பெற்றோர் தெரிவிக்கின்றனர். (2-15)

# பூதன் வயல் கிராமத்தில் கஞ்சா பக்கெற்றுக்களை விற்பனை செய்த நபர் கைது

**கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பூதன் வயல்பகுதியில் கஞ்சா பக்கெற்றுக்களை விற்பனை செய்து கொண்டிருந்த நபர் ஒருவர் முள்ளியவளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.**

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, பூதன் வயல் பகுதியில் கஞ்சா பக்கெற்றுக்களை விற்பனை செய்து கொண்டிருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் பிரஸ்தாப நபரை கைது செய்ததுடன் அவரிடம் இருந்த கஞ்சாபக்கெற்றுக்களையும் பறிமுதல் செய்தனர்.

இதன் பின்னர் பொலிஸார் அந்நபரை முள்ளியவளை பொலிஸ் நிலையம் அழைத்து சென்றதுடன் இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர்.

இதேவேளை வேறு மாவட்டங்களில் இருந்து குறித்த பகுதிக்கு கஞ்சா, பாபுல் என்பன கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும் வெளிமாவட்டங்களில் இருந்து இங்கு வருகை தந்து தங்கி நின்று வேலைகளில் ஈடுபடும் நபர்களே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (2-310)

# இரவு வேளைகளில் பயன்தரும் மரங்களை துவம்சம் செய்யும் யானைக் கூட்டங்கள்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விசுவமடு வள்ளுவர்புரம் கிராமத்தில் உள் நுழையும் யானைகள் விவசாய நிலங்களில் காணப்படும் பயன்தரும் மரங்களைச் சேதப்படுத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அண்மைய நாட்களாக யானைகளின் அட்டகாசம் மேற்படி கிராமத்தில் அதிகரித்து காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாய நிலங்களினுள் உள் நுழையும் யானைக்கூட்டம் மா, பலா, தென்னை, வாழை மரங்கள் ஆகியனவற்றை நாசப்படுத்துவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கமக்கார அமைப்பினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆகியோரிடம் முறையிட்ட போதிலும் அவர்கள் வனவள திணைக்கள அதிகாரிகளிடம் முறையிடுமாறு கூறுகின்றனர்.

இந்த நாசவேலையினால் தமது வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக பயிரிடப்படும் பயிர்களும் அழிவடைந்து போவதாகத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் விவசாயி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த மாதம் 2 ஏக்கர் நிலப்பரப்பில் 45 வாழை மரங்கள் நாட்டியதாகவும் கடந்த வாரம் அவை அனைத்தும் யானைகளினால் துவம்சம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றார்.

இரவு வேளைகளில் உள்நுழையும் யானைகளை விழித்திருந்து துரத்தியும் அவை அதிகாலைவேளைகளில் நுழைந்து சேதப்படுத்துவதாக சுட்டிக்காட்டுகின்றார்.

இந்த வாழை மரக்குட்டிகள் பணம் கொடுத்து, வாகனக்கூலி வழங்கி தாம் யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்து வந்ததாக அவர் கவலை தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவில்லையெனவும் இந்த யானைகள் தென்பகுதியிலிருந்து கொண்டு இறக்கிவிடப்பட்டவை என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யானைகளிடமிருந்து விவசாய நிலங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென மேற்படி கிராமமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2)

# டிப்பர் வாகனம் மாட்டுடன் மோதுண்டு விபத்து-ஒருவர் படுகாயம்

(புளியம்பொக்கணை)

நாகேந்திரபுரம் புளியம்பொக்கணை பரந்தன் வீதியில் வேகமாகப் பயணித்துக்கொண்டிருந்த டிப்பர் வாகனமொன்று வீதிக்குக் குறுக்காக வந்த மாடு ஒன்றுடன் மோதுண்டு அவ்வழியாக பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை சைக்காக அனுமதிக்கப்பட்டார்.


இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சின்னத்துரை ஜெகதீஸ்வரராஜா (வயது-42) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே படுகாயம் அடைந்தவராவார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம் பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி வீதியில் பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனம் குறுக்கே வந்த மாடு ஒன்றுடன் மோதியதிலேயே இவ்விபத்து நேர்ந்துள்ளது. (இ-2-30)

# கனரக வாகனம் இயக்கச்சி சந்தியில் பயணித்த வேளை தடம்புரண்டது



இரும்புகளை ஏற்றிக் கொண்டு பயணித்துக் கொண்டிருந்த கனரக வாகனமொன்று இயக்கச்சி சந்தியில் திரும்ப முற்பட்ட வேளை வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டது. இதன்போது எவருக்கும் உயிர்ச் சேதமோ காயமோ ஏற்படவில்லை.


இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.30மணியளவில் கிளிநொச்சி இயக்கச்சி சந்தியில் இடம் பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி ஏ-9 வீதியூடாக பயணித்துக் கொண்டிருந்த குறித்த வாகனம் மேற்படி சந்தியில் திரும்ப முற்பட்ட வேளை வேகக் கட்டுப்பாட்டை இழந்து கிளி/இயக்கச்சிப் பாடசாலை வேலியை ஊடறுத்து தடம் புரண்டது. •

இது தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டனர். (2-3)

# குறை நிவர்த்தி செய்யும் நடமாடும் சேவை செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில்




வடக்கு மாகாண சபையும், வவுனியா மாவட்டச்செயலகமும் இணைந்து நடத்திய குறை நிவர்த்தி செய்யும் நடமாடும் சேவையானது வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கல், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிக்கான காசோலைகள், பிறப்பு-இறப்பு பத்திரங்கள் வழங்கல், ஆள் அடையாள அட்டைக்கு பதிதல், திருமணப் பதிவு, சுகாதார மருத்துவ சேவை, தொலைந்த ஆவணங்களைப் பெற்றுக் கொடுத்தல் என மத்திய, மாகாண அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களின் சேவைகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வடக்கு மாகாண சபை முதலமைச்சரின் சார்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங் கநாதன், எம்பி.நடராஜா, ம.தியாகராஜா, இ.இந்திரராசா, மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமார, முதலமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன், செட்டிகுளம் பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, இந் நடமாடும் சேவையில் பங்குபற்றுவதற்கு ஏற்ற வகையில் இலவச போக்குவரத்துச் சேவையும் செட்டிகுளத்தில் இடம் பெற்றது. (2-250)

# உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரப்பிரிப்பு சிக்கல்களை சீர்செய்ய நாளை கலந்துரையாடல்

உள்ளூராட்சி மன்றங்களில் புதிய வட்டாரப் பிரிப்பில் உள்ள சிக்கல்களை சீர் செய்வதற்கு பல்வேறுபட்ட கலந்துரையாடல்கள், மக்கள் சந்திப்புக்கள் என்பன கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற போதிலும் இதுவரை எந்தவிதமான முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆதலால் இவ் விடயம் தொடர்பாக பொதுமக்கள் ,பொது அமைப்புக்கள், அதிகாரிகள் என பல்வேறுபட்டவர்கள் இணைத்து அவர்களுடன் கலந்துரையாடி பொது இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நடைபெறுமென வவுனியா அரசாங்க அதிபர் எம்.பி.ஆர்.புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

கடந்த ஆட்சியில் நடைபெற்ற இந்த வட்டாரப் பிரிப்பானது பல்வேறு சந்தேகங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. வட்டார இலக்கம் தொடக்கம் வட்டாரக்கிராமம் வரை பிரச்சினை நீண்டு சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

இந் நிலையில் மீண்டும் இவ் விடயம் தொடர்பாக பொதுமக்கள், பொது அமைப்புக்கள், அதிகாரிகள் எனப் பல்வேறுபட்டவர்களை சந்தித்துப் பொது இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நடைபெறும் என வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (2-303)

# யாழ்.மண்ணிற்குரிய சமூக ஆன்மீகப் பாரம்பரியங்களை செயற்படுத்தி வரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகளை பெரிதுவந்தேற்கும் மலையகம்






இந்த மண்ணிலே ஞானிகளும் யோகிகளும் கட்டமைத்துத்தந்த சமய சமூக சிந்தனைகளை தனது எல்லை கடந்த சேவைகளால் சந்நிதியான் ஆச்சிரமம் செயற்படுத்தி வருவதானது சைவ மக்கள் யாவருக்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

எல்லாம் அவன் பார்த்துக்கொள்ளுவான் என்கின்ற தளராத நம்பிக்கையுடன் ஆச்சிரமத்தின் நிர்வாகியான மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத்தின் பணிகளை முன்னெடுத்து வரும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே 2014 ஐப்பசியில் நிகழ்ந்த மலையகத்தின் மீரியபெத்தை மண்சரிவுடன் ஏற்பட்ட துன்பியலோடு சந்நிதியான் ஆச்சிரமத்தினது தீவிர கரிசனை மலையக மக்கள் மீது ஏற்படத் தொடங்கலாயிற்று.

அன்று தொடங்கிய மலையகம் நோக்கிய ஆச்சிரமத்தின் உறவுப் பயணம் இன்று வரை 14 தடவைகள் நிகழப் பெற்றிருக்கின்றது.

இந்த ஒவ்வொரு பயணத்தின் போதும் மலையக மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை பெற்றுக் கொடுத்தல் என்பதோடுமட்டுமல்லாதுமானுட மேம்பாட்டிற்கான உபாயங்களை ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகளாகவும் இவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. இதனை முன்னிறுத்தி 20.02.2016 அன்று யாழ். மற்றும் மலையகத்தின் சமய, சமூகப் பிரதிநிதிகளின் பிரசன்னத்தோடு மீரியபெத்தை மண்சரிவு அவலங்களை நினைவேந்தும் நிகழ்வு ஆச்சிரமத்தின் பேரவை மண்டபத்தில் நிகழ்ந்ததுடன் மலையக மண்சரிவின் தாக்கமும் அதன் எதிரொலியும் என்ற நூலும் வெளியீடு செய்யப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் இந்தப் புனிதமான மலையகம் நோக்கிய பயணத்திலே சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் அகில இலங்கை சைவ மகா சபை என்பனவும் தம்மை இணைத்துக்கொண்டு மலையகத்தின் மூலைமுடுக்கெல்லாம் உறைந்து கிடந்த ஆன்மீகத்திற்கான தேடல்களை பிரவாகித்தோடவைக்கும் புனிதத்துவமான பணிகளிலே ஈடுபட்டு வருகின்றன.

இவ்வண்ணம் பதுளை, பண்டாரவளை ஆகிய பிரதேசங்களை நோக்கியமைந்த பயணங்கள் கண்டி மற்றும் பொலநறுவை , அம்பாறை ஆகிய இடங்களை மையப்படுத்தியும் நிகழப்பெறுவதோடு அங்கெல்லாம் அறநெறிப் பாடசாலைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தல், கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுதல், கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்துதல் என்றவாறு பல்துறை சார்ந்த பணிகளையும் ஆற்றி வருகின்றனர்.

ஊவா பிரதேசத்தை சேர்ந்த உயர்தர வகுப்பில் கணித, விஞ்ஞானத் துறையில் கல்வி கற்பதற்கு தகுதியுள்ள பதினொரு மாணவர்களை யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி பெற்றுக்கொடுக்கின்றமையும் பொலநறுவை மாவட்டத்திலே சமன்பிட்டி என்று தற்போது பெயர் இடப்பட்டிருக்கும் புராதன தமிழ் கிராமத்தை கண்டறிந்து அங்குள்ள சாரதாதேவி பாடசாலைக்கான கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுத்தமையும் இடமறிந்து செய்த பேருதவிகளாகும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தைமையப்படுத்தி அதுவரை காலமும் செயற்பட்டு வந்த சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகள் பொலநறுவை, அம்பாறை ஆகிய பிரதேசங்களிலும்பதுளை,பண்டாரவளை, கண்டி ஆகிய மலையகப் பகுதிகளில் உள்ள பூனாகலை, தொட்டிலாகலை, அப்புத்தளை, நாயப்பெத்தை, கோணமுட்டாவை, சேர்வூட் பிரதேசம் ஆகிய தோட்டப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது என்பதோடு யாழ்.மண்ணின் உறவுப் பாலத்தை இங்குள்ள மக்களும் சமய, சமூக அமைப்புக்களும் பெரிது வந்து வரவேற்றும் வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலம், நேரம், இடம், பிரமாணம், ஆள் வேறு பாடு என்பவற்றைக் கடந்து செல்வச்சந்நிதியான்ஒருவனையே தோற்றுவாயாக மனதிருத்தி செயற்பட்டுவரும் சுவாமிகளதும் ஆச்சிரமத்தினதும் பணிகள் மென்மேலும் சிறப்புறத் தொடர நாங்களும் ஒன்றிணைந்து பிரார்த்திப்போமாக.

துரை கணேசமூர்த்தி
ஆசிரியர்
யாழ்ப்பாணக் கல்லூரி

## புல்லுக்குளத்தில் இறந்த நிலையில் பெருமளவு மீன்களால் துர்நாற்றம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.புல்லுக்குளத்தில் கடந்த சில நாட்களாக பெருமளவு மீன்கள் இறந்த நிலையில் துர்நாற்றம் வீசுகின்றது.இது குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்மென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மையில் இது போன்று யாழ்.ஆரிய குளத்திலும் பெருமளவு மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கிக் காணப்பட்டமை குறிப்பிடத்தகக்து. (இ-5)

## உணவுக்கு அதிக சுவையூட்டும் அஜினோமோல்டிற்கு வருகிறது தடை

### மனிதர்களுக்கு பலவித நோய்க்கு காரணமாக அமைகிறது

(கொழும்பு)

அஜினோமோல்டின் பாவனை அதிகரிப்பினால் ஏற்படும் விளைவுகளைக் கருத்தில் கொண்டு அஜினோமோல்டின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.Mono sodium glutamate என அழைக்கப்படும் அஜினோமோல்ட் உணவகங்களிலும் உணவு விடுதிகளிலும் வீடுகளிலும் உணவுகளை சுவையூட்டப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு உணவைச் சுவையூட்டப் பயன்படுத்தப்படும் அஜினோமோல்ட் விவசாய நடவடிக்கைகளில் களை கொல்லியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

(Gerbicide,glyphosphate) களைகொல்லிகளின் இறக்குமதி தடைசெய்யப்பட்டதையடுத்து விவசாயிகள் மாற்றுவழியாக அஜினோமோல்டை பயன்படுத்த ஆரம்பித்தனர்.

களைகொல்லியாக பயன்படுத்தப்படும் அஜினோமோல்ட்டை உணவுக்குப் பயன்படுத்துவது நீண்ட காலத்தில் பல்வேறு நோய்களுக்கு வித்திடுவதாக அமையும்.

glyphosphate என்ற இரசாயனத்திற்கு கடந்த ஜுன் மாதம் அரசாங்கத்தினால் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

வடமேற்கு மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணம் ஆகியவற்றிலுள்ள விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் குடும்பங்களில் சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததையடுத்து இந்தத்தடை அமுல் படுத்தப்பட்டது.

கடந்த ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து அஜினோமோல்டின் இறக்குமதியில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டதாக இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அஜினோமோல்டை நாடு பூராகவும் விநியோகிக்கும் பிரதான இறக்குமதியாளர் கூறுகையில்,

அண்மைக்காலமாக கிராமங்களுக்கும்கூட மிகவும் வேகமாக அஜினோமோல்டின் தேவை அதிகரித்துச் செல்வதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிறுவனத்தின் முகாமையாளர் தெரிவிக்கையில்,

ஒருமாதத்திற்கு ஆகக்குறைந்தது 150 மெற்றிக்தொன் அஜினோமோல்டை இறக்குமதி செய்கிறோம். மேலும் மூன்று நிறுவனங்களின் மூலம் வருடாந்தம் 7ஆயிரம் தொன் அஜினோமோல்ட் இறக்கிக் குவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சின் பணிப்பாளர் பாலித மகிபால தெரிவிக்கையில்,

உணவு ஆலோசனைச் சபையின் ஆலோசனைக்கு அமைவாக விவசாய நிலங்களிலும் உணவுகளிலும் அஜினோமோல்ட் பாவனை செய்வது தடைசெய்யப்படவுள்ளது. இந்தத் தடையானது படிமுறையாக அமுல்படுத்தப்படும். இப்பொழுது இதன் பணிகள் ஆரம்பக் கட்டத்தில் உள்ளன. விவசாயிகள் இதனைப் பெற்றுக்கொள்ளமுடியாது.

இது தொடர்பாக டாக்டர் மகிபால தெரிவிக்கையில்,

எந்தவொரு இரசாயனப் பொருளையும் அதிகளவில் உட்கொண்டால் அது உடலுக்கு கேடு விளைவிக்கக் கூடியது என்று தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை காணி உரிமையாளர் சங்கத்தலைவர் நாமல் கருணாரட்ன தெரிவிக்கையில், அஜினோமோல்டின் இறக்குமதி தடை வரவேற்கத்தக்கது.

அஜினோமோல்டைப் பாவிக்கும் போது களைகள், புற்பூண்டுகள் உடனடியாக இறக்கின்றன எனில் மனிதர்களுக்குஎன்ன நடக்கும் என்பதைக் கற்பனை பண்ணிப் பாருங்கள் என்று தெரிவித்துள்ளார்.(3)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# இலங்கையிலுள்ள நீர் வளர்ப்பு முறைகள்

# (Aquaculture Systems in Sri Lanka)

(தொடர்ச்சி.....)

● Catla catla, Cirrhinusmirigala & Labeo rohita.

**வாழிடம் :** இயற்கை ஈன இவ் இனங்கள் இந்தியாவில் பெரிய ஆறுகளிலும், நீர்த் தேக்கங்களிலும் வாழ்கின்றன. நன்னீரிலும், உவர் நீரிலும் வாழும் இயல்புடையது.

**உணவும் ஊட்டலும் :** இவற்றின் இளம் நிலைகள் பிளாந்தன்களை உண்ணும். அதன் பிறகு சிறிய குஞ்சுப் பருவங்கள், இழை போன்ற அல்காக்கள், நீர்த் தாவரங்களையும் உண் ணும். பின்னர் பெரிய மீனாக வரும்வரை ஒவ்வொரு இனத்தினதும் உணவு வகை வேறுபடும். வளர்ச்சியின்போது C.catla, L.rohita இனங்கள் பெரிய நீர்த் தாவரங்களையும், இறந்த தாவர விலங்கு உடல்களையும் உட்கொள்ளும். C.mrigala இறந்து போன தாவர, விலங்கு உடல்கள், பிளாந்தன், சிறிய விலங்கை உணணும் அனைத்தும் உண்ணியாகும்.

**இனப்பெருக்கம் :** வளர்ப்புக் குளங்கள் மிகச் சிறியதாக இருப்பின் இவற்றில் இயற்கையாக இவ்வினங்கள் இனப்பெருக்கம் செய்யாது. கறுகிய வாழிடத்தால் சூலகம் குறித்த பருமனுக்கு வளர்ச்சி அடைதல் தடுக்கப்படுவதாலாகும். இயற்கையில் இவ ற்றின் இனப்பெருக்கம் பெரிய நீர் நிலைகள், ஆறுகள் என்பவற்றில் நிகழ்கிறது.

இயற்கையில் மழை காலங்களில் ஆழமற்ற நீர்க்கரைகளில் முட்டையிடும் வளர்ப்புக் குளங்ளில் இம் மீன்களில் செய ற்கை முறையில் இனப் பெருக்கம் நடத்தப்படுகி றது.


இலிங்க முதிர்வடைந்த மீன்களின் கபச் சுரப்பிலிருந்து பெறப்பட்ட சாறு கள் இனப்பெருக்கஞ் செய்ய க்கூடிய நிலையிலிரு க்கும் மீன்களுக்கு செலுத்துவதால் சூலகம் விருத்தியடைவதை தூண்டப்படும்.


சூலகம் விருத்தியடைந்திருப்பின் பெண் மீன்களின் வயிற்றறை நன்கு பருத்திருப்பதுடன் சன்னித் துவாரம் சிவப்பாக காணப்படும். இவ்வேளையில் அது வெளியேற்றும் முட்டைகளை பாத்திரத்தில் சேகரிக்க வேண்டும். இலிங்க முதிர்வடைந்த ஆண் மீனின் வயிற்றறை மெதுவாக நசிப்பதன் மூலம் சுக்கிலப் பாயத்தைப் பெறலாம். பெறப்பட்ட சுக்கிலப் பாயத்தை முட்டைகள் மீது சேர்த்து முட்டைகளை நன்கு மெதுவாகப் புரட்டுவதன் மூலம் கருக்கட்டலடையச் செய்யலாம். பின் முட்டைகளை நீரிலிட்டு குஞ்சுகளைப் பொரிக்கச் செய்யலாம்.


● Penaeus monodon & Penaeus indicus

**வாழிடம் :** இவ் இனங்கள் களப்புக்களிலும், உவர் நீர்நிலையிலும் இயற்கையாய் உண்டு. இவ் இனங்களின் ஆரம்பக் குடம்பிப் பருவம் நீர்க் கரையோரங்களில் காணப்படும். பிந்திய குடம்பிப் பருவங்களும், நிறைவுடலிப் பருவங்களும், ஆறுகளிலும், களப்புகளிலும் காணப்படும்.

**உணவும் ஊட்டலும்** குடம்பிகள்







பிளாத்தன்களையும், இழையுருவான அல்காக்களையும் உண்ணும். பெரிதாக வளர்ந்ததும் P.indicus குப்பைகள், சிறிய கிறஸ்ரேசியன்கள், சிறிய புழுக்களை உண்ணும். அத்துடன் அனைத்தும் உண்ணியாக காணப்படுகின்றது.

P.monodon குடம்பிகள் அனைத்தும் உண்ணியாய் இருக்கும். ஆனால் ஓரளவு பெரிய கிரஸ்சியன்களையும், புழுக்களையும் உண்ணும்.

**இனப்பெருக்கம் :** September-January மாதம் வரை இனப்பெருக்கத்திற்குரிய காலம். களப்புக்களில் காணப்படும் ஆண், பெண் இறால்கள் கரைப் பகுதி நீருக்கு இரவு நேரங்களில் வரும். சோடி சேர்ந்து நீந்தும். நீந்தும் பொழுதே ஆண் இறால், பெண் இறாலை மேல் கீழாகத் திருப்பி தெலிக்கத்திற்குள் விந்து தாங்கிகளை இறக்கி விடும். பெண்ணின் இனப்பெருக்க தொகுதியிலிருந்து சூல்கள் சூலகக்கானின் துவாரத்தினூடாக வெளியேறும் போது விந்துகள் முட்டைகளைக் கருக்கட்டும். முட்டைகள் வெளியேற்றப்பட நீரின் அடித் தளத்தை அடையும்.

இங்கு விருத்தியடையத் தொடங்கும் முட்டை பொரித்து முதற்குடம்பியாக நோப்பிலியசுக் குடடம்பி வெளியேறும். இது சில தடவைகள் தோல் கழற்றிய பின் புரோட்டோசொபியா எனும் குடம்பி நிலையை அடையும். அடுத்து மைச்சுக் குடம்பி நிலையை அடைந்து இறுதியில் இறாலாக மாறும்.

இலங்கையில் இறால் பண்ணை வளர்ப்பில் செறிவான வளர்ப்பு முறையில் இறால்கள் நோய்த் தொற்றுக்கு இலகுவாக உள்ளாதாக காணப்படுகிறது. அந்நோய்களாக,

SEMBV – Systematic Ectodermal and Mesodermal Baculovirus

MBV – Penaeas Monodon Baculo Virus

SEMBV நோய் இரட்டை DNA இழை கொண்ட Baculo Virus ஆல் ஏற்படுகின்றது. இங்கு இறாலில் புறத்தோற்படை, இடைத்தோற்படை, உற்பத்தி இழையங்கள் பாதிக்கப்படுகின்றன.

இந்நோயுள்ள இறால் குஞ்சுகள் குளத்தில் நீர்ப்பரப்புக்கு அண்மையாக நீந்திக் கொண்டிருக்கும். பின் குளத்தின் அடியிலுள்ள பள்ளங்களில் சேர்ந்து இறந்து விடும்.

ஊட்டல் அளவு குறைவுறுதல் இந்நோயின் அறிகுறிகளாகும். பரிசமுடியிலும், உடலின் வேறு பகுதிகளிலும் பல்வேறு அளவுகளில் வெண்புள்ளிகள் தோன்றும். உடல் செந்நிறத்திலிருந்து இளம் சிவப்பு நிறமாயும் மாற்றமடையும். இது வெண்புள்ளி நோய் (White Spot disease) எனப்படும்.

20-30 நாட்கள் வயதுடைய பிந்திய குடம்பிப் பருவத்தில் MBV நோய் பொதுவாக பீடிக்கும் 5-10 நாட்கள் வயதுடைய பிந்திய குடம்பிகள் இந்நோயால் பீடிக்கப்படும் தன்மை மிகக் குறைவாகக் காணப்படும்.

ஏ.அன்ரனிசீலன்
சென்.பற்றிக்ஸ் கல்லூரி
2013 விஞ்ஞானப் பிரிவு

## வாரத்திற்கு ஒரு புதிர்! 156

இறுதியாக நடைபெற்ற ஒஸ்கார் விருது வழங்கும் நிகழ்வில் உலக காலநிலை மாற்றம் தொடர்பில் கருத்துரைத்தவர். சிறந்த நடிகருக்கான விருது பெற்றவர் மற்றும் சூழலியலாளருமான நடிகர் யார்?

**புதிர் 156 இற்கான விடைகளை 28.03.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

கு.குணாளன்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர் (தகுதிகாண்)
மீன்பிடி விஞ்ஞானத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 155 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே.ராஜகோபால்
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை

**புதிர் 155 க்கான கேள்வியும் விடையும்:**

இலங்கையில் நீர் வளர்ப்பில் (Aquaculture) பயன்படுத்தப்படும் மரபணு மேன்மைப்படுத்தப்பட்ட மீனினம் யாது?
GIFT TILAPIA

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 156

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

# நிலக்கண்ணி வெடி தடை குறித்த ஒப்பந்தத்திற்கு ஜனாதிபதிக்கு தெரியாமல் இணங்கப்பட்டுள்ளது

ஜனாதிபதிக்கு தெரியா மல் நிலக்கண்ணி வெடி தடை குறித்த ஒப்பந்தத்திற்கு இணங்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நிலக்கண்ணி வெடி தடை குறித்த சர்வதேச ஒப்பந்த த்திற்கு இணங்குவதற்கு முன்னதாக பாதுகாப்பு தரப்பின் ஆலோசனை எதுவும் பெற்றுக் கொள்ளப்பட வில்லை என பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சர்வதேச உடன்படிக்கைக்கு இணங்க முன்னதாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிற்கும் அறிவிக்கப் படவில்லை என குறிப் பிடப்படு கிறது.


இந்த விடயம் குறித்து ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சு அதிகாரிக ளிடம் விசாரித்துள்ளார்.

இந்த ஒட்டாவா பிரகடனம் காரணமாக இராணுவ முகாமகளை பாதுகாக்கும் நோக்கிலும்

நிலக்கண்ணி வெடி களை புதைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பிரகடனத்திற்கு இணாங்கப்பட்ட போதிலும் இதுவரையில் இலங்கை அதற்கு இணங்கவில்லை எனத் தெரி விக்கப்படுகிறது. (இ-5)

# நடு வீதியில் திடீரென தடம்புரண்ட கண்டெய்னர்



கொழும்பிலிருந்து பதுளை நோக்கி மதுபான போத்தல்களை ஏற்றிச் சென்ற கண்டெய்னர், பதுளை போகா மடித்தை என்ற இடத்தில் நேற்றுக் காலை நடுவீதியில் திடீரென தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்தில் சாரதியும் நடத்துநரும் காயங்களுக்குள்ளாகிய போதிலும் சாரதி ஆபத்தான நிலையில் பதுளை அரசினர் வைத்திய சாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பதுளை பொலிஸார் விபத்து குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-5)

# உரிமை கோரப்படாத வாகனங்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பானது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சான்றுப்பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றது.

எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 6 மாதகாலப் பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலை நாட்டும் படி குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 431 (2)ன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

உரிமை கோரப்படாத சான்றுப் பொருட்களின் விபரங்கள்

கோப்பாய் பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்ட சான்றுப் பொருட்க ளின் விபரம் வருமாறு,

NPGX 9349 இலக்க மோட்டார் சைக்கிள்- (இல.01 -வழக்கு இல.-33370), NPBAB 9353 இலக்க மோட்டார் சைக்கிள் (இல.02 -வழக்கு இல.3746), எரிந்த நிலையில் உள்ள NPGZ 7036 இலக்க முச்சக்கரவண்டி-(இல.-03 B/449/14)

யாழ்ப்பாண பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்ட சான்றுப் பொருட்கள்

11AA144211 இயந்திர இலக்கத்தினைக் கொண்ட 49CC வர்க்க மோட்டார் சைக்கிள் (இல.01 வழக்கு இல-23613), NPYL 1791 இலக்க மகேந்திரவர்க்க முச்சக்கரவண்டி (இல.02- வழக்கு இல.31139), NPPP 8761 இலக்கவெள்ளை நிற டிமோபட்டா வாகனம் இல. 03- வழக்கு இல-31409), NPVN 7344 இலக்க சிவப்பு நிற பல்சர் வர்க்க மோட்டார் சைக்கிள் (இல.04- வழக்கு இல 33614), EPTH 8075 இலக்க ரி.வி.எஸ்.ஸ்கூட்டிப்பப் வர்க்க மோட்டார் சைக்கிள் (இல.05- வழக்கு இல-34066), CHLLCLXA 110257 அடிச்சட்ட இலக்கத்தினைக் கொண்ட பச்சைநிற 49CC வர்க்க மோட்டார் சைக்கிள் (இல-06-வழக்கு இல-34124), 500-7875 இலக்க ஸ்கூட்டர் வர்க்க மோட்டார் சைக்கிள் (இல.07, வழக்கு இல-34804), NPJI 4961 இலக்க மோட்டார் சைக்கிள் (இல.08- வழக்கு இல.36054), LXDXCL 07 A9 260240 அடிச்சட்ட இலக்க த்தினையும் IP 2981 MOAA 2010 P2 40 இயந்திரஇலக்கத்தினையும்கொண்ட 49CCவர்க்க மோட்டார் சைக்கிள் (இல.09-வழக்கு இல.3623), 160-5484 இலக்க எரிந்த நிலையில் உள்ள சாளி வர்க்க மோட்டார் சைக்கிள், எரிந்த நிலையில் உள்ள ஆண்கள் துவிச்சக்கரவண்டி (இல-10- வழக்கு இல.37696/B/1013/14), NPVT 9578 இலக்க கறுப்பு நிற பல்சர் வர்க்க மோட்டார் சைக்கிள் (இல.11- வழக்கு இல- 38588), 206-7482 இலக்க பச்சைநிற முச்சக்கரவண்டி (இல.12- வழக்கு இல-41286), NPBHI 6234 இலக்க கறுப்புநிற டிஸ்கவர் வர்க்க மோட்டார் சைக்கிள் (இல.13- வழக்கு இல-A/ 590/14)

மறுதவணை 05.07.2016 என யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

# குருபூசை தின விழா

யாழ்ப்பாணத்திலுள்ள சிவ தொண்டன் சபையினரால் யோகசுவாமிகளின் 52 ஆவது குருபூசைத் தின விழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கொழும்புத்துறை சமாதிக் கோயிலிலும் யாழ்ப்பா ணம் சிவதொண்டன் நிலையத்திலும்குருபூசைக்கொண்டாட்டங்கள் நிகழவுள்ளன.

குருபூசைக்கு முந்திய மூன்று நாட்களும் சிவதொண்டன் நிலையத்து ஆச்சிரம வாழ்வு நாட்களாக அனுஷ்டிக்கப்ப டும். இந்நாட்களில் நற்சிந்தனை முற்றும் ஓதி நிறைவு செய்யப்படும்.

குருபூசைநாளன்று காலை 9.30 மணிமுதல் சுவாமிக ளது திரு மேனிக்குத் திவ்ய அபிஷேக ஆராதனைகள் நிகழும். பூசனை முடிவில் மகே ஸ்வர பூஜை நடைபெறும்.(இ

# கழுத்தில் வெட்டுக்காயத்துடன் வைத்தியரின் கணவர் மீட்பு

(கொழும்பு)

கராப்பிட்டிய வைத்தியசாலையல் பணிபுரியும் பெண் வைத்தியரொருவரின் கணவர் அவர்களது வீட்டின் அறையொன்றில் கழுத்தில் வெட்டுக்காயத்துடன் விழுந்து கிடநத நிலையில் மீட்கப்பட்டிருப்பதாக காலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தங்காலை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அபிவருத்தி உத்தியோகத்தராகக கடமையாற்றும் இவர், 39 வயதானவர் எனவும், ஒரு பிள்ளையின் தந்தை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கராப்பிட்டியவில் வாடகைக்கு எடுத்திருந்த வீட்டில் மனைவியுடனும், ஒன்றரை வயதான பிள்ளையுடனும் வசித்துவந்தார் எனவும் பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

நேற்று முன்தினம் அவரது அறையிலிருந்து கழுத்தில் வெட்டுக் காயத்துடன் மீட்கப்பட்டவர் கராப்பிட் டிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அவரது சகோதரரும் வீட்டில் இருந்ததுடன் அவர் கழுத்தை தானாகவே வெட்டிக் கொண்டாரா? அல்லது வெட்டப்பட்டாரா? என்ற சந்தேகம் எழுந்திருப்பதாகவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(இ-5)

# வன்புணர்வின் பின் யுவதி படுகொலை சகோதரர்கள் மூவருக்கு மரண தண்டனை

யுவதி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தி கொலை செய்த குற்றத்தின் அடிப்படையில் சகோதரர்கள் மூவருககு மரண தணடனை வழங்குமாறு தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

நோட்டன் பிரிஜ் - அலுஓய பிரதேசத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் மூவருக்கே இவ்வாறு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி இவர்கள் மூவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் நுவரெலியா மேல நீதிமன்றத்தில் குறித்த கொலையாளிகளுக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தார்.

அத்துடன், குற்றவாளிகள் மூவரும் 24, 32 மற்றும் 35 வயதானவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)




- 1241 - போலந்தின் கிராக்கோவ் நகரம் மங்கோலியர்களினால் சேதமாக்கப்பட்டது.
- 1438 - ஹாப்ஸ்பேர்க்கின் இரண்டாம் ஆல்பேர்ட் ஜேர்மனியின் மன்னனாக முடி சூடினான்.
- 1850 - அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1874 - வணிக உரிமைகளை வழங்கும் உடன்பாட்டில் ஹவாய் ஐக்கிய அமெரிக்காவுடன் கையெழுத்திட்டது.
- 1909 - ஐனார் டேசாவு குறுகிய அலை வானொலி அலைபரப்பியை உபயோகித்து முதலாவது ஒலிபரப்பாளரானார்.
- 1913 - கிரேக்கத்தின் முதலாவது ஜோர்ஜ் மன்னன் படுகொலை செய்யப்பட்டான்.
- 1922 - ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்ட மகாத்மா காந்தி ஆறு ஆண்டு சிறைத் தண்டனை பெற்றார். இரண்டு ஆண்டுகளில் விடுதலை ஆனார்.
- 1937 - டெக்சாஸ் மாநிலத்தில் நியூ லண்டன் நகரில்பாடசாலை ஒன்றில்ஏற்பட்ட இயற்கை வாயு வெடிப்பில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொல்லப்பட்டனர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்சையும் ஐக்கிய இராச்சியத்தையும் எதிர்த்துப் போரிட ஹிட்லரும் முசோலினியும் கூட்டிணைந்தனர்.
- 1945 - இரண்டாம்உலகப்போர்:1,250 அமெரிக்க குண்டு வீச்சு விமானங்கள் பேர்லின் நகரைத்தாக்கின.
- 1945 - இரண்டாம் உலகப்போர்: ஜப்பானில் ஜப்பானுக்கும் நேச நாடுகளுக்கும் இடையில் ஒகினவா சமர் ஆரம்பமாகியது.
- 1962 - அல்ஜீரிய விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.
- **1965 - சோவியத் விண்வெளி வீரர் அலெக்சி லியோனொவ் வஸ்கோத் 2 விண்கலத்தின் வெளியே 12 நிமிடங்கள் நடமாடி விண்வெளியில் நடந்த முதல் மனிதன் ஆனார்.**
- 1989 - எகிப்தில் 4,400 ஆண்டுகள் பழைமையான பதனிடப்பட்ட உடல் பிரமிட் ஒன்றினுள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1990- கிழக்கு ஜேர்மனியில் 1932 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதற் தடவையாக தேர்தல் இடம்பெற்றது.
- 2003 - ஐக்கிய அமெரிக்கா ஈராக்குடன் போரை ஆரமபித்தது. ஈராக்கின் மத்திய வங்கியிலிருந்து 1 பில்லியன் பெறுமதியான பணம் சதாம் ஹுசேனினாலும் அவரது குடும்பத்தினராலும் எடுத்துச் செல்லப்பட்டது.

**பிறப்புக்கள்**

- 1828 - வில்லியம் கிரேமர், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ. 1908)
- 1837 - குரோவர் கிளீவ்லாண்ட், ஐக்கிய அமெரிக்காவின் 22ஆவது, 24ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1908)
- 1858 - ருடோல்ஃப் டீசல், ஜேர்மனியக் கண்டுபிடிப்பாளர் (இ. 1913)
- 1919 - இந்திரஜித் குப்தா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவர். (இ. 2001)
- 1936 - பிரடெரிக் கிளார்க், தென்னாபிரிக்க ஜனாதிபதி, நோபல் பரிசு பெற்றவர்

**இறப்புக்கள்**

- 1996 - ஒடீசியஸ் எலீட்டிஸ், நோபல் பரிசு பெற்ற கிரே க்க எழுத்தாளர் (பி. 1911)
- 2007 - பாப் வுல்மர், துடுப்பாட்டக்காரரும் துடுப்பாட்ட பயிற்சியாளரும் (பி 1948)



**அலெக்சி லியோனொவ்**

அலெக்சி ஆர்க்கிபோவிச் லியோனொவ் 1934 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி பிறந்தார். இவர் சோவியத் ரஷ்யாவின் இளைப்பாறிய விண்வெளி வீரரும், சோவியத் வான் படையின் ஜெனரலும் ஆவார். இவர் மார்ச் 18, 1965 இல் விண்வெளியில் நடந்த முதல் மனிதன் என்ற பெயரைப் பெற்றார். இவர் 1965 இலும் 1975 இலும் இரண்டு தடவைகள் சோவியத் ஒன்றியத்தின் வீரர் என்ற விருதைப் பெற்றார். லெனின் விருது பெற்றவர்.

# சீபாவில் கைமெழுத்திட மறுத்ததால் இந்தியா மகிந்தவை தோற்கடித்தது

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

**சீபா உடன்பாட்டில் கைமெழுத்திட மறுத்ததால், இலங்கை ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்க இந்தியா வெளிப்படையாகவும் இரகசியமாகவும் பணியாற்றியதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றம்சாட்டியுள்ளார்.**

கொழும்பில் ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி நிறுவகத்தில், "எட்கா மரணப் பொறியில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவோம்" என்ற தொனிப்பொருளில் நடந்த கருத்தரங்கில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தனது பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் நோக்கிலேயே தற்போதைய அரசாங்கத்தை பதவிக்கு கொண்டு வருவதற்கு இந்தியா உதவியது.

இப்போது அவர்கள் சீபாவை, எட்கா என்று மாற்றியுள்ளனர்.

தமது நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்காக இங்கு கைப்பொம்மை அரசாங்கம் ஒன்றை இந்தியா உருவாக்கி வைத்துள்ளது.

இந்தியாவின் புலனாய்வுப் பிரிவான 'றோ', ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருந்தவர்களை எதிரணிக்கு கொண்டு செல்வதற்காக முழுநேரமாக பணியாற்றியது.

சந்திரிகா ஆட்சிக்காலத்தில் இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினால், எமக்கு என்ன பலன் கிடைத்தது?

பெருமளவில் இந்தியாவின் ஏற்றுமதிகள் அதிகரித்தன.

இந்தியாவுக்கான இலங்கையின் ஏற்று மதி சிறியளவில் தான் அதிகரித்தது. இந்தியர்களே அதனையும் ஏற்றுமதி செய்து வருமானம் ஈட்டினர்.

உலர்ந்த பாக்கு, பாம் எண்ணெய், பழைய இரும்பு போன்றவற்றைத்தான் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்தோம்.


இந்த தொழில்களின் உரிமையாளர்கள் இலங்கையர்களல்ல, இந்தியர்கள்தான்.

இந்தியாவுக்கு தடையின்றி ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்ட பல பொருட்களை எம்மால் அனுப்ப முடியாது.

கழுதை இறைச்சியும் அவ்வாறு அனுமதிக்கப்பட்ட ஒரு பொருள்தான்.

ஆனால், கழுதை இறைச்சியை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய முடியுமா?" என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

# சீன மீன்பிடிப் படகை மூழ்கடித்த ஆர்ஜென்டீனா



ஆர்ஜென்டீன நாட்டின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த சீன நாட்டுப் படகை ஆர்ஜென்டீன கடலோரக் காவல் படையினர் துப்பாக்கிகளால் சுட்டுக் கடலுக்குள் மூழ்கடித்துள்ளனர்.

சீன நாட்டு கொடியுடன் வந்த அந்த படகில் இருந்தவர்களை 'எல்லை தாண்டி வந்துள்ளீர்கள்' என கடலோரக் காவல்படையினர் எச்சரித்தனர்.

அந்த எச்சரிக்கையை அவர்கள் பொருட்படுத்தாததுடன், அவ்வழியாக சென்ற கடற்படை படகின் மீது மோதுவதுபோல் வந்ததால், இயந்திர துப்பாக்கிகளால் சரமாரியாக சுட்ட கடலோரக் காவல்படையினர் அந்த மீன்பிடி படகை கடலுக்குள் மூழ்கடித்துள்ளனர். படகில் இருந்த நான்கு சீன மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து சீனா கடும் விசனத்தை வெளியிட்டுள்ளது.

இது குறித்து தக்க விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சீன வெளியுறவு அமைச்சு அழுத்தம் கொடுத்துள்ளது.

எனினும் பிராந்தியத்தில் சட்ட விரோத மீன்பிடிப்பு ஒரு பொதுவான பிரச்சினையாக மாறியுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் சீனா மற்றும் ஆர்ஜென்டீனாவுக்கு இடையிலான உறவில் அதிக நெருக்கம் ஏற்பட்டிருக்கும் சூழலிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பிரிட்டனில் கடும் சட்டம்

## குறைந்த வருமானம் பெறுபவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற முடிவு

பிரித்தானியாவில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக பணி புரிந்து வரும் வெளிநாட்டவர்களில் 35 ஆயிரம் பவுண்டுகளுக்கும் குறைவாக வருவாய் ஈட்டுபவர்களை வெளி யேற்ற அரசு முடிவு செய்துள்ளது.

இதனால் பாடசாலை ஆசிரியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தி ஆண்டு தொடக்கத்தில் மனு ஒன்று அளிக்கப்பட்டு அதை கடந்த வாரம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்திருந்தனர்.

திறமையான வெளிநாட்டுத் தொழிலாளி ஒருவர் பிரித்தானியாவில் குடியிருக்க வேண்டும் எனில்,

வேலை தரும் நிறுவனம் ஒன்று அவருக்கு 20 ஆயிரம் 800 பவுண்டு ஊதிய மாக வழங்க வேண்டும்.

வங்கிக்கணக்கில் குறைந்தது 90 நாட்களுக்காவது 945 பவுண்டு சேமிப்பு இருக்க வேண்டும்.

வேலை வழங்குபவர்களிடம் இருந்து Sponsorship சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

சுகாதார கட்டணமாக 200 பவுண்டு அளிக்க வேண்டும்.

ஆங்கில மொழியில் திறமையை நிரூபிக்க வேண்டும்.

Tier - 2 இந்த விசா கைவசம் வைத்திருப்பவர்கள் 5 ஆண்டுகள் முடிவில் புதிதாக மனு அளிக்க வேண்டும், இப்படி மனு அளிப்பவர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் இருந்து 35 ஆயிரம் பவுண்டுகள் வருவாய் ஈட்ட வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

தற்போது மருத்துவ தாதியர்களை மட்டும் தாற்காலிகமாக இந்த சட்டத்தில் இருந்து விடுவித்துள்ளனர்.

ஆனால் எதிர்காலத்தில் தாதியர்களுக்கும் இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு இந்த புது சட்டத்தில் இருந்து விடுப்பு வழங்கப்படவில்லை.

மேலும் 2011 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொழில் நிமித்தமாக குடியேறிவர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது எனவும் அவர்கள் வெளியேற்றப்பட மாட்டார்கள் எனவும் கூறுகின்றனர்.

மேலும் பத்தாண்டுகளுக்கும் மேலாக குடியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கும் இந்த புதுச் சட்டம் பொருந்தாது, மட்டுமின்றி அவர்களுக்கு ஊதிய வரைமுறை கட்டுப்பாடுகளும் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு முதல் மாணவருக்கான விசாவில் இருப்பவர்கள் நேரிடையாக தொழில் முறை விசாவிற்கு விண்ணப்பிக்கலாம்.

மேலும் புது வருவாய் வரைமுறை தொழில் முறை விசாவிற்கு விண்ணப்பித்துள்ளவர்களுக்கும் இச்சட்டம் பொருந்தாது.

பிரித்தானிய குடிமக்களை திருமணம் செய்து கொண்டவர்களுக்கு இந்த புதுச் சட்டம் பொருந்தாது.

இச் சட்டம் அடுத்த மாதம் அதாவது ஏப்ரல் மாதம் முதல் அமுலுக்கு கொண்டுவரப்படும் எனவும், இது தொடர்பில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதாயின் 03001232241 என்னும் இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தலாம் என பிரித்தானிய குடியகல்வு குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-5)

# கூட்டுப்படையின் தாக்குதலில் ஏமனில் சந்தை தகர்க்கப்பட்டது

## 41 பேர் பலி; 35 பேர் படுகாயம்



சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படையின் தாக்குதலில் வடக்கு ஏமனில் 41 பொது மக்கள் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 35 பேர் காயமடைந்துள்ளனர்.

ஹஜ்ஜா மாகாணத்தின் பரபரப்பான சந்தை பகுதியில் நேற்று முன்தினம் இரண்டு ஏவுகணைகள் தாக்கியதாக சம்பவத்தை பார்த்தவர்கள் விபரித்துள்ளனர். தாக்குதலுக்குப் பின்னர் அங்கு பிடிக்கப்பட்ட வீடியோவில் சடலங்கள் சிதறி இருப்பதை காண முடிகிறது.

ஏமன் அரசு தரப்புடன் போராடி வரும் ஷியா ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டிலேயே ஹஜ்ஜா மாகாணம் உள்ளது. இந்த வான் தாக்குதல் குறித்து சவுதி தரப்பு எந்த பதிலும் அளிக்கவில்லை. ஏமனில் சிவிலியன் இலக்குகள் மீது வான் தாக்குதல்கள் நடத்தப்படுவது குறித்து குற்றம்சாட்டிய ஐ.நா. குழு, சில தாக்குதல்கள் மனித குலத்திற்கு எதிரான குற்றச்செயல் என்று குறிப்பிட்டது.

ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவுதி கூட்டுப்படை கடந்த 2015 மார்ச் மாதம் தொடக்கம் ஏமனில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. அது தொடக்கம் 6,200 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு இதில் அதிகளவானோர் சிவிலியன்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வர்த்தக நிலையத்தை உடைத்து பொருட்கள் திருடப்பட்டுள்ளன



கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று நேற்று முன்தினம் இரவு புதன்கிழமை உடைக்கப்பட்டு அங்கிருந்த 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

பருத்தித்துறை-யாழ்ப்பாணம பிரதான வீதியில் அமைந்துள்ள பலசரக்கு விற்பனை நிலையத்திலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

விற்பனை நிலையத்தின் சீற்றினைக் கழற்றி உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பால்மா, பிஸ்கட் உள்ளிட்ட ரூபா 50 ஆயிரம் பெறுமதியான பொருட்கள் திருடிக் கொண்டு பின்பக்க கதவு வழியாக சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் நேற்று நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-60)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-17.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 143.02 | 146.95 |
| பவுண்ட் | பிரிட்டன் | 201.21 | 210.43 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 159.38 | 165.73 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 145.25 | 151.29 |
| டொலர் | கனடா | 108.47 | 112.87 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 107.63 | 112.64 |
| டொலர் | சிங்கப்பூர் | 104.27 | 108.26 |
| ரூபா | இந்தியா | 2.1422 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6976 |
| குவைத் | டினார் | 478.5978 |
| ஓமான் | ரியால் | 373.7808 |
| கட்டார் | ரியால் | 39.5194 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3708 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1789 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சுன்னாகம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார் மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 120 | 80 | 120 | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 65 | 70 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 1220 | 160 | 120 | 160 | 140 | 160 | 120 |
| தக்காளி | 30 | 40 | 20 | .30 | 40 | 40 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 50 | 60 | 60 |
| கோவா | 30 | 40 | 40 | 60 | 50 | 80 | 50 |
| கரட் | 60 | 100 | 80 | 90-200 | 100 | 120 | 80 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 | 40 | 50 | 60 |
| புடோல் | 40 | 30 | 30 | 60 | 60 | 50 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 60 | 50 | 60 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 65 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 100 | 140 | 120 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 60 | 50 | 80 | 120 | 50 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 60 | 80 | 70 | 120 | 80 |
| பயற்றங்காய் | 100 | 50 | 30 | 50 | 60 | 60 | 50 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 70 | 40 | 60 | 80 | 50 |
| கறிமிளகாய் | 140 | 80 | 100 | 140 | 20 | 140 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300 | 400 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 100 | 120 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 60 | 60 | — | 100 | 90 |
| கீரை - 1பிடி | 40 | 10 | 20 | 40 | 40 | 30 | .40 |
| தேசிக்காய் | 140 | 100 | 100 | 100 | 120 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-35 | 50 | 40 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 150 | 200 | 100 | 140 | 140 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 140 | 80 | 100 | 100 | 50 | 120 | .80 |
| முள்ளங்கி | 40 | 50 | 20 | 40 | 40 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 150 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 50 | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## டில்லியில் ராஜீவ்காந்தி–பிரபாகரன் சந்திப்பு 1334

**நம்பிக்கையில்லை**

தொடர்ந்து அவர் உங்களது இயக்கத்திற்கும் பொதுவாகத் தமிழ் மக்களுக்கும் ஜெயவர்த்தனவிடம் நம்பிக்கையில்லை என்பது எனக்குத் தெரியும். அவர் மீது கடும் அழுத்தம் பிரயோகித்து இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறோம். மாகாணசபைத் திட்டத்தில் குறைபாடுகள் இருந்தாலும் பின்பு பேச்சுவார்த்தை நடத்தித் தமிழரின் சுயாட்சி அதிகாரத்தைக் கூட்டலாம் அல்லவா? அத்தோடு. இந்த மாகாணசபைத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப் படுத்துவது சாத்தியமல்ல. அதற்கு காலம் தேவை. அதற்கு முன்னதாக வடகிழக்கில் ஓர் இடைக்கால அரசை நிறுவலாம். அதில் உங்களது அமைப்பிற்கு பிரதான பங்கு வழங்கலாம் என்றார்.

பிரபாகரனுக்கு எதிலும் நம்பிக்கை இல்லை. எதிலுமே ஆர்வம் காட்டவில்லை. ஆனால் பண்ருட்டியார் மிகவும் ஆர்வத்துடன் ராஜீவ்-பிரபாகரன் ஒப்பந்தத்துக்கு ஒரு வடிவம் கொடுக்க முயன்று கொண்டிருந்தார்.

வடகிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாக ஆட்சி நிறுவப்பட்டு அதில் விடுதலைப்புலிகளுக்கு பெரும்பான்மை பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என ராஜீவ் கேட்டுக்கொண்டார். பிரபாகரன் அதற்கு இணங்கவில்லை. இறுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஈரோஸ் அமைப்புக்கு மட்டும் குறைந்த அளவில் பிரதிநிதித்துவம் வழங்குவதென இனங் காணப்பட்டது. இடைக் கால நிர்வாக ஆட்சியின் கட்டமைப்பு, அதிகாரம், செயற்பாடு பற்றி விபரமாகப் பேசப்படவில்லை. ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் பேசி இறுதி முடிவு எடுப்பதென ராஜீவ் காந்தி வாக்குறுதி அளித்தார். தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டுமெனவும் சிங்கள அரசாங்கம் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறக்கக்கூடாது என்றும் பிரபாகரன் கேட்டுக் கொண்டார். அதற்கு ராஜீவ் காந்தி இணக்கம் தெரிவித்தார்.

**ஆயுதங்கள்**

இறுதியாக ஆயுத ஒப்படைப்பு விவகாரம் எழுந்தது. ஆயுதங்கள் முழுவதையும் ஒப்படைக்குமாறு நாம் கேட்கவில்லை. நல்லெண்ண சமிக்ஞையாகச் சிறு சிறு பகுதி ஆயுதங்களைக் கொடுத்தால் போதும் என்றார் இந்தியப் பிரதமர்.

அப்பொழுது அதிகாலை இரண்டு மணி இருக்கும் அன்று காலை ஒன்பது மணியளவில் டில்லியிலிருந்து கொழும்பு புறப்பட இருந்தார் ராஜீவ்காந்தி. பிற்பகல் மூன்று மணிக்கு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாக இருந்தது. புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் ஏதோ ஒரு சுமுகமான இணக்கத்திற்கு வந்ததுபோல மகிழ்ச்சியுடன் காணப்பட்டார் பிரதமர்.

பிரபாகரனுக்கு மனதில் மகிழ்ச்சி இல்லை. அவரது முகத்தில் அது தெளிவாகத் தெரிந்தது.

நீங்கள் எதற்கும் கவலை கொள்ளத் தேவையில்லை. கொடுத்த வாக்குறுதிகளை நான் காப்பாற்றுவேன் என்றார் ராஜீவ்காந்தி.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளது பற்றி பாலசிங்கம் முறையிட்டார். பிரபாகரன் மீதான தடுப்புக் காவலை அகற்றி அவரைத் தமிழீழம் அனுப்புவதற்கு உடன் ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார் ராஜீவ் காந்தி.

**சிங்களவர் கலவரம்**

இதற்கிடையே ராஜீவ் காந்தி இலங்கை செல்வதற்கு முன்பே ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துச் சிங்களவர் கலவரத்தில் ஈடுபட்டனர்.

ஒப்பந்தத்துக்கு முன்னாள் பிரதமரும் லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான சிறிமாவோ பண்டாரநாயகா கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இதற்காகக் கொழும்பில் பேட்டை என்ற இடத்தில் கூடும்படி தன் ஆதரவாளர்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார். அதை ஏற்று காலை 28.07.1987 அன்று காலை 10 மணிக்குப் பேட்டையில் உள்ள பேருந்து நிலையத்திலும் ரயில் நிலையத்திலும் ஆயிரக்கணக்கான சிங்களவர்களும், புத்த மத சாமியர்களும் திரண்டனர்.

அங்கு பொதுக்கூட்டத்தில் பேசுவதற்காக சிறிமா வோ பண்டாரநாயக்கவும் அவர் மகன் அனுரா பண்டாரநாயக்கவும் வந்தார்கள்.

சமரச திட்டத்தின்மூலம் இலங்கையை இந்தியாவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் விற்கப் போகிறார்கள் என்று அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

**தடியடி கண்ணீர் புகை**

அப்போது கூட்டத்தினர் கறுப்புக் கொடிகளைக் காட்டியபடி அருகில் உள்ள அரசாங்க கட்டடங்களை கல் வீசித்தாக்கத் தொடங்கினார்கள்.

இதைத் தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்கப் பொலிஸார் தடியடி செய்து கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினார்கள்.

ஒரு கண்ணீர்ப் புகை குண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க அருகில் போய் விழுந்தது. இதனால் கூட்டத்தினர் மேலும் ஆவேசம் அடைந்து கட்டடங்களுக்குத் தீ வைத்தனர்.

இந்த ரகளையில் சிறிமாவோ பண்டார நாயக்கவுக்கு லேசான காயம் ஏற்பட்டது. அவரை ஒரு காரில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள்.

அதன் பிறகு கலவரம் வலுத்தது. கல்வீச்சு, தீ வைப்பு, சூறையாடல் சம்பவங்கள் நகரத்தின் மற்ற பகுதிகளுக்குப் பரவின.



(தொடரும்)

# மீண்டும் மின்சாரத்தடை ஏற்பட்டால் அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்புவேன்

## பிரதமர் ரணில் எச்சரிக்கை



(கொழும்பு)

**நாட்டை நெருக்கடிக்குள்ளாக்கும் இன்னொரு மின்சாரத் தடை ஏற்படுமானால், பல உயர் அதிகாரிகள் வீட்டுக்குச் செல்ல நேரிடும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களை நேற்று முன்தினம் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட மின்சாரத் தடைகளுக்கு மின்சார சபை உயர் அதிகாரிகளின் சதியே காரணம் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அதேவேளை மின்சாரத் தடைக்கான காரணங்களைக் கண்டறிவதற்கான விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விசாரணைகளில், மின்சாரத் தடைக்கு சதித்திட்டங்களே காரணம் என்று கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர்கள் பலரும் எச்சரித்துள்ளனர். (இ-5)

### மகிந்தவின் அவதாரங்கள் விரைவில் வெளிவரும்

# மக்களை நாங்கள் மறந்து விடவில்லை

## அமைச்சர் ஹரீன் தெரிவிப்பு

நல்லாட்சியைத் தோற்றுவித்ததிலிருந்து அரசாங்கத்தின் செயற்பாடுகள் மந்த கதியிலேயே உள்ளன. ஆனால் அதன் பிரதிபலன்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது நம்பிக்கை கொண்டு வாக்களித்த மக்களுக்கு வெகுவிரைவில் கிடைக்கும். மக்களை நாங்கள் மறந்துவிடவில்லையென டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் வலுவாக்கல் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ நம்பிக்கை வெளியிட்டார்.

மின் உற்பத்திச் செயற்பாடுகளில் தமது நாசகாரச் செயற்பாடுகளை காண்பித்து குழப்ப முற்படும் மகிந்தவின் அவதாரங்கள் யார் என்பதையும் விரைவில் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துவோம் எனவும் குறிப்பிட்டார். நல்லாட்சி அரசாங்கத்தின் இருப்பை தக்க வைத்துக் கொள்வது தொடர்பில் இடம் பெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை உருவாக்கிய பின்னர் அபிவிருத்திச் செயற்பாடுகள் மந்தகதியிலேயே இடம்பெறுவதாக ஒரு எண்ணத்தை மக்களிடையே உருவாக்கி, அதனூடாகத் தம்மை வலுப்படுத்திக்கொள்ள கூட்டு எதிர்க்கட்சியை சேர்ந்த சிலர் முயற்சிக்கின்றனர்.

ஆனால் மகிந்தவின் அவதாரங்கள் அவரை வைத்து மீண்டெழ எத்தனை முறை முயற்சித்தாலும் அது அவர்களால் முடியாது என்பதே உண்மையான நிலைப்பாடு. அது தெரிந்திருந்தும் நல்லாட்சி அரசாங்கத்தில் குறைபாடுகள் உள்ளதென சுட்டிக்காட்டி மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முற்படுகின்றனர்.

இதற்காக பாரிய ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கின்றனர். இவர்கள் போல் ஆர்ப்பாட்டங்கள் செய்வது எமக்கு புதிய விடயமல்ல. ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்தைக் காட்டுவதற்காகவே ஆளும்கட்சியாக இருந்தும் வீதியிலிறங்கி எமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம்.

ராஜபக்ஷக்களின் அவதாரங்கள் அரசாங்க செயற்பாடுகளுக்கு இடையூறு செய்வது போன்று மின் உற்பத்தி நிலையங்களிலும் தமது நாசகார வேலைகளை அரங்கேற்றி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்த முற்படுகின்றனர். இந்தச் செயற்பாடுகளுக்கும் விரைவில் முற்றுப்புள்ளி வைப்போம். இவ்வாறான செயற்பாடுகளினாலும் நாட்டை கடந்த அரசாங்கம் கடன் குகைக்குள் தள்ளிவிட்டுள்ளதாலும் நல்லாட்சி அரசாங்கம் துரித கதியில் பயணிப்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. எனினும் சிக்கல்களை களைந்து விரைவில் நாட்டை வளமான அபிவிருத்தியை நோக்கி நகர்த்துவோம்.

நாம் கூறியது போன்று விரைவில் 10 இலட்சம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவோம். அதனால் நாம் எமது மக்களை கவனிக்கவில்லையென கவலை கொள்ள வேண்டாம். மந்த கதியில் பயணித்தாலும் வெகுவிரைவில் நல்லாட்சியை உருவாக்கிய மக்களுக்கான பிரதிபலன்களை பெற்றுக்கொடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வெள்ளைக்கொடி விவகாரம் பற்றி உடனடி விசாரணைகள் அவசியம்

### மாகாணசபை உறுப்பினர் கோரிக்கை

எல்லாளன் தொடக்கம் பிரபாகரன் வரை "தமிழன்" வீரமுள்ளவன் என்பதை சிங்களதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது என்பது முன்னாள் இராணுவத் தளபதி அமைச்சர் சரத் பொன்சேகாவின் உரை எடுத்தியம்பியுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணியின் உபபொதுச்செயலாளரும் மேல்மாகாணசபை உறுப்பினருமான சண்.குகவரதன் தெரிவித்துள்ளார்.

வெள்ளைக்கொடி விவகாரத்தை விசாரிப்பதன் மூலம் சரணடைய வந்தவர்களை கொலைசெய்ய உத்தரவிட்ட சர்வாதிகாரி யார்? என்ற உண்மையை சர்வதேசம் தெரிந்துகொள்ளும் உண்மை வெளிவரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் முன்னாள் இராணுவத் தளபதியும், பீல்ட் மார்ஷலும், அமைச்சருமான சரத் பொன்சேகா ஆற்றிய உரை தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே சண்.குகவரதன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவுக்கு போரின் உண்மை தெரியும். எனவே, அவரது உரையில் வெளியிடப்பட்டவை உண்மை என்பதை உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் ஏற்றுக்கொள்வார்கள்.

போர் முடிந்த பின்னரும் பிரபாகரன் இறக்கவில்லை எனக் கூறியுள்ளமை பல்வேறு சந்தேகங்களை கிளப்பியுள்ளது.

போர்க் காலத்தில் கொல்லப்படாத பிரபாகரன் எவ்வாறு கொல்லப்பட்டார்? சர்வதேச போர் சட்டங்களை மீறி அவரைக் கொலை செய்ததாகவே இதனைப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

அத்தோடு வெள்ளைக் கொடி விவகாரமும் விசாரிக்கப்பட வேண்டும். அப்போது உண்மைகள் வெளியாகும் என்ற விடயமும் பாரியதொரு கேள்வியை முன்வைத்துள்ளது.

அதுதான் வெள்ளைக் கொடியுடன் இராணுவத்தினரிடம் சரணடைய வந்தவர்கள் கொலைசெய்யப்பட்டார்களா? அதற்கான உத்தரவை வழங்கிய சர்வாதிகாரி யாரென்ற விடயங்களை விசாரணைகள் மூலம் உலகிற்கு எடுத்தியம்பலாம்.

ராஜபக்ஷ குடும்பத்தின் தில்லுமுல்லுகள், அராஜகங்கள், ஊழல்மோசடிகள் அனைத்தும் இன்று வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

"தேசப்பற்று" என்ற போர்வையை போர்த்திக் கொண்டு தேசவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்ட ராஜபக்ஷ குடும்பத்தை மக்கள் நிராகரிக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் சண்.குகவரதன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

### இன்று ஒரு தகவல்

#### வேறுபட்ட மனங்களின் விநோதப் போக்குகள்

நெருங்கிய இரத்த உறவுகளிடையே கருத்து வேறுபாடு எழுவது சகஜம்.

பாச உணர்வுகள் சுண்டப்படும் நேரத்தில் வளர்த்துக் கொண்டுவிட்ட மேலோட்டமான பகைமை உணர்வுகளுக்கு முக்கியத்துவம் தந்து அவற்றிற்கு பலி பீடம் அமைக்க பலராலும் எப்படி முடிகிறது? வியப்பான ஒன்று தான்!

வேறுபட்ட மனங்கள்

பழிவாங்கும் எண்ணம், நான் தான் திறமையானவன் என்று வல்லமை கூறும்; அவச்சொல் பேசும்; ஒடுக்கிவிடத்துடிக்கும் திசைக் கொன்றாய் இழுக்கும். இறுதியில் அறுத் துக் கொண்டுவிடும்.

இரத்த உறவுகளிடம் உள்ள குறைவி னால் ஏற்படும் கருத்து வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தாமலும் முக்கியத்துவம் அளிக்காமலும் இருப்பதே இத்தகைய பிரச்சினைகளைச் சமாளிக்கும் வழியாகும். வேறுபட்ட இரு மனங்களுக்கிடையே ஏற்பட்டு விட்ட போட்டி ஆரோக்கியமற்ற ஒன்றாகும்.

குடும்பத்திற்கும் குலத்திற்கும் வைக்கும் அதிர்வேட்டு போன்ற இப் போட்டி சுற்றி இருப்போர் கைகொட்டி சிரிக்க ஏதுவாகும்.

போட்டி போன்ற சூழ்நிலை உருவாகி யதுமே பின்வாங்கத் தொடங்குவதே முறையான செயலாகும்.

இதில் வெற்றிபெற்றுவிட்டதாக எண்ணும் மனத்தின் வெற்றி உண்மையான வெற்றியே ஆகாது. தோல்வியை வலியச் சென்று வரவழைப்பதா என்று எண்ணும் மனத்தின் செயல் தோல்வி ஆகாது என்பதை உணர வேண்டும். இதன் உண்மையான பலன் உடனே தெரியாது. நாட்பட விளங்கும். கேள்விப்படும் நான்கு பேர் தீர்ப்பும் அதுவாகவே இருக்கும்.

மனத்தின் தற்காலிகமான உணர்வுகளுக்கு செயல் வடிவம் தருபவர்கள் அதை எண்ணி நிரந்தரமாக வருந்த வேண்டி வரும். பொறியில் ஒருகால் சிக்கிக் கொண்டு விட்டது என்றால் அதை இதமாக எடுக்க முயல வேண்டுமே தவிர இரண்டாவது காலையும் அதனுள் விடுவது புத்திசாலித்தனமாகாது. அதைப்போன்ற செயலே இத்தகைய நடவடிக் கைகளில் மேலும் முழுவேகம் கொண்டு இறங்குவது.

சேற்றை மற்றவர் உடம்பில் பூச விரும்புகிறவர்கள் அதை நம் கையிலால் அல் லவா எடுக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மற்றவர்கள் உணர்ச்சிவசப்படும் பொழுது அவர் களை ஒரு மனநோயாளி போலவும் பச்சிளங் குழந்தையாகவும் எண்ண வேண்டும். கட்டுப்பாடற்ற சக்தி இவர்களை ஆட்டிப் படைக்கிறதே என்று எண்ணிப் பரிதாபம் கொள்ள வேண்டும். அத்தகைய கட்டுப்பாடற்ற சக்தி நம்மையும் பாதித்து விடாத படி நிதானத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

அவர்கள அமைதியாய் சகஜ மனநிலையுடன் இருக்கும் போதும் உங்களுக்கும் அத்தகைய மனநிலை இருக்கும் போதும் கலந்து பேசலாம்.


பேசிப் புண்ணியம் இல்லை என்று தோன்றினால் மாற்றுச் செயலில் இறங்காதீர்கள். மாறாக விலகி ஒதுங்குங்கள்.

உறவானது–சிறப்பாக இல்லாவிட்டாலும்–சாதார ணமாக இல்லாவிட்டாலும்–மோச மாகி விடாமல் இருந்தால்–அதுவே போதுமானது.

**லேனா தமிழ்வாணன்**

# 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் எமது பிரதேசத்திற்கு பொருத்தமானதா

## விமர்சனத்திற்குள்ளானது ஏன்?



வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் அரசாங்கத்தின் வீட்டுத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் வீடுகள் தொடர பாக பல்வேறுபட்ட விமர் சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாதிரி வீடு யாழ்ப்பாணம் உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் அமைக்கப்பட்டு அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயனாளியிடம் கையளித்திருந திருந்தார்.

மேற்படி வீட்டுத்திட்டத்தில் அமைக்கப்படும் ஒரு வீடு 2.1 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படுகின்றது. இவை பொருத்துகை வீடுகளாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டில் இரண்டு அறைகள், ஒரு வரவேற்பறை, சமையலறை மற்றும் மலசலகூடம் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் வீட்டுக் கட்டுமானம் மாத்திரமின்றி 3 கட்டில்கள் அவைக்குரிய மெத்தைகள், 1 அலுமாரி, வரவேற்பு அறை இருக்கைகள், மேசைகள், 1 மடிக்கணனி, 2 சுழல் கதிரைகள், தொலைக் காட்சி, தொலைபேசி,மின்சாரம், இன்ரநெற் வசதி, தளபாடங்கள், சமையல் பாத்திரங்கள், காஸ் அடுப்பு ஆகியனவும்உள்ளடக்கப்பட்டுள்ளன.

பொருத்துகை வீடுகள் எமது பிரதேசத்துக்கு பொருத்தமில்லையெனவும், மேற்படி பெறுமதியில் எமது சூழலுக்கு பொருத்தமான இரண்டு வீடுகளை அமைக்க முடியும் எனவும் பலரால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டும் வருகின்ற நிலையில் இவ்வீட்டுத் திட்டம் தொடர்பான சிலரின் கருத்துக்கள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன.

**"வீடே இல்லாமல் இருந்த எனக்கு இது சொர்க்கமே" என புதிதாக அமைக்கப்பட்ட வீட்டினை பெற்றுக்கொண்ட் பயனாளி தர்மராஜினி லக்ஸ்மனன் தெரிவித்துள்ளார்.**

அந்த வீடு எனக்கு முழுக்க முழுக்க திருப்தியா இருக்கு. யுத்தத்தால் கணவனை பறிகொடுத்திட்டு சின்ன பிள்ளைகளோட சரியான கஷ்டப்பட்டனான். சண்டை முடிஞ்ச காலத்தில இருந்து நான் ஒரு வீட்டுக்காக அலையாத இடமே இல்ல. இதுவரைக்கும் எங்களுக்கு யாரும் உதவி செய்ய முன்வரவும் இல்ல இப்ப வந்து ஏன் இந்த வீட்டை வாங்கினீங்கள் எண்டு சிலர் கேக்கினம்.

இந்த வீடு எத்தனை காலத்துக்கு இருக்கும் எண்டு எனக்கு தெரியா. கட்டித்தந்த ஆக்கள் 35 வருசத்துக்கு மேல இது இருக்கும் என சொன்னவே.பிழை என்டா திருத்தி தருவம் எண்டும் சொன்னவே நாங்கள் அத நம்பிறம்.

என்ர பிள்ளையள் கட்டில்ல படுத்தது கிடையாது. லையிட்டில படிச்சது கிடையாது. ரீவி பாத்தது கிடையாது இப்ப எல்லாத்தையும் அனுபவிக்கினம் .இதை எல்லாம் நான் என்ர பிள்ளைகளுக்கு வாங்குவன் எண்டு நினைச்சும் பாக்கேல. வாங்கிறதுக்கும் எனக்கு வசதி இல்ல. இந்த வீட்டில குறை சொல்லுறதுக்கு ஒண்டும் இல்ல வீடே இல்லாம இருந்த எனக்கு இது பெரிய கொடை எண்டு தான் சொல்லுவன் .

முந்தின வீட்டுத்திட்டம் போல வந்தாலும் அதுக்கு கடன் வாங்க வேணும் .தனி ஒரு பொம்பிளையா எல்லா சாமானும் வாங்கி வீடு கட்ட என்னால முடியாது. ஆனா இது எனக்கு ஒரு வேலையும் இல் லாம எல்லா வசதியோட வீடு கிடைச்சிருக்கு என தெரிவித்தார்.

**"தருவதை தட்டிக்கழிக்காமல் முதலில் பெற்றுக்கொள்ள அனுமதியுங்கள்" என வீட்டுத் திட்டத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் ஒருவர் தெரிவிக்கையில் (பெயர் குறிப்பிட விரும்பவில்லை)**

சர்வதேச நிபுணர்களால் அங்கீகரிக்கப்பட்டு ஒரு அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத்திட்டத்தை குறை கூற முடியாது. எல்லாவற்றையும் இழந்து வீதியில் நிற்கும் எமது மக்களுக்கு கிடைக்க வேண்டிய சிலவற்றையும் கிடைக்கவிடாது தடுப்பது முறையல்ல.

இந்த வீட்டுத்திட்ட முறையில் பலர் பலவிதமான கருத்துக்களை கூறி வருகின்றனர். முதலில் கிடைப்பதை பெற்றுக்கொள்ள வேண்டும். அதை விடுத்து குறை கூறிக் கொண்டே இருந்தால் எம் மக்களுக்கு ஒன்றும் கிடைக்காமலே போய்விடும்.

முதலில் கிடைப்பதை பெற்றுக் கொண்டு எமது மக்கள் ஆறுதல் அடையட்டும் வேண்டாம் என்று கூறி ஒதுக்கி விட நினைக்க வேண் என அவர் தெரிவித்தார்.

**"பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை வழங்கும் போது தற்காலிக வீடுகளின் தரத்துடன் அமைத்துக்கொடுக்காமல் நிரந்தர வீடுகளின் தரத்துக்கு அமைத்துக்கொடுக்க வேண்டும்" பொறியியலாளர் திருச்செல்வம் மைக்கல் கூறினார்.**

இந்த வீட்டின் அமைப்பு சரியான முறையில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளவில்லை. குறித்த வீடு அமைக்கப்பட்டுள்ள அடம் பள்ளப்பகுதியாக உள்ளது. குறித்த நிலப்பகுதி உயர்த்தப்பட வேண்டும். வீட்டின் சுவர்ப்பகுதி எமது காலநிலைக்கு உகந்ததாக அமைக்கப்படவில்லை. 10 வருடத்தில் குறித்த சுவர் உக்கி பழுதடைந்த நிலைக்கு செல்லலாம்.

வீட்டின் கூரை தகரத்தால் பொருத்தப்பட்டுள்ளது. இது காலப்போக்கில் குளிர்ச்சித்தன்மை குறைவடைந்து வெப்பம் அதிகரிப்பதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படு கின்றன.

கதவு யன்னல்என்பனஅலுமினியத்தால் செயப்பட்டுள்ளன. அவை பாதுகாப்பானது அல்ல விரைவில் துருப்பிடிப்பதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. அதை சரியான முறையில் பராமரிப்பது கடினமாக இருக்கும்.

வீடு கொடுப்பதற்கு யாரும் தடையாக நிற்கமாட்டார்கள். ஆனால் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள மக்களுக்கு கொடுக்கும் போது அதன் தரத்தை உயர்த்தியே கொடுக்க வேண்டும்என தெரிவித்தார்.

**"எமது சூழலுக்கும் தமிழ் மக்களின் பாரம்பரியத்துக்கும் ஏற்ற வகையில் துாரநோக்குடன் இந்த வீட்டுத்திட்டம் அமைக்கப்படவில்லை" என்றார் பொறியியலாளர் மார்க்கண்டு ராமதாசன்.**

தற்போது அமைக்கப்பட்டுள்ள வீட்டில் காற்றோட்டம் வருவதற்குரிய எந்த வசதிகளும் இல்லை. காற்றோட்டம் பெறுவதற்கு கூரையிலோ சிவற்றிலோ சிறு பகுதியை திறநத பகுதிகளாக அமைக்க வேண்டும். வீட்டின் சமையல் அறைக்கு புகைக்கூடு அமைக்கப்பட வேண்டும்.

ஆனால் இங்கு அவ்வாறான அமைப்பு முறைகள் இல்லை. பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பீட்டுள்ளது. வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பகுதிகளில் கிணறுகளை அமைத்து குழாய மூல நீர்விநியோகம் மேற்கொள்வது சிறந்தது.

குறித்த வீட்டுத்திட்டத்துக்கு வழங்கப்படும் தளபாட பொருட்களை உள்ளூர் உற்பத்தியாளர் களிடம் இருந்து பெற்றுக்கொள்வது அவர்களுக்கும் பகுதிநேர வேலை வாய்ப்புக்களை வழுங்க கூடியதாக இருக்கும்.

குறித்த வீட்டுத்திட்டத்துக்கு 21 இலட்சம் ரூபாய் அதிகமாக உள்ளது என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இங்கு வழங்கப்பட்ட வேறு வீட்டுத்திட்டங்கள் முழுமையான வீடுகளாக இல்லை குறித்த வீட்டுத்திட்டங்களால் பல பயனாளிகள் கடனாளிகளாக மாறியுள்ளனர். அத்துடன் தமது உழைப்பினையும் குறித்த வீட்டுத்திட்டத்துக்குள் இழந்துள்ளார்கள். மேலும் மூலப்பொருட்கள் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. அந்த வகையில் பார்க்கும் போது தற்போதைய வட்டுத்திட்டத்துக்கு ஒதுக்கியுள்ள நிதி அதிகம் என கூறுவது சாத்தியமற்ற கூற்று ஆகும் என தெரிவித்தார்.

**"வீட்டின் வடிவமைப்பில் உடனடியாக மாற்றம் கொண்டு வரவேண்டும்" என பொறியியலாளர் காசிலிங்கம் விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டியுள்ளார்.**

அறிவுபூர்வமான பொறியியலாளர்களின் ஆலோசனைகள் எவையும் பெறப்படாமல் குறித்த வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த வீட்டில் அமைக்கப்பட்டுள்ள யன்னல்கள் பாதுகாப்பானது இல்லை, எமது பகுதிகளுக்கு பாதுகாப்பான யன்னல்கள்,கதவுகள் அமைக்கப்பட வேண்டியது அவசியம்.தற்போதைய வீட்டின் அமைப்பு குளிர் பிரதேச நாடுகளுக்கு தான் பொருத்தமான வீடாக அமைந்துள்ளது.

ஒவ்வொரு வீடுகளுக்கும் அமைக்கப்படவுள்ள குழாய்கிணறு தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டும். மேலதிக வீடுகள் கட்டுவதற்கு முன்னர் குறித்த திட்டம் பற்றி கலந்தாலோசித்து மாற்றி அமைக்கப்படவேண்டும்.

இத் திட்டத்திற்கு வெளியில் இருந்து வேலையாட்கள் தேவையிலலை. இங்குள்ளதொழிலாளர்களுககே வேலைவாய்ப்பை வழங்க வேண்டும், வீடுகள் மக்களுக்கு கொடுக்க வேண்டும். ஆனால் அவை பயனுள்ளதாக அமைய வேண்டும்.

இந்த வீட்டில் உள்ள குறைபாடுகளை திருத்தம் செய்ய உள்ளூர் தொழிலாளிகளுக்கு பழக்க வேண்டும்.எதிர்கால வாழ்க்கையை சிறப்புற நீடித்து வாழ்வதற்கு ஏற்ற வகையில் இந்த வீடு அமைக்கப்பட வேண்டும் என தெரிவித்தார்.

**"மக்கள் ஆரோக்கியமாக தமது இல்லங்களில் வாழ்வதற்கு ஏற்றவகையில் வீடுகளை அமைத்து கொடுப்பதே சிறந்தது" என ஜோதிட ஆலோசகர் பாலசுப்பிரமணியம் இரட்ணசேகர் வலியுறுத்தியுள்ளார்.**

தமிழ் மரபின் படி காலாகாலமாக எமது மக்கள் வாஸ்து முறையை கவனத்தில் கொண்டே தமது இல்லங்களை அமைத்து வருகின்றார்கள். அவர்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்பதற்காகவே வாஸ்து முறைப்படி வீடுகளை அமைக்கின்றார்கள்.

சில வீட்டுத்திட்டங்களில் இவற்றை கவனத்தில் கொள்ளாதபடி வீடுகளை அமைத்ததால் பலர் பல இன்னல்களை எதிர்கொண்டு பின்னர் தமக்கு ஏற்றபடி தமது இல்லங்களை மீள் அமைத்துக் கொண்டுள்ளனர். ஆனால் தற்போது அமைக்கப்பட்டுள்ள வீடானது மீள திருத்தி அமைக்கப்படாத வகையிலும் ஒரு திட்டமிடல் இல்லாமலும் அமைக்கப்பட்டுள்ளது. இது பாரிய பிரச்சினையை எதிர்காலத்தில் உண்டுபண்ணும்.

வீடு இல்லாதவர்கள் எதை கொடுத்தாலும் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் தான் உள்ளார்கள். வீட்டில் உள்ள நன்மை தீமை பற்றி சிந்திக்கமாட்டார்கள். ஆனால் உயர் அதிகாரிகள் இவற்றை கருத்தில் கொண்டு துன்பத்தில் இருந்த மக்கள் மீண்டும் துன்பத்தை நோக்கி செல்ல இடமளிக்காமல் இந்த வீட்டின் அமைப்புக்களை எமது சூழலுக்கு ஏற்ற வகையில் அமைத்து கொடுத்தல் சிறந்தது என தெரிவித்தார்.

இவ்வாறு இந்த வீட்டுத்திட்டம் தொடர்பாக பலதரப்பட்ட விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் அண்மையில் மீள்குடியேற்ற அமைச்சினால் ஒரு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. மேற்படி வீட்டுத்திட்டத்தைப் பெற விரும்புபவர்கள் சமர்ப்பிக்க வேண்டிய எழுத்து மூலமான ஆவணமும் வீட்டுத்திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அந்த விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இத்தகைய ஒரு செயற்பாட்டிற்கு அரசு பொறுப்பேற்பதற்கு தயாராக இருப்பது மக்களது வாழ்விடத்திற்கான உரிமையை பூர்த்தி செய்வதோடு போரிற்கு பின்னதான சமூக அபிவிருத்தியை அதிகரிப்பதற்கும் உதவியாக இருக்கினற போதிலும் அண்மைக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டங்கள் மற்றும் வாழிடம் தொடர்பிலான இலங்கையின் நீண்ட கால கொள்கைகள் என்பவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்

எனவே இத்தகைய பாரிய செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமெனில் நாட்டின் தேசிய வீடு அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை எனும் நிறுவனங்களதும் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தில் ஆரம்பித்து மாகாண, பிராந்திய மற்றும் உள்ளூர் அரச ஸ்தாபனங்கள் எனும் கட்டமைப்புக்களின் அறிவு மற்றும் அனுபவத்தை ஒன்றுதிரட்டுதல் அவசியமானதொன்றாகும்.

தொகுப்பு: பொ.சோபிகா

# பொன்சேகாவுக்கு எதிராக வழக்கு!

சரத் பொன்சேகாவின் அமைச்சுப் பதவியை பறிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக முன்னாள் தென் மாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி அஜித் பிரசன்ன தெரிவித்தார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் தனது கன்னி உரையை நிகழ்த்திய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவையும் சாடுவதற்காக அமைச்சுப் பதவியை பயன படுத்திக் கொண்டார்.

அதனால் அவரின் அமைச்சுப் பதவியை பறிக்கக்கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக முன்னாள் தென் மாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி அஜித் பிரசன்ன தெரிவித்தார்.

கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொண்ட பின்னர் பாராளுமன்றத்தில் தனது கன்னி உரையை நிகழ்த்திய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கடுமையாக சாடினார்.

ஆனால் இதுவரையில் பாராளுமன்றத்தில் எவரும் இதுபோன்றதொரு கன்னி உரையை நிகழ்த்தியதில்லை. காரணம் பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கமைய கன்னி உரையில் எந்த ஒரு அமைச்சரும் தமது எதிர்கால திட்டம் தொடர்பில் கூறுவதே வழமையாக இருக்கும். ஆனால் இவர் வழமைக்கு மாறாக தமக்கு எதிரானவர்களை சாடுவதற்கு பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

அதேபோல் இவரை பீல்ட் மார்ஷல் என்று ஏற்றுக் கொள்ளவும் நாம் தயாரில்லை. உலக நாடுகள் பலவற்றிலும் பீல்ட் மார்ஷல் தர அதிகாரிகள் உள்ளனர். அவர்களில் எவரும் தமது தாய் நாட்டையும் இராணுவத்தினரையும் காட்டிக் கொடுத்ததில்லை. ஆனால் இவர் அதனையே தொழிலாகக் கொண்டவர். அதனால் சரத் பொன்சேகாவை பீல்ட் மார்ஷல் என ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்நிலையில் இவர் அண்மையில் வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பிலும் கூறியிருந்தார். இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற போது ஒருவார காலம் நாட்டில் இருக்கவில்லை என்றும் அந்த காலப்பகுதியில் கோத்தபாய ராஜபக்ஷ விடுத்த ஆணையின் பேரிலேயே யுத்த குற்றங்கள் இடம்பெற்றிருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.


இவர் தான் சர்வதேச விசாரணைகளுக்கு அஞ்சி இறுதி யுத்தத்திற்கு முகம் கொடுக்காமல் சீனாவிற்கு சென்று ஆயுதம் தொடர்பிலான மாநாடு ஒன்றில் பங்கேற்றிருந்தார். தற்போது அவரது பணியையும் தான் பொறுப்பேற்று செய்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவை சாடுவது வேடிக்கையாகவுள்ளது.

அத்துடன் ஒருவாரம் சீனாவில் இருந்த இவருக்கு எவ்வாறு யுத்தம் நிறைவடைந்தது என்பது தெரியும் என்ற கேள்விக்கும் அவர் பதில் வழங்க வேண்டும்.

கடந்த 2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தான் தோல்வியுற்ற கோபத்தில் தற்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பழிவாங்கும் முயற்சியே இதுவென்பது தெளிவாகின்றது. அதனால் அவரின் பதவியை பறிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அரசியலிலிருந்து விரைவில் ஓய்வு!

## சுசில் பிரேமஜயந்த அறிவிப்பு



அரசியலிலிருந்து வெகு விரைவில் ஓய்வு பெற்றுக் கொள்ளப் போவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக மகிந்த அமரவீர கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட நிகழ்வில் பங்கேற்று இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

2004ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டு வரையில் தொடர்ச்சியாக பத்து தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு வெற்றியீட்டியுள்ளது.

2015ம் ஆண்டில் முதல் தடவையாக தேர்தலில் தோல்வியைத் தழுவ காரணம் என்ன என்பது பற்றி அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டதன் பின்னர் அம்பலப்படுத்துவேன்.

நான் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்வது வெகு விரைவில் நடைபெறும். எவராலும் எந்த நாளும் பதவிகளை வகிக்க முடியாது. தொடர்ந்தும் பதவியில் நீடிப்பதா என்பது குறித்து ஒவ்வொருவரும் சுயாதீனமாக தீர்மானம் எடுக்க நேரிடும்.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் எனக்கும் அவ்வாறான ஓர் தீர்மானம் எடுக்க நேரிட்டது.

மூன்று தலைவர்களின்கீழ கடமையாற்றிய நான் தலைமைத்துவத்தின் தீர்மானங்களை எதிர்த்தது கிடையாது.

அவ்வாறு செயற்பட்ட காரணத்தினால் கடந்த பொதுத் தேர்தலில் முதல் தடவையாக எதிர்க்கட்சியில் அமர நேரிட்டது.

நான் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட போதிலும் அதற்கான எந்தவொரு மரியாதையும் கிடைக்கவில்லை.

நான் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ள வேண்டுமென சிலர் எதிர்பார்த்து காத்திருக்கின்றார்கள்.

சில தரப்பினர் வெறுமனே ஊடகக் கண்காட்சிகளை நடத்திவருவதாகவும் அவர்களுக்கு உண்மை தெரியாது எனவும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (இ-5)

# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 665

Search for people, places and things    Nagendram  Home

**மானன்**




**ரதி**





**கபிலன்**




**வின்ஜக்ஷன்**



**றொகான்**




**மது**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நான்கு சடலங்கள் மீட்பு குறித்து அதிர்ச்சித் தகவல் வெளியானது

## அனைவருக்கும் ஒரு படிப்பினை

தெஹிவளை கவுடான வீதியில் உள்ள மூன்று மாடிகளைக் கொண்ட வீடொன்றின் கீழ்மாடியில் இருந்து, பிரபல வர்த்தகர் ஒருவர் மற்றும் அவரது குடும்பத்தார் உட்பட நான்கு பேர் நேற்று முன்தினம் சடலங்களாக மீட்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான காரணம் வெளியாகி அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

நேற்று முன்தினம் முற்பகல் காலை 10 மணிக்கு தெஹிவளை பொலிஸாருக்குச் செய்யப்பட்ட முறைப்பாடொன்றை அடுத்தே குறித்த வர்த்தகர், அவரது மனைவி, அவர்களது மகள் மற்றும் அவர்களின் உறவுக்காரர் ஒருவரின் மகள் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு கேஷர் வீதியில் பிரபல இலத்திரனியல் வர்த்தகரான ஹுசைன் மௌலானா (வயது 65), முன்ஸிரா மௌலானா வயது (58), ஹுஸ்னா மௌலானா (வயது 13) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோரும் அவர்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு குறித்த வீட்டில் தங்கியிருந்த அவர்களது உறவுக்கார சிறுமியான நிஸ்னா மௌலானா (வயது 13) என்ற சிறுமியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு தெஹிவளை பொலிஸ் நிலையம் சென்றுள்ள, உயிரிழந்த



வர்த்தகரின் முன் வீட்டில் வசிக்கும் உறவுக்காரர், தனது முன் வீட்டில் உள்ள உறவினருக்கு ஏதோ இடம் பெற்றுள்ளதாகவும் அவர்கள் உடல் கருகி உயிரிழந்துள்ளதாகவும் முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து தெஹிவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரதீப் நிஸாந்தாவின் கீழான பொலிஸ் குழு உடன் ஸ்தலத்துக்கு சென்றுள்ளது.

பொலிஸார் அங்கு செல்லும் போதும் இலக்கம் 40 பீ; கவுடான, தெஹிவளை எனும் முகவரியில் உள்ள குறித்த மூன்று மாடி வீட்டின் கீழ் மாடியின் கதவுகளை உறவினர்கள் உடைக்க முயற்சி செய்துகொண்டிருந்துள்ளனர். முழுமையாக அடைக்கப்பட்டு குளிரூட்டப்பட்டிருந்த அந்த வீட்டின் பிரதான கதவை பொலிஸாரின் உதவியுடன் உடைத்துக்கொண்டு உள்ளே சென்ற போதே நால்வரும் சடலமாக இருந்தமை உறுதியானது.

பொலிஸார் உள்ளே சென்று பார்த்த வேளையில் வர்த்தகரான ஹுஸைன் மௌலானா பிரதான கதவருகே உள்ள கதிரையொன்றிலும், அவரது மனைவியான முன்ஸிரா மௌலானா வீட்டின் அறையொன்றிலும் 13 வயது உடைய இரு சிறுமிகளும் வீட்டின் பிரதான அறையின் நிலத்திலும் உயிரிழந்த நிலையில் இருந்தனர்.

வீட்டில் இருந்த பெண்ட்ரி கபட் ஒன்று தீயினால் சேதமடைந்திருந்ததை அவதானித்த பொலிஸார் அதன் அருகே இருந்த இலத்திரனியல் அவன், பிளெக் டொப் ஆகியனவும் தீயினால் கருகியிருந்ததை அவதானித்தனர்.

அத்துடன் வீட்டின் சுவர், நிலத்தில் கறுப்பு நிர துகள்கள் ஒட்டியிருந்த நிலையில் ஆங்காங்கே அதில் கை அச்சுக்கள் பதிவாகியிருந்தன. அத்துடன் எரிந்திருந்த பிளக் டொப் வீசுண்டிருந்ததுடன் வீட்டின் மின் கட்டமைப்பில் இருந்த ரிப் ஆளிகளில் இரண்டு கீழ் நோக்கி வீழ்ந்திருந்தன. இதன் ஊடாக ஏதோ ஒரு கார்ணத்தால் மின் தடைப்பட்டுள்ளமை பொலிஸாரினால் ஊகிக்கப்பட்டது.

ஸ்தலத்துக்கு விரைந்த தெஹிவளை பிரதேசத்துக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சர் ரஞ்சித் கொட்டச்சியின் நேரடி கட்டுப்பாட்டில் தெஹிவளை பொலிஸ் நில்ைய பொறுப் பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரதீப் நிஸாந்தவின் தலைமையில் குற்றவியல் பிரிவின் அதிகாரிகளினால் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டன.

பொலிஸ் தடயவியல் பிரிவினர் ஸ்தலத் துக்கு வருகை தந்ததுடன் அரச இரசாயன பகுப்பாய்வாளர்கள், மின்னியல் பொறியியலாளர்களும் ஸ்தலத்துக்கு வரவழைக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதன் போது கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் குறித்த வீட்டின் முன் வீட்டில் வசிக்கும் உயிரிழந்த வர்த்தகரின் உறவினர்களுடன் இந்த குடும்பத்தார் உரையாடியுள்ளனர். அதன் பின்னர் இரு குடும்பத்தாரும் நித்திரைக்கு



சென்றுள்ளனர்.

உயிரிழந்த வர்த்தகரின் மகளும் அங்கு தங்கியிருந்த உறவுக்கார சிறுமியும் நாரஹேன்பிட்டி பகுதியில் உள்ள பிரபல சர்வதேச பாடசாலையில் கல்விகற்று வருகின்றனர். இந் நிலையில் நேற்று முன்தினம் காலை அவர்களை பாடசா லைக்கு அழைத்துச் செல்லும் வண்டி வீட்டின் அருகே வந்துள்ளது. வண்டி ஒலி எழுப்பியும் வீட்டில் இருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

இந் நிலையில் முன் வீட்டில் வசிக்கும் உறவுக்காரர்கள் குறித்த வர்த்தகருக்கு தொலைபேசி அழைப்பையும் ஏற்படுத்தியுள்ளனர். எனினும் அதற்கும் பதிலளிக்கப்படவில்லை. இதனையடுத்து அவ்வீட்டார் முன் வீட்டை நோக்கி சென்ற போது அங்கு கறுப்பு நிற துகள்கள் உள்ளிருந்து கதவின் கீழால் உள்ள சிறிய இடைவெளியூடாக கசிவதை அவதானித்துள்ளனர். இந் நிலையிலேயே அது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளதுடன் கதவை உடைக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். இவ்விடயம் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குளிரூட்டப்பட்ட அந்த வீடானது முழுமையாக சீல் செய்யப்பட்டிருந்த நிலையில், திடீரென ஏற்பட்ட மின்னொழுக்கு காரணமாக ஏற்பட்ட புகையுடன் கூடிய விஷ வாயுவை அவர்கள் சுவாசித்திருக்கலாம் எனவும் அதன் காரணமாக மூச்சுத் திணறி அவர்கள் உயிரிழந்திருக்க வேண்டும் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். வர்த்தகரின் மனைவி முன்ஸிரா மௌலானா அறையில் மரண மடைந்திருந்த விதம், இரு சிறுமியரும் வீட்டின் பிரதான அறையில் அருகருகே முகங்குப்பற விழுந்திருந்த நிலைமை, வர்த்தகரான ஹுசைன் மௌலானா கதிரையிலேயே உயிரிழந்திருந்தமை ஆகியவறறை வைத்தே பொலிஸார் இவ்வாறு சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

வீட்டின் சுவர்களில் படிந்திருக்கும் கறுப்பு நிற துகள்கள் மின்னொழுக்கு காரணமாக ஏற்பட்ட தீயினால் ஏற்பட்டதாக இருக்க வேண்டும் என சந்தேகிக்கும் பொலிஸார், தீ பரவ ஆரம்பித்த போது முழு வீட்டையும் புகை சூழ்ந்துகொன்டிருக்க வேண்டும் எனவும், வீடு மூழுமையாக குளிரூட்டப்பட்டிருந்ததாலும் அப்புகை வெளியேறாமல் வீட்டுக்குள்ளேயே சுற்ற அது விஷமாக மாறியிருக்கும் எனவும் சந்தேகிக்கின்றனர்.

அதனை வீட்டில் இருந்த இந் நால்வரும் சுவாசித்திருப்பதாக நம்பும் பொலி ஸார் அங்கிருந்து தப்ப அவர்கள் முயற்சித் துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். எனி னும் வீட்டை முழுமையாக சூழ்ந்திருந்த புகையால் அவர்களுக்கு கதவினை நோக்கி செல்வது சிரமமாக இருந்திருக்க வேண்டும் எனவும் சிறுமிகள் இருவரும் முகங்குப்பற வீழ்ந்திருந்தமையானது அவர்கள் தப்பிக்க ஓடியுள்ளதை காட்டுவதாகவும், வர்த்தகரும் கதவை திறக்க முயன்றுள்ள நிலையிலேயே அதன் அருகே இருந்த கதிரையிலேயே உயிரை விட்டுள்ளதாகவும் சந்தேகிப்பதாக விசாரணைகளுக்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எவ்வறாயினும் குறித்த நால்வரும் எதனால் உயிரிழந்தார்கள் என்ற உறு தியான காரணம் நேற்று முன்தினம் மாலை வரை தெரியவரவில்லை.

நேற்று முன்தினம் பிற்பகல் ஸ்தலத் துக்கு கல்கிஸை மேலதிக நீதவான் ஜி.ஜி.எஸ். ரணசிங்க வருகை தந்து சடலங்களை பார்வையிட்டார். இதன் போது சடலங்களை பிரேத பரிசோத னைக்கு உட்படுத்துமாறு அவர் உத்தரவு பிறப்பித்தார். இந் நிலையில் நேற்று முன்தினம் மாலை களுபோவில போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியும் ஸ்தலத்திற்கு விரைந்து பார்வையிட்டதுடன் - சடலங்களையும் பொறுப்பேற்று பிரேத பரிசோத னைகளுக்காக களுபோவில வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றார்.

எவ்வாறாயினும் இந்த நான்கு மரணங்களும் வெளியில் இருந்து வந்த ஒருவரால் ஏற்படுத்தப்பட்டது என்பதற்கான எவ்வித சான்றுகளும் இல்லை என தெரிவிக்கும் தெஹிவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரதீப் நிஸாந்த, திடீரென ஏற்பட்ட மின்னொழுக்கினால் உருவான விஷ வாயுவை இவர்கள் சுவாசித்திருக்கலாம் எனவும் அதனால் ஏற்பட்ட மூச்சுத் திணறலால் மரணம் சம்பவித்திருக்கலாம் எனவும் நம்புவதாக குறிப்பிட்டார். எனினும் பிரேத பரிசோதனையின் பின்ன ரேயே உறுதியான உண்மைக் கார ணியை கண்டறிய முடியும் என சுட்டிக் காட்டிய அவர் சதி முயற்சி ஒன்றூடாக இம்மரணங்கள் நிகழ்ந்துள்ளமைக்கான வாய்ப்புக்கள் மிக மிக குறைவானது என சுட்டிக்காட்டினார்.

# ஒரு கோடி ரூபா பெறுமதியான பாபுல் மீட்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காகக் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் போதைப் பொருள் அடங்கிய பாபுல் புகையிலை தொகையை தாம் கைப்பற்றியதாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுகாதார பணியகம் தெரிவித்துள்ளது.

விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகள் மற்றும் சுகாதார அதிகாரிகள் கைப்பற்றிய இந்த பாபுல் புகையிலை மாலைதீவு, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் குவைத் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், கைப்பற்றிய பாபுல் தொகையின் பெறுமதி சுமார் ஒரு கோடி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கைப்பற்றப்பட்டுள்ள பாபுல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பாலித மஹிபால ஆய்வு செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆய்வுகளை மேற்கொண்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து இலங்கையில் தடை செய்யப்பட்ட போதைப் பொருள் அடங்கிய பாபுல் கொண்டு வரப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.(இ-5)

### உரிமையாளர் இந்தியாவில் வசித்த நிலையில்

# 700 மில்.ரூபா பெறுமதியான ஆடம்பர வீடு போலி உறுதி மூலம் கைமாற்றப்பட்டுள்ளது



கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் நான்கு மாடிகளைக் கொண்ட 700 மில்லியன் ரூபா பெறுமதியான ஆடம்பர வீடு ஒன்று போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி மிகவும் நுட்பமான முறையில் கைமாற் றப்பட்டமை அம்பலத்திற்கு வந்துள்ளது.

மேற்படி குடியிருப்பு வளாகம் சட்ட விரோதமான முறையில் கையகப்படுத்தப்பட்டது மட்டுமன்றி தனியார் லீசிங் கம்பனி ஒன்றிற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டும் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி 150 மில்லியன் ரூபா ஒருசில கிழமைகளுக்கு முன்னர் வங்கி ஒன்றிலிருந்து கடனாகப் பெறப்பட்டுமுள்ளது என்று குற்றப்புலனாய்வு பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளின் விபரங்களை குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கொழும்பு நீதவான் நீதிமன்ற பிரதம நீதிபதி ஹிகான் பிலப்பிட்டியவுக்கு விளக்கிக் கூறினார்.

அதில் மேற்படி வீட்டின் உரிமையாளர் கடந்த டிசெம்பர் மாதம் இந்தியாவில் உயிரிழந்துள்ளார்.

அவரது மனைவி இந்திய பிரஜையாக இருப்பதுடன் அடிக்கடி இலங்கைக்கு வந்து வீட்டின் நிலைமைகளை அவதானித்துச் செல்கிறார்.

இந்த வீட்டைக் கவனித்துக் கொள்வதற்கு இருவர் இங்கு பொறுப்பாகவுள்ளனர். மேற்படி இருவரும் சந்திரசிறி என்பவருடன்சேர்ந்துகாணியை கைமாற்றும் உறுதியை சட்டத்தரணி ஒருவரின் உதவியுடன் வரைந்துள்ளனர்.

தற்போது அந்த சட்டத்தரணி உயிருடன் இல்லை. திருடப்பட்ட உறுதிகள்காணியை கைமாற்றும் நாடகத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் போலி உறுதிகள் 150மில்லியன் ரூபா கடன் பெறுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வளவு தொகை கடனைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கப்பட்ட நிலையில் எவ்வாறு இரண்டு வாரத்திற்குள் அதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் சாதாரண கடன்களுக்கு இதனை விட அதிக காலம் எடுக்கிறதே என சட்டத்தரணி சம்பத் மென்டிஸ் நீதிமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் உண்மையான காணி உறுதியையும் போலியான காணி உறுதியையும் இனம் கண்டு கொள்வதற்காக காணி பதிவுப் திணைக்களத்தின் உதவியைப் பெறுவதற்கு நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன் மேற்படி சம்பவம்தொடர்பாகமுழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் நீதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பொலிஸார் ரஜீவ் விக்கிரமநாயக்க மற்றும் சந்திரசிறியினுடைய வாகனச் சாரதி கைது செய்யப்பட்டு தடுப்பில் வைக்கப் பட்டுள்ளார்.

காணி உறுதிக் கைமாற்றமானது சந்திரசிறியின் வாகனச் சாரதியிடமிருந்து சந்திரசிறிக்கு கைமாற்றப்பட்டுள்ளதாக போலியாக சோடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி டசிந் தப்ரியு வாகனச் சாரதி மேற்படி உறுதிக் கைமாற்றம் தொடர்பான ஆவணத்தில்கையெழுத்திடுமாறு அவரது தொழில் வழங்குநரால் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்.

ஆரம்பத்தில் வாகன சாரதி அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்த போதும் பின்னர் இதில் சம்பந்தப்பட்டுள்ளார். வாகனச் சாரதி சந்திர சிறியினால் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ள போதும் அவர் மேற்படி கிரிமினல் செயற்பாடுதொடர்பான நோக்கத்தை அவர் கொண்டிருக்கவில்லை என்று சட்டத்தரணி வாதிட்டுள்ளார்.

இதேவேளை மேற்படி சம்பவங்கள் தொடர்பாக எழுத்து மூலம் முழுமையான அறிக்கை ஒன்றை தாம் சமர்பிக்கவுள்ளதாக விக்கிரம நாயக்க நீதிமன்றில் தெரிவித்துள்ளார். (3)

# மகிந்தவின் தந்தை உயிர்த்து வந்தாலும் அரசை வீழ்த்த முடியாது - அசாத் சாலி



எதிரணியின் போராட்டத்தால் அரசாங்கத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. மகிந்தவின் தந்தை உயிரத்து வந்தாலும் அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் ஆட்சிபுரிந்த ஜனாதிபதிகளில் மகிந்த ராஜபக்ஷ மாத்திரமே பாரிய ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களில் சிக்கியுள்ளார்.

அத்துடன் சுதந்திர கட்சியை பிளவுபடுத்தியவரும் இவர்தான்.

புதிய கட்சி அமைக்கப் போவதாக தெரிவித்து வந்த கருத்துக்கள் தொடர்பாகவும் அவர் இதுவரை தெளிவாக பதில்கூறாமல் மறைத்து வந்தார்.

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் இவர் கலந்து கொள்வதன் மூலம் அது வெளிச்சத்துக்கு வரும். அத்துடன் கடந்த அரசாங்கத்தில் பாரிய ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களே மகிந்தவின் பின்னால் இருக்கின்றார்கள். திருடர்கள் மேற்கொள்ளும் இநத ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதன் மூலம் அவர்களுக்கும் அவப்பெயரே ஏற்படும்.

எனவே எதிரணியின் போராட்டத்தால் அரசாங்கத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.



அத்துடன் இவர்களுடன் இருப்பவர்களில் பிரதான மானவர்கள் கடந்த ஆட்சி காலத்தில் அரசாங்கத்தின் சொத்துக்களை கொள்ளையடித்தவர்கள். ஆகையினால் இவர்களின் பொய்ப்பிரசாரங்கள் மக்கள் மத்தியில் ஒரு போதும் எடுபடாது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# செய்தித்துளிகள்

## எங்கே போகிறது எம் தேசம்

பொலிகை ஜெயாவின் எங்கே போகிறது எம் தேசம், பறிகொடுத்த பின்பும் வாழத்துடிப்பவர்கள் ஆகிய இரு நூல்களின் வெளியீடு கொற்றாவத்தை சித்தி விநாயகர் திருமண மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4 மணிக்கு சாகித்திய ரத்தினா தெணியான் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-60)

## பழைய மாணவர் சங்க கூட்டம்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பழைய மாணவர் சங்க 2016/2017 இற்குரிய வருடாந்த பொதுக்கூட்டம் பாடசாலை அழகரத்தினம் மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும். (இ

## பொருளாதாரம் குறித்து கலந்துரையாடல்

“08.01.2015 இற்கு பின்னரான இலங்கையின் பொருளாதாரம்” எனும் விடயம் தொடர்பில் ஓர் கலந்துரை யாடல், டி.எம்.ஐ.தனியார் கல்வி நிறுவனத்தில் நாளை மறுதினம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு, செ.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஆரம்ப உரையை ஏ.சி.ஜோர்ஜ் ஆற்றவுள்ளார். ஆர்வலர்களை சமுகம் தருமாறு யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிய குழு அறிவித்துள்ளது. (இ

## கௌரவிப்பு விழா ஞாயிறன்று

உடுப்பிட்டி, நாவலடி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் ஓய்வுபெற்ற விஞ்ஞானக் கல்வி அதிகாரி அமரர் ரி.வி.செல்வரத்தினம் நிதிய கௌரவிப்பு விழா மாணவர் மன்ற மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் நடைபெறும்.

சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் சமாதான நீதவானுமாகிய கொ.குணசிங்கம் தலைவராகவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களாகிய அ.பரஞ்சோதி, வே.சிவயோகன் ஆகியோர் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-60)

## அடிக்கல் நாட்டு விழா இன்று

ஈழத்து இராமேஸ்வரம் என விளங்கும் புங்குடுதீவு பாணாவிடைச்சிவன் தேவஸ்தானத்தின் பர்வதவர்த்தனி அம்பாள் வாசலுக்கான பஞ்சதள இராஜகோபுர சங்குஸ்தான அடிக்கல் நாட்டு விழா விஞ்ஞாபனம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் பாலசிங்கம் செந்தில்நந்தனன் நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

சாகித்திய சிரோமணி நயினை குருமணி வை.மு.ப. முத்துக்குமாரசாமி சிவாச்சாரியார் பிரதம குருவாகவும் விளங்கவுள்ளார். (இ-5)

## பயனாளிகள் பெயர் விபரம்

குடும்பத் தலைவரை இழந்த 3 பேர்களைக் கொண்ட குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பு அமைச்சு தலா 20 ஆயிரம் ரூபாவை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் கரவெட்டி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த பின்வரும் பயனாளிகள் உடனடியாக பிரதேச செயலகத்தின் சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் எஸ்.ராஜீவ் அறிவித்துள்ளார்.

பயனாளிகள் பெயர் விபரம் வருமாறு,

என்.சரஸ்வதி (கரவெட்டி வடக்கு - ஆடு வளர்ப்பு), எஸ்.லலிதா (இமையாணன் மேற்கு - சிற்றுண்டி வியாபாரம்), ஆர்.துர்க்காதேவி (இமையாணன் மேற்கு- சிற்றுண்டி வியாபாரம்) (இ-60)

## திருமுறைச் செல்வர் பயிற்சி வகுப்பு

இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையின் சைவப்பணிமனை மண்டபத்தில் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த கொழும்பு பயிற்சி மையத்தின் இணுவில் கிளையினரால் திருமுறை நெறிச்செல்வர் பயிற்சி வகுப்பு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

மாதத்தில் இரு ஞாயிறு தினங்களில் முழுநேரமாக நடைபெறவுள்ள வகுப்பில் கலந்து ஒரு வருடப் பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு திருவாவடுதுறை ஆதீனத்தினரால் திருமுறை நெறிச்செல்வர் என்னும் பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுவர்.

இப் பயிற்சி நெறியை பயில விரும்பும் அன்பர்கள் காலை 8.30 மணிக்கு ஆரம்ப தினமே வருகை தந்து பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு 077 541 7249 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் (இ-5)

# ஜனாதிபதி மைத்திரியை எவருக்கும் நாம் விட்டுக்கொடுக்கத் தயாரில்லை

## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட புரட்சியிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியிலும் 90 வீதமான பங்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுடையது. எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்மால் தெரிவுசெய்யப்பட்டவர். அவர எமது கட்சிக்கு உரித்துடையவர் என்ற வகையில் அவரை விட்டுக்கொடுக்கப்போவதில்லை. எவருக்கும் அவரை சொந்தம் கொண்டாடும் அதிகாரமும் இல்லை என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தின் இருப்பை தக்க வைக்குமாறு வலியுறுத்தி ஐக்கிய தேசிய கட்சி ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மகிந்தவுக்கு ஆதரவளிக்கும் அவதாரங்கள் கோவிலுக்குச் சென்று தேங்காய் உடைத்து நல்லாட்சி அரசாங்கத்தை கவிழ்க்க பிரார்த்தனை நடத்துகினறனர். இவர்களுக்குப் பின்னால் இது போன்ற மற்றுமொரு வரலாறும் உள்ளது.

கடந்த 2001 ஆம் ஆண்டிலும் இது போன்ற சிலர் எதிர்த்தமையினால் அன்று பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க ஜப்பான் வழங்கவிருந்த 4.5 கோடி ரூபாவை எமது நாடு இழந்தது. அன்று போல் இன்றும் சில எதிரிகளால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் நாடு வளமான, ஊழலற்ற அபிவிருத்தியை நோக்கி நகர்வதை சகித்துக்கொள்ள முடியாமல் உள்ளது.

மூன்று பிரதான அமைச்சுக்களை கலைத்து ஜப்பானின் உதவிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. மக்களை படுகுழியில் தள்ளி தமது வயிற்றை நிரப்பிக் கொள்வதையே கடந்த ஆட்சியாளர்கள் செய்தனர்.

கடந்த காலத்தில் தேங்காய் உடைத்த போதும் தேங்காய்த் துண்டுகள் சிதறி பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தனவின்





சட்டைப்பையில் விழுந்தன. இவ்வாறு தமது சட்டைப்பையை பாதுகாத்துக்கொள்ளத் தெரியாதவர்கள் எப்படி நாட்டை காப்பாற்றுவர்?

இவர்கள்கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மக்கள் பணத்தை சூறையாடிய மையை அறந்துதான் நாம் எதிர்காலத்தில் இவர்கள் வேண்டாம் என தீர்மானித்து மக்கள் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினர். அதிலும் நல்லாட்சியின் நிமித்தம் வாக்களித்த 62 இலட்சம் பேரில் 90 வீதமானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள்.

அதனால்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன எமக்கு உரித்துடையவர். அவரின் வெற்றிககு வித்திட்டவர்கள் நாங்கள். எவர் கேட்டாலும் அவரை உரிமைகொண்டாடவிடப்போவதில்லை என்று பகிரங்கமாக அறிவிக்கின்றோம்.

அதன் பிரகாரம் ஆட்சியதிகாரத்தையும் மக்கள் எமக்கு வழங்கியுள்ளனர். மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் முகமாக கடந்த அரசாங்கத்தில் ஊழல் புரிந்தவர்களை சட்டத்தின் படியில் சிக்கவைப்பதே எமது நோக்கமாகவுள்ளது.

அதேபோல்முன்னாள்ஜனாதப்தி மகிந்த ராஜபக்ஷ தான் கொள்ளையிட்டிருந்தால் தனது வயிற்றைக்கிழித்துபணத்தை எடுத்துக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். அதற்கு தனது பாராளுமன்ற உரையில் பதிலளித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தான் மகந்தவின் வயிற்றை வெட்டிக்கொள்ள கத்தியொன்றைத தருவதாக தெரிவித்துள்ளார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உரையாற்றிய போது பாராளுமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதி இல்லை. அதற்கு மாறாக அவர் பாராளுமன்றத்திலிருந்து பீல்ட் மார்ஷலிடம் கத்தியை பெற்றுக்கொண்டு தமது வயிற்றைக் கிழிந்திருந்தால் எத்தனை முறை அவரின் வயிற்றை கிழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என சிந்திக்கும் போது வேடிக்கையாகவுள்ளது.

எவ்வாறாயினும் எமக்குக் கிடைத்த மக்கள் வரத்திற்கு நிகரான பிரதிபலனை நாட்டு மக்களுக்கு முழுமையாக வழங்குவோம்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ள சிவதொண்டன் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

ஆன்மீகம் மற்றும் மானுட மேம்பாட்டுடன் தொடர்புடைய அறிவை மேம்படுத்தி அவ்அறிவைப் பெற்றவர்களைப் பயன்படுத்தி சமூகத்தில் ஆன்மீகம் மற்றும் மானுட மேம்பாட்டுன்தொடர்புடையவேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காக மூன்று நாட்கள் வதிவிடப் பயிற்சி நெறியொன்று எதுவித கட்டணமுமின்றி தொண்டைமானாறில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் நெறிப்படுத்தலில் நடத்தப்படவுள்ளது.அப்பயிற்சி நெறி தொடர்பான சில முக்கிய விபரங்கள் வருமாறுஎதிர்வரும் 2016. 04.22 ஆம்திகதி அதிகாலை பயிற்சி தொண்டைமானாறில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிர மத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. 22ஆம் திகதி வழங்கப்படும் சிவ தீட்சையைத் தொடர்ந்து 23, 24 ஆம் திகதிவரை பயிற்சி நடைபெறும்.

பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கிடைத்து பயிற்சிக்குதகுதியுடையவர்கள்தெரிவு செய்யப்பட்டதும் அவர்களுக்கு தபால்மூலம்பயிற்சிதொடர்பானவிளக்கம்அடங்கிய அனுமதிக் கடிதம், அனுப்பப்படும். பயிற்சி நிறைவடைந்த அடுத்த நாள் பயிற்சியை பூர்த்தி செய்த அனைவரும் குடாநாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலங்களுக்கு தலயாத்திரைக்காக அழைத்துச் செல்லப்படுவார்கள்.

புயிற்சியாளர்கள் அனைவரும் சந்நிதி முருகனைத் தரிசித்து அவன் அருளையும் பெறும்வாய்ப்பு உண்டு.

21 வயதிற்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இலங்கையின் எல்லாப் பாகத்திலிருந்தும் விண்ணப்பங்கள் பெறப்படும்.

பயிற்சியில்கலந்து கொள்ளும் அனைவரும் சிவதீட்சை பெறுவதற்கும் பயிற்சி வேளையில் வழங்கப்படும் சிவ தீட்சை பெற்ற அன்றிலிருந்து தொடர்ந்து 21நாட்களுக்கு சைவ உணவு மட்டுமே அருந்துவதற்கும்உறுதிகொண்டவர்களாயிருத்தல்வேண்டும்.

பயிற்சிக்கு தகுதியுடையவ ர்கள் என்று தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தைக் கோரி சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம், 48, புனித மரியாள் வீதி, திருகோணமலை எனும் முகவரிக்கு கடிதம் அனுப்ப வேண்டும்.

பயிற்சியைநிறைவுசெய்து சான்றிதழ் பெறுபவர்கள் சமயம், சமூகம் சார்ந்த தொண்டுச் செயற்பாடுகளில் தத்தம் மாவட்டங்களில் ஈடு படலாம்.

விண்ணப்பப்படிவம்தபால் மூலம்கிடைக்கவேண்டியகடைசி நாள் எதிர்வரும் 8ஆம் திகதி பி.ப 4மணி எனசிவன் மானுட மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பில் வெளியிடப்பட்டுள்ளது. (இ


**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்**

**பகிரங்க ஏல விற்பனை**

2015 இற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் விற்பனைக்கு சிபாரிசு செய்யப்பட்ட பொருட்கள் 24.03.2016 காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதால் 23.03.2016 காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும் விற்பனைப் பொருட்களை பார்வையிடலாம். ஏலத்தில் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் யாவும் உடனடியாக பணம் செலுத்தி அன்று மாலை (24.03.2016) மாலை 3 மணிக்கு முன்னதாக வளாகத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

**விற்பனை செய்யும் இடம்:-** கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் (STEPS) நிறுவன விடுதி அலுவலகம்.

**பொருள் விபரம்:-** பழைய ரயர்கள், கணனிகள், பிறின்ரர்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்.

**இ.இரவீந்திரன்,**
**செயலாளர்.**

(சி-4040)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா:86செவ் 1 இல்
உயரம்: 170cm
தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்
தொ.இ: B/5637

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 22
உயரம்:- 5'5"
தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் NOT PR
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/5643

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 44செவ் 1 இல்
உயரம்: 170cm
தகைமை/தொழில்:லண்டன் NOT PR
தொ.இ: B/5644

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 36செவ் 4 இல்
தகைமை/தொழில்:சொந்ததொழில்
தொ.இ: B/5645

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 78 செவ் 7 இல்
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/5679

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 50
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/5682

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 23 செவ் 8 இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/5685

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 43 செவ் 12 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/5686

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல் என்னும் சொல்

-திருக்குறள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பிள்ளைகளின் நல்ல நண்பர்கள் பெற்றோர்களாகவே இருக்க முடியும்

யாழ்.குடா நாட்டில் அண்மைக் காலமாக இடம்பெறும் சம்பவங்கள் வலி தருவதாக உள்ளன.

வீடுடைத்துக் களவு, வீதியில் வைத்து வாள் வெட்டு, மாணவர்கள் சிலர் அட்டகாசம் என்ற செய்திகள். ஏன்? இப்படி என்ற கேள்வியை ஏற்படுத்தி விடுகின்றது.

இத்தகையதோர் நிலையில் எங்கள் இனம் சமூகத்தின் எதிர்காலம் பற்றி நாம் ஆழமாக சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

அதிலும் பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பில் விசேட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதும் காலத்தின் தேவையாக உள்ளது.

எங்கள் பிள்ளைகள் விடுகின்ற தவறுகளுக்காக அவர்கள் தண்டனை பெறுகின்றபோது அவற்றுக்குப் பழகிக்கொள்கின்ற ஒரு சூழ்நிலையும் தோற்றம் பெறும் என்பதால்,

சிறுவயதிலிருந்தே பிள்ளைகளின் நடத்தைக் கோலங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது கட்டாயமானதாகும்.

இதில் பெற்றோர்களின் வகிபங்கு என்பது மிகவும் முக்கியமானது. பெற்றோரின் கட்டுப்பாட்டில், அவர்களின் அரவணைப்பில் இருக்கக் கூடிய பிள்ளைகள் நிச்சயம் புறச்சூழலில் நடக்கக்கூடிய சம்பவங்களை தமது பெற்றோரிடம் எடுத்துக்கூறுவர்.

எனினும், துரதிர்ஷ்டவசமாக மகனுக்கு பதினாறு வயது கடந்து விட்டால் அந்த மகனுடன் கதைப்பது, அன்பு பாராட்டுவது என்பவற்றில் இருந்து தந்தை விலக்குப் பெற்றுக்கொள்கிறார்.

இதனால் ஒரு இடைவெளி ஏற்பட்டு விடுகிறது. அநேகமாக இடங்களில் மகன் தனது தேவைகளை தாயினூடாகவே தந்தைக்குச் சொல்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

இந்நிலைமைகளே பெற்றோரிடமிருந்து ஆண் பிள்ளைகளை விலத்திக் கொள்கிறது. அத்தகையதோர் சூழ்நிலையில் வெளியக நட்பு ஏற்பட்டுவிட அதன்வழி தான் நினைத்த பாட்டில் நடப்பதற்கு அந்த இளைஞன் தயாராகின்றான்.

இது ஒருபுறம் நடக்க மறுபுறத்தில் தன் பிள்ளையைக் கட்டுப்படுத்த முடியவில்லையே என்ற துன்பம் பெற்றவர்களை தாக்குகிறது.

ஆக, பெற்றோர்கள் அதிலும் குறிப்பாக தந்தை தன் பிள்ளைகளின் உன்னதமான நண்பனாக இருக்க வேண்டும். ஒரு பிள்ளை தான் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை தன் தந்தையிடம், தாயிடம் தயக்கமின்றி எடுத்துக்கூறக்கூடியதான ஒரு சூழமைவை ஏற்படுத்தி விட்டால் அந்தப் பிள்ளை நிச்சயம் பெற்றோரின் சொற்படியே நடந்து கொள்ளும்.

அதேநேரம் பிள்ளை எதிர்கொள்கின்ற பிரச்சினையிலிருந்து சுமுகமாக விடுபடக்கூடிய ஆலோசனைகளை வழங்குகின்ற திறன்களையும் பெற்றோர்கள் கொண்டிருப்பது கட்டாயமானதாகும்.

வெறுமனே உணர்ச்சி வசப்பட்டு கூக்குரல் போடுகின்ற பெற்றோர்கள் நிலைமையை மேலும் மோசமாக்கிக் கொள்வர் என்பதால் பிள்ளைகளின் மனநிலையை உணர்ந்து அவர்களுக்கேற்றால் போல் அவர்களின் பாதையில் சென்று அவர்களை வழிப்படுத்தும் நுட்பத்தையும் பெற்றோர்கள் பெற்றிருப்பது கட்டாயம்.

எனவே, பெற்றோர்கள் எப்பொழுதும் தமது பிள்ளைகளின் முதலாவது நண்பர்களாக இருப்பது பிள்ளைகளின் நேரிய வழிப்பாதைக்கு அவசியமாகும் என்பதால் தோளுக்கு மூத்தால் தோழன் என்பதை மறந்து தோளுக்கு மூத்த தன் மகன் தனக்குத் தோழன் என்பதாக மாற்றிக் கொள்வது ஒவ்வொரு தந்தையர்களினதும் தலையாய கடமையாகும்.

# வேலைவாய்ப்பு குறித்து விசேட கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.சர்வோதயம் உலக கனேடிய நிதி நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் Hospitality & Tourism, Automotive, Information Communication Technology, Construction,Aluminium Fitting ஆகிய திறன்சார் தொழில்களுக்கான 6 மாதகால பயிற்சியும் அதனைத் தொடர்ந்து வேலைவாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இதற்கான நிதி அனுசரணை WUSC நிறுவனம் வழங்குகிறது.

இது தொடர்பான கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு புங்குடுதீவு சர்வோதயத்திலும் எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஐயனார் கோவில் துறையூரிலும் நடைபெறும். வேலைதேடும் இளைஞர் யுவதிகள் பங்குபற்றுவதன்மூலம் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்என வேலணைப பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ)

# யோகர் சுவாமிகளின் குருபூசை விழா நாளை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சிவயோகர் அறநெறிப்பாடசாலை நிர்வாகத்தினர் நடத்தும் யோகர் சுவாமிகளின் குருபூசை விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி பழங்கிணற்றடி விநாயகர் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்லைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா. ஆனந்தலக்சுமி கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)




### இறைவன் பார்ப்பது இதயங்களை

★ செயல்கள் அனைத்தின் விளைவுகளும் எண்ணத்தைப் பொறுத்தே அமைகின்றன. மனிதன் எதை எண்ணுகின்றானோ அதற்குரிய பலன் தான் அவனுக்கு கிட்டும்.

(நூல்: புகாரி; முஸ்லிம்)

★ இறைவன் உங்கள் உருவங்களையோ உங்கள் செல்வங்களையோ பார்ப்பதில்லை. மாறாக, உங்கள் உள்ளங்களையும், செயல்களையும் தான் பார்க்கிறான்.

(நூல்: முஸ்லிம்)

இறைவன் கூறுகின்றான்:

★ நபியே!(மக்களை) எச்சரிப்பீராக: "உங்களின் நெஞ்சங்களில் இருப்பவற்றை நீங்கள் மறைத்தாலும் அல்லது அவற்றை வெளிப்படுத்தினாலும் இறைவன் அவற்றை நன்கறிகிறான்".

(திருக்குர்ஆன் 3:29)

★ இறையச்சம் உடையவர் தூய நிலை அடையும் பொருட்டு தம் செல்வத்தை வழங்குகின்றார்- கைமாறு செய்யும் அளவுக்கு எவருக்கும் அவர் நன்றிக்கடன் படவில்லை. ஆனாலும், அவர் உயர்வு மிக்க தம் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காகவே இதைச் செய்கிறார். மேலும் (அவரைக் குறித்து) அவசியம் இறைவன் திருப்தியடைவான். (திருக்குர்ஆன் 92: 18-20)

# பொருளாதார பின்னடைவுக்கு இலங்கை உள்ளாகியுள்ளது

## நிதி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார பின்னடைவுக்கு அரசாங்கத்தின் தோல்வி காரணம் அல்ல என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, இலங்கையின் பொருளாதாரம் ஏதோ ஒரு பின்னடைக்கு உள்ளாகியிருப்பதாக கூறியுள்ளார்.

பொருளாதார பின்னடைவு ஏற்பட்டிருக்குமாயின் அப்படியான சந்தர்ப்பத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாயினால் அதிகரித்தது தவறான தீர்மானம் அல்லவா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர்,

மக்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். அவ்வாறு சம்பளத்தை அதிகரிக்கும் இடத்தில் நாங்கள் இருக்கின்றோமா என்பதுதான் பிரச்சினை.

சமபளத்தை அதிகரிக்கும் நிலைமை நாட்டில் இல்லாத சூழ்நிலையில் அரசியல் போட்டிக்கான சம்பளத்தை அதிகரித்தால், அது மக்களை கஷ்டத்தில் தள்ளுவதாகும். இதுதான் நாட்டில் இன்று வரை நடந்து வந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இலங்கை இளைஞன் தமிழ்நாட்டில் கைது

தமிழ்நாடு, திருச்சியில் சிறுமியொருவரைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தி வந்த குற்றஞ்சாட்டின் பேரில இலங்கையை சேர்ந்த இளைஞனை, நேற்று முன்தினம் புதன்கிழமை அப்பிரதேச மகளிர் பொலிஸார் கைது செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த சிறுமி, தனக்கு நடந்தவை பற்றித் தாயாருக்குக் கூறியதையடுத்து இக்குற்றச் செயல் வெளிவந்துள்ளது. சிறுமியின் தாய், மகளிர் பொலிஸாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து இளைஞன்மீது மீது குற்றச்சாட்டுக்களின் பல பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்த பொலிஸார், அவரைக் கைது செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-5)

# யாழ்.இந்து மகளிர் பரிசளிப்பு விழா இன்று

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

அதிபர் திருமதி எம்.விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்வி பிரதிப் பணிப்பாளர் ஏ.அகிலதாஸ் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினராக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன நிறைவேற்று முகாமையாளர் திருமதி மிதிலா சிறிபத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** மயிலங்காடு, குப்பிளான் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** பரந்தன், முரசுமோட்டை, சீத்துக்கண்டி, கண்டாவளை, நாகேந்திரபுரம், புளியம்பொக்கணை, தர்மபுரம், விசுவமடு, தேராவில், வட்டக்கச்சி, தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதி நகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், 651ஆவது படைப் பிரிவு முகாம், பிள்ளையார் அரிசி ஆலை, இரணைமடு விமானப்படை I மற்றும் II, வட்டக்கச்சி பாம், நவஜீவனம் பாம், பாரதிபுரம், மலையாளபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** கிறிட்டிலிருந்து வவுனியா நகரம் வரை, ஓவியா விடுதி, ராணி அரிசி ஆலை, லங்கா ஆலை, செல்வராஜா ஆலை, ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## மாயை

புலனுணர்வின் மற்றும் அறிவுத்திறனின் தவறுதான் மாயை. மாயையை மாயையாக அறிந்து கொள்வதுதான் ஞானம்.

தவறான அறிந்துணரும் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டதே நம் உலக அனுபவம். ஆகவே உலக அனுபவம் மாயையாக உள்ளது. ஒவ்வொரு அனுபவமும் அதனுடைய தெளிவற்ற உணர்வை நம்முள் விட்டுச் செல்கிறது. அது அறிவை மறைக்கிறது.

அனுபவிக்கின்றவர் மட்டுமே மெய். அனுபவங்களுக்கிடையே பார்ப்பவரையும் அனுபவிக்கின்றவரையும் கவனியுங்கள்.

இக்கணமே விழித்துக்கொள்ளுங்கள். கடந்த கால அனுபவங்கள் எல்லாம் தலையிலிருந்து அடியோடு போகத் தலையை அசைத்துக் குலுக்குங்கள். நானாகவும் நீங்களாகவும் உள்ள அந்தச் சுத்த ஆன்மாவை உணருங்கள்.

கேள்வி: அனுபவத்தையும் அனுபவிக்கின்றவரையும் நீங்கள் எப்படி வித்தியாசம் கண்டறிவீர்கள்?

ஸ்ரீஸ்ரீ:நீங்கள் அனைவரும் உண்மையில் இங்குதான் இருக்கிறீர்களா? சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா? இப்போது கண்களை மூடிக்கொண்டு சொல்வதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் யார்? கேள்வி கேட்பவர் யார்? யார் அமர்ந்திருக்கிறார்கள்? யாருக்கு என்ன தேவை? யார் குழம்பியிருக்கிறார்கள் என்று பாருங்கள்? உங்களுக்கு எந்தப் பதிலும் கிடைக்காமல் போகலாம். பரவாயில்லை நல்லதுதான்.

# புத்தூர் சோமஸ்கந்தாவை வீழ்த்தி இராமலிங்க வித்தி சம்பியனாகியது



கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 19 வயதுப் பெண்கள் பிரிவில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட் கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணியை எதிர்த்து புத்தூர்சோமஸ்கந்தாகல்லூரி அணிமோதியது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி 25:12, 25:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் சம்பியனாகியது.மூன்றாமிடத்தை அத்தியார் இந்துக் கல்லூரி அணி பெற்றது. (கு)

# வடக்கின் உதைபந்தாட்ட சமர் இறுதிப் போட்டியில் பலாலி விண்மீன்



ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வட மாகாண ரீதியில் நடத்தும் வடக்கின் சமர் உதைபந்தாட்ட தொடரின் பிளேஓவ் சுற்றின் முதலாவது போட்டியில் பலாலி விண்மீன் அணி மன்னார் கில்லறி அணியுடன் மோதின.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களைப் பெற்றதனால் பெனால்டி உதை வழங்கப்பட்டது.

பெனால்டி உதை மூலம் பலாலி விண்மீன் அணி 5:4 என்ற கணக்கில் வெற்றி பெற்று வடக்கின் சமர் இறுதி ஆட்டத்திற்கு நுழைந்தது. (கு)



வலிகாம வலய பூப்பந்தாட்ட போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 19 வயதுப் பிரிவு அணி முதலாமிடத்தினைப் பெற்றுக் கொண்டது அவ்வணியினைப் படத்தில் காணலாம்.

# கோட்ட மட்ட சம்பியனாகியது கிளி/சிவபாத கலையக அணி



கிளிநொச்சி கரைச்சி பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி அண்மையில் திருவையாறு பாடசாலை மைதானத் தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் கிளிநொச்சி தேசிய பாடசாலையும் கிளி/ சிவபாத கலையக பாடசாலையும் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி தேசிய பாடசாலை 65/6 ஓட்டங்களைப் பெற்றது.

66 ஓட்டங்களை வெற்றி இலக்கெனத் துடுப்பெடுத்தாடிய கிளி/ சிவபாதகலையக அணியினர் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை எட்டினர்.கோட்ட மட்ட கிரிக்கெட் போட்டியில முதல் முறையாக கோட்ட மட்ட சம்பியனாக தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. (கு-31)

# வலிகாமம் வலய மட்ட துடுப்பாட்டப் போட்டி; பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை சம்பியன்

வலிகாமம் வலய மட்ட துடுப்பாட்டப் போட்டியில் தொடர்ச்சியாக வெற்றி பெற்று வந்த விக்ரோறியாக்கல்லூரிபெண்கள் அணியினை இவ்வருட வலய மட்ட போட்டியில் வைத்து வெற்றி கொண்டது பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை அணியினர். கடந்த வெள்ளிக்கிழமை யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற துடுப்பாட்டப் போட்டியில் முதலில் நாணயச் சுழற்சியில் வென்ற விக்டோரியாக் கல்லூரி அணியினர் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தனர்.

பண்டத்தரிப்பு பெண்கள் பந்து வீச்சில் ஈடுபட்டனர். தொடர்ச்சியாக சீரான இடைவெளிகளில்விக்கெற்றுக்கள் சரிந்தது. இறுதியில் 5 பந்து பரிமாற்ற முடிவில் 34 ஓட்டங்களைக் குவித்தது விக்ரோறியா. இதில் பவதாரணி, அபிராமி, கிருசிகாதலாஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலைஅணியினர்4:5பந்துபரிமாற்ற முடிவில்வெற்றிஇலக்கைஅடைந்தனர். இதில் நிரோசிகா-12 கலை அரசி-6, திசாயினி -6 என ஓட்டங் களைக் குவித்து வரலாற்று வெற்றியை வலய மட்டத்தில் பதிவு செய்தனர்.(கு)





வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தாச்சிப் போட்டி காளியம்பாள் வெற்றி

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனு மதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரில் இடம் பெற்ற ஆட்டமொன்றில் காளியம்பாள் ஏ அணி வெற்றி பெற்றுள்ளது.

ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

தொடரில் கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் வள்ளுவர் அணியை எதிர்த்து தாவடி காளி அம்பாள் ஏ அணி மோதிக் கொண்டது.

இதில் தாவடி காளியம்பாள் ஏ அணி 6:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (கு)

## நாமலிடம் நேற்...

தப்பட ஒப்பந்தம் குறித்து வாக்கு மூலம் அளிக்கவே அவர் நேற்று பாரிய நிதி குற்ற விசாரணைப் பிரிவில் ஆஜராகியுள்ளார். (செ-12)

## மத்திய தேசிய...

இடங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைளை மேற்கொண்டதாக மன்றில் கூறினார்கள்,

அதிகாரிகளின் இந்த கருத்தை கடுமையாக எச்சரித்த நீதவான், நான் சொன்னது பாதிக்கப்பட்ட இடங்களில் விழிப்புணர்வு செய்யுமாறு நீங்கள் கூறுவது வெளி பிரதேசங்களில் என கூறி எச்சரித்தார்.

மற்றும் இரு வாரங்களுக்கும் கழிவு எண்ணை கலந்ததாக கூறப்படும் தண்ணீர் குடிக்கலாமா? இல்லையா என்ற பதில் அறிக்கை மூலம் வழங்குமாறும் நீதவான் கட்டளையிட்டுள்ளார். இவ்வழக்கின் போது அழைப்பாணை அனுப்பியும் மன்றில் ஆஜராகாத மத்திய தேசிய நீர்வழங்கல சபையின் பொறுப்பதிகாரிக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் நலன்களை கவனிப்பதற்கு சட்டத்தரணிகளான, ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், சோ.தேவராஜா, எஸ்.பார்த்திபன், கே.சுகாஸ், க.சிவபாதம் ஜெ.ஜெயரூபன் ஆகியோர் ஆயராகியிருந்தனர். (செ-4-9)

## மாற்றங்கள் பல...

யும் வெளிநாடுகள் மத்திய அரசின் ஆலோசனையில் மட்டும் செயற்படாமல் வடக்கின் மக்கள் பிரதிநிதிகளிடம் ஆலோசித்து உதவிகளை வழங்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் பீரின் ஹஸ்சன் நேற்றைய தினம் காலை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை அவரது வாசல்தலத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் போதே வடக்கு மாகாண முதலமைச்சரால் மேற்படி விடயங்கள் தூதுவரிடம் கூறப்பட்டுள்ளது. இந்த சந்திப்பு தொடர்பில் முதலமைச்சர் மேலும் கூறுகையில்,

வடக்கு மக்களுக்கு அவுஸ்திரேலியா மூலம என்னென்ன உதவிகள் வழங்க முடியும் என்பதனை பரிசீலிக்கதான் அவர் இங்கு வந்திருந்தார். மத்திய அரசும் அவுஸ்திரேலிய அரசாங்கமும் இணைந்து நடவடிக்கை எடுப்பதனை நாங்கள் காண்கின்றோம். அதிலே மாகாண அரசிற்கு இருக்கும் பங்கு குறைவாக தான் இருக்கின்றது.

எங்கள் மக்களுக்காக உதவிகள் செய்யப்படும் போது அந்த மக்களுடைய பிரதிநிதிகளின் கருத்துக்களை கேட்டறிந்து தான் செயற்படுவது நல்லது என கூறினேன். மக்களுடைய பிரதிநிதிகளை புறக்கணித்து மத்திய அரசின் சொற்படி நடப்பது சரியாக இருக்காது என்றும் எங்களுடன் கலந்தாலோசிக்குமாறும் கூறியிருந்தேன் .

பலவிதங்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், தொடர்ந்தும் இராணுவம் இருப்பது எமக்கு பிரச்சினையாக உள்ளது. நேற்றைய தினம் யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி என்னை சிநேகிதபூர்வமாக சந்தித்திருந்தார்.

எனினும் இராணுவம் எங்களுக்கு நன்மை செய்வதாக கூறி எது செய்தாலும், தொடர்ந்து இராணுவம் வடக்கில் இருப்பதை எமது மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றது.

யுத்தம் முடிவடைந்து ஆறுவருடங்கள் ஆகிவிட்டன, ஆகவே படிப்படியாக இராணுவ பிரசன்னத்தை குறைப்பது தான் நல்லது என குறிப்பிட்டேன். மத்திய அரசுடனான உறவில், மாகாண சபைகளை புறக்கணித்து மத்திய அரசு செயற்படுவது எமக்கு வருத்தத்தை தருவதாக கூறினேன். மாகாண சபை என்று சில அதிகாரங்களை கொடுத்துவிட்டு,

அதிகாரங்களை பகிர்கின்றோம் என கூறிக் கொண்டு எம்மை கேட்காமல் செயற்படுவது ஏற்றுக்கொள்ள கூடியதல்ல, இதனை அவர் கருத்தில் எடுப்பதாக கூறினார். ஆங்கில மொழி மிகவும் அவசியமானது என குறிப்பிடப்பட்டது. பிரிட்டிஷ் கவுன்சில் எமக்கு உதவி வருவதனை கூறினேன். எமது அலுவலர்களுக்கு போதிய ஆங்கில அறிவை வழங்குவது தொடர்பில் தமது நாடு உதவுவதாக குறிபபிட்டார்.

இறுதியாக எனது கருத்துக்களை ஏற்றுக் கொண்ட தூதுவர், எங்கள் இடங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் எங்களுடன் கலந்துரையாடி நடவடிக்கைகள் எடுப்பதற்கு விரும்புவதாக குறிப்பிட்டு சென்றார்.

மேலும் வடக்கிற்கு அவுஸ்திரேலிய அரசு தொடர்ந்தும் உதவி வழங்கும் எனவும் அவர் கூறினார் என முதலமைச்சர் குறிப்பிட்டார். (செ-4)

## என்னைக் கொல்...

விடுதலைப் புலிகளின் உறுப்பினரை விடுதலை செய்யுமாறு முன்னாள படைத்தளபதியும், அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை காலை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தன்னைக் கொல்ல முயன்றதாக குற்றம் சுமத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருந்தார்.

அதுபோன்று படைத்தலைமையக குண்டுத் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மொறிஸ் என்ற விடுதலைப் புலி உறுப்பினரையும் விடுதலை செய்ய வேண்டும். அவரை விடுவிப்பது நல்லிணக்கத்துக்கான ஒரு சமிக்ஞையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு படைத் தலைமையகத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் அப்போது படைத்தளபதியாக இருந்த சரத் பொன்சேகா படுகாயங்களுடன் உயிர் தப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## இராணுவ சிப்பா...

டில் பணியாற்றிய போது இந்தச் சம்பவம் இடம பெற்றது. அவர் இராணுவத்தினரின் ஒரு குழுவுடன்காட்டுக்குள் சென்றிருந்தார். ஆனால் அது இராணுவ நடவடிக்கைக்காக அல்ல.

காட்டுக்குள் இருந்த போது ஒரு இராணுவச் சிப்பாய் தனக்கு நெஞ்சுவலிப்பதாக கூறினார். அப்போது அவரை தரையில் இழுத்து வருமாறு கோத்தாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார்.இழுத்து வந்தபோது, கோத்தபாய அவரை காலால் உதைத்தார்.

இறுதியில் அந்தச் சிப்பாய் இறந்து போனார். அது ஏனைய படையினருக்குக் கோபத்தை ஏற்படுத்தியது. அவர்கள் கோத்தாபய ராஜபக்ஷவைத் தாக்கினர்.

எனினும் பின்பு அந்தக் கொலைக்குற்றம் மூடி மறைக்கப்பட்டு விட்டது.கோத்தாபய ராஜபக்ஷ செய்த தவறுகளுக்கு என்னிடம் ஆதாரங்கள் உள்ளன என சரத் பொன்சேகா சவால் விடுத்துள்ளார். (செ-12)

## அதிக செலவில்...

தெரிவித்துள்ளார்.

வட கிழக்கில் 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் தொடர்பில் நேற்றைய தினம் வடக்கு முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்வி க்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோப்பாயில் அமைக்கப்பட்ட வீட்டு திட்டத்தை எமது பொறியியலாளர்கள் சென்று பார்வையிட்ட பின்னர் நான் நேரில் சென்று பார்வையிட்டேன். சென்ற உடனேயே அந்த சூழலுக்கு அந்த வீடு பொருத்தமற்றது என்பதனை உணர்ந்து கொண்டேன். இரண்டாவது ஒரு படி இறங்கி தான் வீட்டுக்கு செல்ல வேண்டி உள்ளது. தண்ணீர் வந்தால் எங்கே செல்லும் என்பதும் எமக்குத் தெரியவில்லை.

வீட்டிற்குள் நான் சென்றதும், வெளியில் இருப்பதனை பார்க்க மிகவும் சூடாக இருந்தது. ஆகவே உள்ளுக்குள் சூடு குறைவு, வெளியே உள்ள சூடு உள்ளே வராது என கூறும் கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். வீட்டின் சுவரின் நடுப்பகுதி வெறுமையாக தான் உள்ளது கையால் அடித்தால் வெடித்து விடும் சாத்தியமும் உள்ளது.

வெளியில் இருந்து திறக்க கூடியது போல் நட்டுக்கள் பொருத்தப்பட்டும் உள்ளன. மின்கலம் மூலம் மின்சாரம் பெறப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும் குறிப்பிட்ட அளவே அதன் மூலம் மின்சாரம் பெற முடியும் என வும் கூறப்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் எம்மோடு பேசி கலந்துரையாடாமல், மத்திய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுப்பது மனதுக்கு வேதனையாக இருக்கன்றது.

எமக்கு கஷ்டம் இருந்தால், அதனை என்ன கஷ்டம் என்ன தேவை என்பது தொடர்பில் உதவி செய்பவர் கேட்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் தாங்களே செய்வது மனவருத்தத்தை தருகின்றது. எங்களை பொறுத்தவரையில் இதில் பலத்த எதிர்ப்பு உள்ளது. வேறு ஒன்றுமே இதில் கூறமுடியாது.

எமது மக்களை பொறுத்தவரையில் சூழல், சுற்றுவட்டாரம், கலாசார பின்னணி, வீடு கட்டப்பட்டு இருக்கும் விதம், இவை யாவையுமே மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது, ஆனால் வீடே இல்லாத கஷ்டமாக இருக்கும் மக்கள் இந்த வீட்டினை கொடுத்தவுடன் ஏற்றுக்கொள்ள முடியும், கட்டில், தொலைக்காட்சி, கணினியினை சேர்த்து கொடுத்தால் அவர்கள் விரும்பத்தான் செய்வார்கள்.

ஆனால் சமுதாயத்தில் என்ன நடக்குது என்று பார்க்க வேண்டும். இவர்களுக்கு ஏன் இந்த வீடு, என சமுதாயத்தில் ஒரு ஏற்றத்தாழ்வு நிலையையும் இந்த மாதிரியான வீடுகளுக்குள்ளாக ஏற்படுத்தி கொண்டு இருக்கின்றோம். 23 இலட்சத்துக்கு இரண்டு அல்லது மூன்று வீடு கட்டக்கூடியதாக இருக்கும் போதும், நிறைய பேர் வீடில்லாமல் இருக்கும் போதும்,

அவர்களுக்கு இந்த வீடுகளை காட்டிக் கொடுக்கமுன்வராமல் தொலைக்காட்சி, கணினி கொடுத்து தான் வீடு கட்ட வேண்டும என்ற அவசியம் ஏன் என்று தெரியவில்லை. இவை எல்லாவற்றையும் முதலில் எமது மக்களுடனும், எம்முடனும் கலந்துரையாட வேண்டும். சிங்கப்பூரில் செய்கின்றார்கள் என கூறிக்கொண்டு அதனை இங்கு செய்தால், இந்த இடத்தை நாங்கள் ஒன்றும் சிங்கப்பூராக மாற்ற முடியாது.

இறுதியாக, இவை பொருத்திய வீடுகள், இவற்றில் ஏதும் பழுதுகள் ஏற்பட்டால் அவற்றை யார் மூலம் திருத்தி கொள்வது? எங்கு போய் முறையிடுவது? இது செய்து முடிக்கப்பட்டதன் பின்னர் எல்லாரும் மறந்துவிடுவோம். ஆனால் மூன்று வருடங்களின் பின்னர் பிரச்சினைகள் ஆரம்பிக்கும்,

அதன் பின்னர் தான் நாங்கள் என்ன செய்வது என்ற நிலை ஏற்படும். எங்களது பொறியியலாளர்கள் மூலம் இந்த வீடுகள் கட்டப்பட்டால் அது பழுதடையும் போது அவர்களிடமே முறையிட்டு அவற்றை சரிப்படுத்த முடியும் என்று சொல்லலாம். அரசிற்கு பணம் தேவையாக இருப்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால் இந்த பணத்தை நாம் ஒவ்வொருவரும் திரும்ப செலுத்த போகின்றோம். இது ஒன்றும் இலவசமாக தரப்படவில்லை. இது ஒரு கடன், ஆகவே நாங்கள் கடன் எடுத்து வீட்டை கட்டும் போது நிலைத்திருக்கும் வகையில் கட்டப்பட வேண்டும். சிங்கப்பூரில் இருப்பது போன்று கட்ட வேண்டிய அவசியம் இல்லை. வடக்கு மாகாண சபை இதற்கு முழுமையான எதிர்ப்பை தெரிவிக்கின்றது என்றார் அவர். (செ-4)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து மதகுடன் மோதுண்டது பிக்கப்!

## இருவர் காயம்

(பனிக்கன்குளம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை அலுவலர்கள் பயணித்துக் கொண்டிருந்த பிக்கப் ரக வாகனம் வேகக்கட்டப்பாட்டை இழந்து வீதிக்கு அருகில் இருந்த மதகு ஒன்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதன் போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை அலுவலகச் சாரதி, தொழில்நுட்பவியலாளர் ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிகப்பட்டுள்ளனர்.விபத்தின் போது குறித்த வாகனத்தின் முன்பகுதியும் பலத்த சேதமடைந்துள்ளது.



இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.45 மணியளவில் மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி வேட்டையார்முறிப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்துத் தொடர்பான விசாரணையை மன்னார் வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-2-28)

## 'எதிர்ப்புக்கள் எல்...

கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் நேற்று நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

என் மீது குற்றங்களை சுமத்தி, என் பிள்ளைகளை சிறையில் தள்ள முயற்சிக்கின்றனர். யோஷித 46 நாட்கள் சிறையில் இருந்தார்.

நான் மூன்று மாதங்கள் சிறையில் இருந்தேன். 46 நாட்கள் சிறையில் இருந்ததால் என்னவாயிற்று என்று நான் யோஷிதவை தேற்றினேன்.

என்னோடு ஒப்பிட்டால் யோஷித அரசியல்வாதி அல்ல என்பதே இங்கு வித்தியாசம். அடுத்தது நாமலை கைது செய்ய உள்ளனர்.

நாமல் மூன்று மாதம் அல்ல 6 மாதங்கள் சிறையில் இருந்தாலும் பரவாயில்லை. நான் சிறைக்கு செல்லும்போது நாமலை விட வயது அதிகமாக இருந்து, ஆனால் நாமல் இன்னும் இளைஞன். அவர் சிறையில் இருந்து விட்டு வந்தால் பரவாயில்லை.

இவற்றின் மூலம் என்னை அரசியலில் இருந்து ஒழித்து விடலாம் என்று இவர்கள் நினைத்தால் அது வெறும் கானல்நீர் மாத்திரமே.

அப்படி நடக்காது. என்னையும் எனது முழு குடும்பத்தையும் சிறையில் தள்ளினாலும் நாட்டு மக்களுக்காக நான் அரசியலில் ஈடுபடுவேன்.

1939 ஆண்டு முதல் ராஜபக்ஷவினர் தொடங்கிய இந்த அரசியல் பயணத்தை நானகைவிடப் போவதில்லை என்பதை உங்களுக்கு தெளிவாக கூறிக்கொள்கிறேன் என மகிந்த ராஜபக்ஷ தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக மகிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதிர்க்கட்சியினரின் பேரணி கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் ஆரம்பமாகிய வேளை அங்கு வந்த மகிந்த ராஜபக்ஷவுக்கு பெரும் ஆரவாரங்களுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. கடுமையான நெரிசலுக்கு மத்தியிலேயே மகிந்த ராஜபக்ஷ நிகழ்வு மேடையை அடைந்துள்ளார்.

ஜன சட்டன என்ற பெயரில் அரசாங்கத்துக்கு எதிராக நடத்தப்படும் இந்தப் பேரணியில், தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த குமாரவெல்கம, மகிந்தானந்த அளுத்கம, பசில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, பவித்ரா வன்னியாராச்சி, ரி.பி.எக்கநாயக்க, ஜி.எல்.பீரிஸ், பந்துல குணவர்த்தன, டலஸ் அழகப்பெரும, காமினி லொக்குகே, றோகித அபேகுணவர்த்தன உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் இதில் பங்கேற்றார். இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கான மகிந்த ஆதரவாளர்களும் பங்கேற்றுள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சிகளின் இந்தப் பேரணியால் ஹைட்பார்க் மைதானத்தைச் சுற்றியுள்ள நகர மண்டபம், இப்பாவல சந்தி உள்ளிட்ட இடங்களில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது. (செ-12)

# மத்திய தேசிய நீர்வழங்கல் சபை...

கரநேசனை நேற்றைய வழக்கில் ஆஜராகுமாறு பெப்ரவரி மாதம் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற வழக்கின் போது நீதவான் கட்டளையிட்ட போதிலும், நேற்றைய வழக்கிலும் அமைச்சர் ஆஜராகவில்லை, இரு தினங்களுக்கும் முன்னர் தான் வெளிநாடு செல்ல வேண்டும் என தனது சட்டத்தரணியூடாக நீதிமன்றின் முன்னனுமதி பெற்று அவர் வெளிநாடு சென்றுள்ளார். சுன்னாகம் நீர் மாசு தொடர்பான வழக்கு நேற்றையதினம நீதவான் ஏ.யூட்சன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப் பட்டது. இதன் போதே குறித்த பொறுப்பதிகாரி பிடியாணை உத்தரவினை நீதிபதி பிறப்பித்துள்ளார்.

கழிவொயில் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீராக மேற்கொள்ளப்படுவதில்லையென கழிவொயில் காரணமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த இரு பொதுச்சுகாதார வைத்திய பரிசோதகர்களால் மல்லாகம் நீதிமன்றத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த வழக்கு கடந்த பெப்ரவரி மாதம் பதினேழாம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப் பட்ட போது வடக்கு மாகாண சபைக்கு அதிகாரமில்லாத சுன்னாகம் நீர் மாசு விடயத்தில ஏன் தலையிட்டு நிபுணர் குழு ஒன்றை நியமித்து அறிக்கை வெளியிட்டது என மல்லாகம் நீதிமன்றம் கேள்வியெழுப்பி இது தொடர்பில் வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஜங்கரநேசன் அடுத்த வழக்கு தவணையில் நீதிமன்றில் தோன்றி விளக்கமளிக்கவும் மன்று உத்தரவிட்டிருந்தது. மேலும் கழிவொயிலால் பாதிக்கப்பட்ட சுன்னாகம் குடிநீர் தொடர்பில் மேற்கொள் ளப்பட்ட ஆய்வுகள் தொடர்பிலான அனைத்து அறிக்கைகளையும் அடுத்த வழக்கின் போது மன்றில் சமர்ப்பிக்குமாறும் தேசிய நீர் வழங்கல வடிகாலமைப்பு சபைக்கு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

குறித்த வழக்கு கடந்த ஐந்தாம் திகதி (05-02-2016) மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது வடமாகாண விவசாய அமைச்சர் பெ.ஐங்கரநேசன், வடமாகாண அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் ஆகியோருக்கு அழைப்பாணை விடுக்கப் பட்டிருந்ததுடன் குறித்த வழக்கு கடந்த மாதம் பதினேழாம் திகதி வரை ஒத்தி வைக்கப் பட்டிருந்தது. எனினும் அன்றையதினமும் அமைச்சர் ஆஜராகவில்லை.

வடக்கு மாகாண சபை ஏன் நிபுணர் குழுவினை நியமித்து அறிக்கை வெளியிட்டது என கேள்வியெழுப்பிய நீதவான், இவை தொடர்பில் அடுத்த வழக்கு தவணையின் போது அமைச்சர் நீதிமன்றில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில் நேற்றையதினம் தேசிய சுற்றுச்சூழல் அதிகார சபையை சேர்ந்த அதிகாரிகள் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது கழிவெண்ணெயால் பாதிக்கப்பட்ட இடங்களான வலி.வடக்கு, வலி.கிழக்கு, வலி.மேற்கு, வலி.தெற்கு ஆகிய இடங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டது. இதன் போது தாங்கள் ஊர்காவற்துறை, வேலணை, மற்றும் பல 23ஆம் பக்கம் பார்க்க....

கொழும்பு பங்குச் சந்தையின் முதலீட்டுக் கருத்தரங்கு
CSE COLOMBO STOCK EXCHANGE
சமகால முதலீட்டு வாய்ப்புகள் குறித்த கருத்தரங்கு
துறைசார் வளவாளர்களால் இன்று (18.03.2016)
பி.ப.3.00 மணிக்கு நடத்தப்படுகிறது.
ஆர்வமுடைய அனைவரும் கலந்து கொள்ளலாம்.
அனுமதி: இலவசம்
(C-4047)
இடம்: 147-2/3,கே.கே.எஸ் வீதி(சத்திரச்சந்தி), யாழ்ப்பாணம்.
மேலதிக தகவல்களுக்கு :0777822014 / 0212221455

## மரண அறிவித்தல்

### அந்தோனி பிளைஸ் (யோண்)



யாழ் குருநகரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி பிளைஸ் (யோண்) 16.03.2016 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி றெஜினா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மரியநாயகியின் அன்புக் கணவரும் ஜெனி, றொகான் (இத்தாலி), குயின் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற திரேசம்மா, சிந்தாத்துரை மற்றும் பிலிப்புவின் அன்புச் சகோதரனும் பெகினின் அன்பு மாமனும் காலஞ்சென்ற ஜோசப் மற்றும் பேபி, வசந்தி, லூர்த்தம்மா, காலஞ்சென்ற மரியதாஸ் மற்றும் பிறேமா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெனிஸ்ரன், ஆஷா, பிரவீன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் 18-03-2016 வெள்ளிக்கிழமை இன்று பிற்பகல் 2.30 மணியளவில் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற்திருப்பலியின் பின்னர் புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்

(C-4042)

கணனிகள் மலிவு விற்பனை

Hp 6000pro



Pro Core 2 Due 3.0Ghz
Ram DDR iii 4Gb
H.Disk 250Gb
DVD RW
Monitor Hp19"
Keyboard
Mouse
24,999/-
Warranty 06 Months

Hp Tower D8100



Pro Core i5 3.0Ghz
Ram DDR iii 4Gb
H.Disk 250Gb
DVD RW
Hp Monitor 19"
keyboard
Mouse
44999/-
Warranty 06 Months

Call Mico System Manipay
077 2487082, 021 2256165
(C-4045)

**மகேஸ்வரி நிதியம் (தொண்டு நிறுவனம்) ஊடாக மணல் விநியோக சேவையில் ஈடுபட்ட பாரவூர்தி உரிமையாளர்கள் கவனத்திற்கு**

மணல் விநியோக சேவையின்போது விநியோக தடவை ஒன்றிற்கு ரூபா.150 வீதம் வைப்புப் பணமாக பெறப்பட்ட தொகையினை மகேஸ்வரி நிதியமானது தற்போது மணல் விநியோகத்தில் ஈடுபடாத காரணத்தினால் மகேஸ்வரி நிதியத்தில் இப் பணத்தினை மீள பெற்றுக் கொள்ளமுடியும் என தெரிவித்துக்கொள்கின்றோம்.

*(பாரவூர்திகள், பயனாளிகளுக்கு மணலினை சீராகவும் சரியான அளவிலும் விநியோகித்தல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக வைக்கப்பட்ட வைப்புப் பணம்)*

மணல் விநியோக சேவையில் தாங்கள் ஈடுபட்டதற்கு உரிய ஆவணங்களுடன் குறித்த பாரவூர்தியின் உரிமையாளர்கள் நேரடியாக மகேஸ்வரி நிதியத்தின் அலுவலகத்திற்கு வார நாட்களில் காலை 10.00 மணி முதல் 12.00 மணிவரை வருகை தந்து, தமது வைப்பினை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

த.றஜீவ்
இணைப்பாளர்
மகேஸ்வரி நிதியம்
இல.70 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(3929)



வீட்டில் இருந்தவாறே மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ள

ஓர் அரிய சந்தர்ப்பம்...

இலங்கை அரசின் சுற்றுலா அபிவிருத்தி சபையினால் உருவாக்கப்பட்ட சுற்றுலா வளர்ச்சி திட்டத்தில் இணைந்து சுற்றுலாப் பயணிகளை உங்கள் இல்லங்களில் தங்கவைத்து உணவளித்து உபசரிப்பதன் மூலம் மேலதிக வருமானம் பெற்றுக் கொள்ளும் ஓர் அரிய சந்தர்ப்பத்தினை உங்களுக்கு வழங்குகின்றோம்.
இத்திட்டம் தொடர்பான
( Home Stay Concept )
இலவசக் கருத்தரங்கில் கலந்து கொண்டு முழு விளக்கங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

காலம் : 20.03.2016 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 10.00 மணி
இடம் : யாழ் பாடி,
49 -51 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P : 021 222 6868
(3928)
ஒழுங்கமைப்பு - அசோக்கவாடிக்கா

## ஜீ-7 மாநாட்டிற்கு...

யூன் மாதம் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்கவுள்ளதாக பிரதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேறறு கொழும்பு அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ஜீ-7 மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் சஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார். (செ-12)

## அதிக செலவில்...

சந்தேகத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,

சிங்கப்பூரில் அமைந்துள்ள வீடுகளை இங்கு கட்டுவதானால் இந்த இடத்தை நாங்கள் ஒன்றும் சிங்கப்பூர் போன்று மாற்றப் போவதில்லை, வடக்கு மாகாண சபை இதற்கு கடும் எதிர்ப்பையே தெரிவிக்கும், தெரிவித்தும் வருகின்றது என 23ஆம் பக்கம் பார்க்க....

வெட் கிளுவை, முட்கிளுவை, கதிகால்கள், விற்பனைக்குண்டு
தொடர்பு :
077 4730722
077 1040992
(3931)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்- இல.02

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

பகுதி-II

தமிழ்க் கல்விக் கழகம் நேரம்:- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக?

முன்பெல்லாம் சின்னஞ்சிறிய வயிற்றுக்கு உணவாகத் தானியங்களையும் தேடிச் செல்வேன். தனியாக அல்ல கூட்டமாக. பரந்த வயல்வெளிகள் எமது நிறத்தைப் போலவே பசுமையாகக் காட்சியளிக்கும். கதிர் சுமந்த நெல்லினங்களும் எம்மைத் தலையசைத்து வரவேற்கும். பொன்னிறமாகக் காட்சி தரும். கதிர்களில் எதைச் சுவைப்பது எனத் தெரியாது. அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கொறித்துத் திரிவோம். நாம் கூட்டமாகச் சென்று அட்டகாசம் புரிவதனால் மனிதர் எம்மைக் கண்டதும் விரட்டுவார்கள்.

1.பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் பறவை எது?

2.இவை உணவாக உட்கொள்வது எதனை?

3.பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் உவமைத் தொடரினை எழுதுக?

4.இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் அடுக்கிடுக்குத் தொடரை எழுதுக?

5.மனிதர்கள் எதனால் இவற்றினை விரட்டுகிறார்கள்?

6.காட்சியளிக்கும் என்ற சொல்லினைப் பிரித்து எழுதுக?

7.இடப்பெயர் ஒன்றினைத் தெரிந்து எழுதுக?

8.வயிறு என்பதன் ஒத்தசொல்லை எழுதுக?

(1×8= 8 புள்ளிகள்)

02. பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவாக்கத்தினை எழுதுக

1.இ.மி.ச.-

2.மு.ப. -

03.சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. 1)பயிச்சி | 2)பயிற்ச்சி | 3)பயிற்சி | 4)பயிர்ச்சி |
| 2.1)பல்கலைக்கழகம் | 2)பல்கனைக்களகம் | 3)பள்கலைக்களகம் | 4)பழ்கனைக்கழகம் |
| 3.1)முன்நூறு | 2)முந்நூறு | 3)முண்நூறு | 4)முன்னூறு |

(1×3=3 புள்ளிகள்)

04.பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக

1.பாதுகாத்தல்/ நாம்/ உடலை/ எமது/ வேண்டும்/ வராமல்/ நோய்

2.ஆயத்தமானான்/ வைக்க/ அரசன்/ இறைச்சியை/ வெட்டி

(1×2=2 புள்ளிகள்)

05.வெற்றிடத்தைப் பூர்த்தி செய்க

1.மயில் அகவும் என்பது போல புறா.........................................................

2.தென்னை-குரும்பை என்பது போல பனை ...........................................

3.யானை- களிறு என்பது போல மான் .......................................................

(1×3=3 புள்ளிகள்)

06.பின்வரும் சொற்களில் வந்துள்ள உயிர்க்குறிகளை எழுதுக

1.கோழி- ......................................

2.பூக்கள்-......................................

(1×2=2 புள்ளிகள்)

07.பொருத்தமான சொல்லுடன் இணையுங்கள்

| | |
|---|---|
| 1.சினைப்பெயர் | நீங்கள் |
| 2.ஐம்பதாம் ஆண்டில் கொண்டாடப்படுவது | இரவும் பகலும் |
| 3.இணைமொழி | கண்கள் |
| 4.முன்னிலை பன்மைச் சொல் | நாளங்காடி |
| 5.காலையில் கூடும் சந்தை | பொன்விழா |

(1×5=5 புள்ளிகள்)

08.பின்வரும் படங்களுக்குரிய ஆங்கில சொல்லை எழுதுக

 ____________  ____________  ____________

(1×3=3 புள்ளிகள்)

09.பின்வரும் சிங்கள வாக்கியங்களைத் தமிழில் எழுதுக

1.அத் இஹல (ட்) ட ஒசவன்ன..........................................

2.தே (B) பொன்ன..........................................

3.இர பயனவா ..........................................

(1×3=3 புள்ளிகள்)

10. பின்வரும் ஆங்கிலச் சொற்களை தமிழில் எழுதுக

1.BUS STAND..........................................

2.PEACOCK:..........................................

3.RAIN:..........................................

(1×3=3 புள்ளிகள்)

11. "எனது அழகான பூந்தோட்டம்" என்னும் தலைப்பில் ஐந்து சொற்களுக்கு குறையாத மூன்று வாக்கியங்களை எழுதுக.

..........................................

..........................................

..........................................

(2×3=6 புள்ளிகள்)

12 தொடக்கம் 41 வரையான வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக

12.  சூரிய நமஸ்காரப் படிநிலை குறித்து நிற்பது

1) 4ஆம் படிநிலை 2) 3 ஆம் படிநிலை 3)9 ஆம் படிநிலை 4) 2 ஆம்படிநிலை

13.  இம்முகம் குறித்து நிற்பது

1.மகிழ்ச்சி 2.கோபம் 3.சாதாரணம் 4.ஏக்கம்

14. பின்வரும் பூக்களில் மூன்று இதழ்களைக் கொண்ட பூ

1.நாகமலர் 2.மல்லிகை 3.தென்னை 4.வெட்சி

15.அசுத்த நீரினைப் பருகுவதனால் ஏற்படக்கூடி நோய்

1.பிளேக் 2.பன்றிக்காய்ச்சல் 3.மலேரியா 4.செங்கன்மாரி

16.விற்றமின் சி குறைபாட்டினால் ஏற்படக்கூடிய நோய்

1.மாலைக்கண் 2.ஸ்கேவி 3.பெரிபெரி 4.மலட்டுத்தன்மை

17.  இவ்விளையாட்டில் ஒரு குழுவில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை

1) 6 பேர் 2) 16 பேர் 3) 12 பேர் 4) 11 பேர்

18.உணவாகப் பயன்படும் பூவகை அல்லாதது

1.வேம்பு 2.அலரி 3.முருங்கை 4.அகத்தி

19.பனிக்கட்டி ஒன்றை நீர் நிறைந்த பாத்திரத்தில் இடும்போது அவதானிக்கக்கூடியது

1.தாழும் 2.மிதக்கும் 3.வெப்பம் வெளிவிடும் 4.உடையும்

20.பின்வருவனவற்றுள் அலங்காரத் தையல் வகையினுள் அடங்குவது

1.சிறுநூலோடி 2.சங்கிலித் தையல் 3.விஸ்பம் 4.பெருநூலோடி

21.இலங்கையில் அதிகளவில் ரம்புட்டான் பயிரிடப்படும் இடம்

1.களுத்துறை 2.யாழ்ப்பாணம் 3.மல்வானை 4.கம்பஹா

22.மிகப்பெரிய மாகாணமாக கருதப்படுவது

1.வடமாகாணம் 2.வடமத்திய மாகாணம் 3.மேல்மாகாணம் 4.கிழக்கு மாகாணம்

23.தேசப்படத்தில் புகையிரதப் பாதையை குறிக்கப் பயன்படும் நிறம்

1.சிவப்பு 2.கறுப்பு 3.மஞ்சள் 4.நீலம்

24.மிக உயரமாக வளரக்கூடிய புல் இனம்

1.அறுகு 2.கோரை 3.மூங்கில் 4.குப்பமேனி

25. இக்குறியீட்டினால் குறிப்பிடப்படும் சேவை

1.இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 2.இலங்கை பரீட்சை திணைக்களம் 3.இலங்கை தபாற் சேவை 4.இலங்கை மின்சார சேவை

26.தரமான தேயிலையை நீரில் இட்டால் தோன்றும் நிறம்

1.மஞ்சள் 2.கபிலம் 3.இளமஞ்சள் 4.சிவப்பு

27.  பின்வரும் உடுத்தொகுதி குறிப்பது

1.சிம்மம் 2.ஓராயன் 3.ரிஷபம் 4.விருச்சிகம்

28.தேசிய இலட்சினையில் மலரிதழ் குறிப்பது

1.தர்மமும் நீதியும் 2.சௌபாக்கியம் 3.தூய்மை 4.உலக நிலைத்திருப்பு

29.காசுக்கட்டளை மாற்றுவதற்கு செல்லவேண்டிய இடம்

1.வங்கி 2.தபாற்கந்தோர் 3.பாடசாலை 4.கடை

30.  உருவில் காட்டப்பட்டுள்ள அலகிற்குரிய பறவை

1.மரங்கொத்தி 2.கொக்கு 3.புறா 4.காகம்

31. வயல்வேலைகளில் நெல் தூற்றப் பயன்படும் சுளகினை அழைப்பது

1.குல்லம் 2.பெரிவாயன் 3.பொலி 4.சின்னவாயன்

32.இலவச சீருடை வழங்குவதனை ஆரம்பித்து வைத்தவர்

1.C.W.W.கன்னங்கரா 2.J.R.ஜெயவர்த்தன 3.R.பிரேமதாச 4.மைத்திரிபால சிறிசேன

33.பழப்பாகு செய்வதற்கு பயன்படாத பழவகை

1.மாம்பழம் 2.தக்காளி 3.விளாம்பழம் 4.வாழைப்பழம்

34.பம்பரகந்த காணப்படும் மாவட்டம்

1.பதுளை 2.மொனராகலை 3.கொழும்பு 4.பொலநறுவை

35.சூரிய கிரகணம் ஏற்படும் காலப்பகுதி

1.பௌர்ணமி 2.பஞ்சமி 3.அமாவாசை 4.தசமி

36.மூலவர்ணங்களுள் அடங்காத வர்ணமாக விளங்குவது

1.நீலம் 2.வெள்ளை 3.சிவப்பு 4.மஞ்சள்

37.வித்துக்களைப் பயன்படுத்தி செய்யப்படும் ஆக்கம்

1.கொலாஜ் 2.ஒரிகாமி 3.அச்சுப்பதிப்பு 4.அல்பனா

38.  பின்வரும் தாவரத்தின் பெயர்

1.மஞ்சள் 2.இஞ்சி 3.கற்றாழை 4.அறுகு

39.2016 இல் ஒலிம்பிக் நடைபெறவுள்ள நாடு

1.பிரேசில் 2.அவுஸ்திரேலியா 3.சீனா 4.அமெரிக்கா

40.பின்வரும் பறவைகளுள் சிவப்பு நிற கண்களைக் கொண்ட பறவை


1.கொக்கு 2.கோழி 3.பருந்து 4.செண்பகம்

41. | N | S | | N | S | இருகாந்த துண்டுகளையும் அருகருகே கொண்டு செல்லும்போது ஏற்படுவது

1.தள்ளும் 2.கவரும் 3.மாற்றம் நிகழாது 4.கூறமுடியாது

**பின்வரும் கணிதப் பிரசினங்களைத் தீர்க்குக.**

42.இருபத்தேழாயிரத்து எழுநூற்று எட்டு என்பதனை எண்ணில் எழுதுக.......................................

43.  உருவில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் எழுதுக.......................

44.20:35 மணித்தியாலம் என்பதனைச் சாதாரண நேரத்தில் எழுதுக. .......................................

45.இரண்டு மின்கம்பங்களுக்கிடையிலான தூரம் 8m எனின் 12 மின் கம்பங்களுக்கிடையிலான தூரம் எவ்வளவு?........

46.சதுரவடிவமான பூந்தோட்டம் ஒன்றின் ஒரு பக்க நீளம் 15m எனின் பூந்தோட்டத்தின் சுற்றளவு யாது?....................

47.8732 என்ற எண்ணின் இலக்கம் 7 இன் பெறுமானம் யாது?.......................................

48.ஒரு குளிர்பானப்போத்தல் 3 பேரை உபசரிக்கப்போதுமானது எனின் 20 பேரை உபசரிக்க தேவையான குளிர்பானப் போத்தல்களின் எண்ணிக்கை யாது?.......................................

49.3 மாம்பழங்களின் விலை ரூபா 135.00 எனின் 7 மாம்பழங்களின் விலையாது?.......................................

50.  1.உருவில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?.......................................

2.கூர்கோணங்களின் எண்ணிக்கை யாது?.......................................


51. 3Kg 500g தேயிலையை 250g கொண்ட எத்தனை பைக்கற்றுக்களாக மாற்றமுடியும்?.......................................

52.பங்குனி மாதம் 4 ஆவது வியாழக்கிழமை 24 ஆம் திகதி எனின் முதலாவது வியாழக்கிழமை என்ன திகதியில் வரும்?

53.ஒரு குவியலில் 360 தேங்காய்கள் உள்ளன. அவற்றில் 4/6 பங்கு விற்கப்பட்டால் எஞ்சிய தேங்காய்களின்

54.210 நிமிடங்களை மணித்தியாலம் நிமிடங்களாக எழுதுக.

.......................மணித்தியால்லம்.......................................நிமிடம்

55.  1.உருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக எழுதுக.......................................

2.நிழற்றப்படாத பகுதியை தசமத்தில் எழுதுக.......................................

56. ஒரு குழுவில் 8 மாணவர்கள் உள்ளனர். அவ்வாறான 9 குழுவில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?.........

(15×2=30புள்ளிகள்)

◆ ◆ ◆

தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்

யோகராசா -துஷ்யந்தன் (இயக்குநர்)

கு.மோகன்ராஜ் (ISA வலயக்கல்விப் பணிமனை கொத்மலை, நுவரெலியா)

றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)

K.L.M.நபீல் (ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, அம்பாந்தோட்டை)

அ.நிமலகாந்தன் (யா/இணுவில் மத்திய கல்லூரி)

I.முபாரக் (பொ. அல்றிபாய் முஸ்லிம் மகா வித்தியாலயம், பொலநறுவை)

★ ★ ★

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் நாளைய வலம்புரியில் (19.03.2016) பிரசுரமாகும்.